www.padippakam.com

# ஈழம்:
# தேவை - ஒரு நேர்மையான மீளாய்வு!



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஈழம்:
# தேவை -
# ஒரு நேர்மையான மீளாய்வு

புதிய ஜனநாயகம் வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com


- *வெளியீடு :*

*புதிய ஜனநாயகம்,*
*110, இரண்டாம் தளம்,*
*63, என்.எஸ்.கே. சாலை,*
*கோடம்பாக்கம், சென்னை - 600 024.*
*தொலைபேசி: 94446 32561*

- *முதற்பதிப்பு :*

*மே - 2009*

- *இரண்டாம் பதிப்பு :*

*ஜூன் - 2009*

- *அச்சு :*

*எழில் பிரிண்ட்ஸ், சென்னை - 24,*
*தொலைபேசி: 94457 67603*

நூல் கிடைக்குமிடங்கள் : புதிய கலாச்சாரம்
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2–வது நிழற்சாலை,
[15–வது தெரு அருகில்],
அசோக் நகர்,
சென்னை – 600 083.
தொலைபேசி: 044-23718706

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு,
எல்லீசு சாலை,
சென்னை – 600 002.
தொலைபேசி: 044-28412367

விலை : ரூ. **30.00**


படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

நவம்பர் இரண்டாவது வாரம், 2008-ஆம் ஆண்டு ''புதிய ஜனநாயகம்'' - மார்க்சிய-லெனினிய அரசியல் ஏட்டின் சார்பாக நடந்த ஓர் அரங்கக் கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரை, "ஈழம்: தேவை- ஒரு நேர்மையான மீளாய்வு'' என்ற சிறு நூலாக வெளியிடப்படுகிறது. ஈழத்தின் கிழக்கு மாகாணத்தை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிட மிருந்து கைப்பற்றிய இலங்கை சிங்கள இனவெறி இராணுவம், வடக்கிலுள்ள வன்னியின் மீது தாக்குதலைத் தொடுத்து, புலிகளின் தலைமையகமான கிளிநொச்சியைச் சுற்றி வளைத்திருந்த சமயத்தில் இந்த அரங்கக் கூட்டம் நடந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவும் சிங்கள இனவெறி இராணுவத்தின் தாக்குதலை முறிய டிக்கவும் வேண்டுமானால், இராணுவ ரீதியில் மட்டுமல்ல, அரசியல் ரீதியிலும் தமது கடந்த கால நிலைப்பாடுகளையும் நடைமுறைகளை யும் மீளாய்வு செய்து, தக்க படிப்பினைகளைத் தொகுக்க வேண்டிய கட்டாயத்தில் அப்போது இருந்தனர். குறைந்தது இராணுவ ரீதியில் தமது செயல்தந்திரங்களை மாற்றிக் கொண்டு, கிரமமான படைகளைக் களைந்துவிட்டு தற்காப்பு கொரில்லா முறைக்குத் திரும்ப வேண்டிய கட்டாயத்திலிருந்தனர்.

ஆனால், அத்தகைய நேர்மையான அரசியல், இராணுவ ரீதியி லான மீளாய்வு செய்யத் துணியாத புலிகள் தொடர்ந்து பிரமைகளில் மூழ்கிப் போயினர். இறுதியில், பல ஆயிரம் ஈழத் தமிழர்களோடு விடுதலைப் புலிகளின் தலைமையையும் சிங்கள இனவெறி இராணு வம் கொன்று குவித்தது. உலக வரலாற்றில் மிகக் கொடூரமாக நிகழ்ந்த இனவெறிப் படுகொலை நிகழ்வுகளில் ஒன்றாக இது அமைந்தது.

- ஆசிரியர் குழு,
புதிய ஜனநாயகம்.

படிப்பகம்

www.padippakam.com

# இரண்டாம் பதிப்பு முன்னுரை

மே மாதம், 2009-ஆம் ஆண்டு இறுதியில் வெளியிடப்பட்ட ''ஈழம்: தேவை - ஒரு நேர்மையான மீளாய்வு'' என்ற இச் சிறு நூலின் இரண்டாம்பதிப்பு அடுத்த மாதத்திலேயே வெளி வருகிறது. 2008-ஆம் ஆண்டு நவம்பர் இரண்டாம் வாரம் நடந்த அரங் கக் கூட்டத்தில் ஆற்றப்பட்டு, ஒலிக் குறுந்தகட்டில் பதிவு செய்யப் பட்டிருந்த உரை எழுத்து வடிவாக்கப்பட்டு முதற்பதிப்பு வெளியி டப்பட்டது.

முதற்பதிப்பில் சில விவரப் பிழைகள் ஏற்பட்டுள்ளதைத் தோழர் கள் சுட்டிக் காட்டினர். உரையாளரின் கவனக் குறைவால் ஏற்பட்ட அத்தவறுகள் இரண்டாம் பதிப்பில் திருத்தப்பட்டிருக்கின்றன. பேச்சு நடையில் இருந்து எழுத்து நடைக்கு மாற்றிய பொழுது ஏற்பட்டிருந்த சில பிழைகளும் திருத்தப்பட்டு செழுமைப்படுத்தப்பட்டிருக்கிறது.

- ஆசிரியர் குழு,
புதிய ஜனநாயகம்.

படிப்பகம்

www.padippakam.com

# ஈழம்: தேவை - ஒரு நேர்மையானமீளாய்வு

இப்பொழுது தமிழகம் முழுவதும் ஈழத்தில் நடைபெறும் போருக்கும், ஈழத் தமிழர்களை சிங்கள பேரினவாத ராணுவம் கொன்று குவிப்பதற்கும் எதிரான எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பல்வேறு வகையில் தமிழக மக்கள் போராடி வருகிறார்கள். குறிப்பாக, கடந்த மாதங்களில் தமிழகத்தைச் சேர்ந்த ஓட்டுக் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களுக்குள் கூட்டணி அமைத்துக் கொண்டு பல போராட்டங்களை நடத்தி வருகின்றன.

நம்மில் பலரும் ஈழப் போர் தொடங்கிய பிறகு பிறந்தவர்கள், ஈழப் போர் குறித்த செய்திகளைக் கேட்டிருந்தாலும், அதன் அரசியலை முழுமையாகப் புரிந்து கொண்டவர்கள் அல்ல. தற்போது தமிழகத்தில் நாம் காணும் ஈழ மக்கள் ஆதரவு எழுச்சி என்பது இரண்டாவது முறை நடக்கும் எழுச்சி. 1983-இல் தமிழகம் முழுவதும் இதை விட மிகப் பெரிய அளவில் ஈழ மக்களுக்கு ஆதரவாகப் பெரியதொரு எழுச்சி இருந்தது. தமிழகம் முழுவதும் பல ஊர்களில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், அன்றைய சிங்கள இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே கொடும்பாவி எரிப்பு என ஈழ விடுதலை ஆதரவு இயக்கங்கள் நடந்தன. பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பும் தெருவில் இறங்கிப் போராடினார்கள். அதன் பிறகு அது போன்ற மிகப் பெரிய போராட்டத்தைத் தமிழகம் கண்டதில்லை.



படிப்பகம்

ஆனால், பல்வேறு காரணங்களால் அத்தகைய எழுச்சி சிறுகச் சிறுக குறைந்தது. குறிப்பாக, ராஜீவ் கொலைக்குப் பிறகு, பார்ப்பன ஆதிக்கச் செய்தி ஊடகங்களின் தொடர்ச்சியான ஈழ எதிர்ப்புப் பிரச்சாரத்தால் இந்த எழுச்சி மங்கி, கடைசியில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் பேசுவதற்கே மக்கள் அஞ்சும் சூழல் நிலவியது. அதற்குப் பிறகு இப்பொழுது இரண்டாவது முறையாக ஈழ விடுதலை ஆதரவு எழுச்சி தமிழகத்தில் எழுந்து உள்ளது. இந்த எழுச்சி பலரது தலைமையில் நடந்து கொண்டிருக்கிறது. ஈழ விடுதலையை எதிர்த்து நிற்கக்கூடிய காங்கிரசு கட்சிக்காரர்கள் கூட கருணாநிதியைச் சந்தித்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நன்கொடை கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு ஈழத் தமிழர் விடுதலைக்கு எதிரான சக்திகளும் கூட ஏதோ ஒரு வகையிலே ஈழ மக்களுக்கு ஆதரவு தெரிவிப்பது போல நாடகம் ஆட வேண்டிய ஒரு நிர்பந்தத்திற்கு இப்பொழுது உள்ளாகியிருக்கி றார்கள். ஆனால், இது 1983-லே நடந்த எழுச்சியுடன் ஒப்பிடும் போது மிக மிகச் சிறிய அளவில் நடக்கக்கூடிய ஆதரவு உணர்வலை என்றுதான் சொல்லலாம்.

இன்றைய புதிய தலைமுறையினருக்கு ஈழம் பற்றித் தெரியாத பல செய்திகள் இருக்கின்றன. ஈழத்தில் என்ன நடந்தது? எப்படி ஈழ விடுதலைப் போர் தொடங்கியது? அதன் பின்னணி என்ன? தமிழகத்தில் இவ்வளவு பெரிய எழுச்சி ஏற்படக்கூடிய அளவுக்கு அப்படி என்னதான் காரணமாக அமைந்தது? இவையெல்லாம் அப்பொழுது செய்திகளாக மட்டுமே இருந்தன. இப்பொழுது வரலாறாக மாறியிருக்கிறது.

1983-இல் ஈழத் தமிழர்கள் பெருளவு இலங்கையில் படுகொலை செய்யப்படுகிறார்கள்; 'தமிழன் கறி இங்கு விற்கப்படும்' என்று பெயர்ப் பலகை எழுதி வைக்கும் அளவுக்கு சிங்கள இனவெறியாட்டம் அங்கே நடந்திருக்கிறது. அதேபோல இப்பொழுதும் ஈழத் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். இப்படி ஈழத் தமிழர்கள் கொல்லப்படுவது என்பது இலங்கை வரலாற்றில் முதல் முறையல்ல. 1956-லேயே ஈழத்தில் மிகப் பெருமளவுக்கு தமிழர்களுக்கு எதிராகக் கலவரம் நடந்துள்ளது. சிங்களப் பெரும்பான்மையினர் தமிழர்களைக் கண்ட இடங்களிலெல்லாம் உயிரோடு எரித்துக் கொன்றனர். இதில் பாதிக்கப்பட்டவர்கள் வீடற்றவர்களாகக் கொழும்பு நகருக்கு விரட்டியடிக்கப்பட்டனர்.

www.padippakam.com

அதற்குப் பிறகு 1958-ல் ஒருமுறையும், மீண்டும் 1972-ல் ஒருமுறையும் கலவரங்கள் நடந்திருக்கின்றன. பிறகு, 1977-ல் நடந்திருக்கிறது, 1983-ல் நடந்திருக்கிறது. தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் 1983 வரையில் நடந்த இப்படிப்பட்ட மிகப் பெரும் கலவரங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஆகவே, இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் இனவெறிப் படுகொலை புதியதல்ல. குறிப்பிட்ட கால இடைவெளிவிட்டு, இடைவெளிவிட்டுப் படுகொலைகள் தொடர்ந்து நடந்திருக்கின்றன. தமிழர்களுடைய உரிமை பறிக்கப்படும்போது, தமிழர்கள் அதற்கு எதிராகத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க முயன்ற பொழுதெல்லாம் அவர்கள் ஈவிரக்கமற்ற முறைகளில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இப்பொழுது கருணாநிதி உட்பட பலரும் ஈழப் பிரச்சினையில் அமைதிப் பேச்சுவார்த்தை பற்றி வலியுறுத்துவது போல பலரும் வற் புத்தியுள்ளனர். இந்த அமைதிப் பேச்சுவார்த்தை கூட ஈழப் பிரச்சினையில் புதிது அல்ல.

1956 இனக் கலவரத்துக்குச் சற்று முன்பும், பின்பும் அமைதிப் பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. டட்லி சேனநாயகா, செல்வா ஒப்பந்தம் என்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு ஈழத் தமிழர்களுக்குச் சில உரிமைகள் வழங்குவதாக இலங்கை சிங்கள அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. இப்படி 1956-லிருந்து பலமுறை அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன, அதிகாரப் பகிர்வுகள் பற்றி பேசப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, 1983-இல் மிகப்பெரும் அளவில் இலங்கையில் நடந்த இனப் படுகொலைகளைத் தொடர்ந்து, 1985-இல் ராஜீவ்காந்தி யினுடைய முன்முயற்சியினால் திம்புப் பேச்சுவார்த்தை நடந்திருக்கிறது. ஈழ விடுதலைக்காகப் போரிட்ட பல்வேறு போரா ளிக் குழுக்களும் ஒன்று சேர்ந்து திம்புப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்கள். அந்த திம்புப் பேச்சுவார்த்தையில் பிரபாகரன், டெலோ சிறீசபாரத்தினம், ஈராஸ் பாலகுமாரன், ஈபிஆர்எல்எப் பத்மநாபன் இவர்கள் நான்கு பேரும் ஒன்று சேர்ந்து, தேர்தல் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மேடைகளிலே ஒன்றாக நின்று கைகளை உயர்த்தி தூக்கி, ''நாங்களெல்லாம் ஒன்றுபட்டு



படிப்பகம்

www.padippakam.com

நிற்கிறோம்'' என்று சபதம் எடுத்துக் கொள்வார்களே அதைப்போல, ஈழத் தமிழர்களுடைய விடுதலைக்காக ஒன்றுபட்டுக் கை உயர்த்தி முழக்கமிட்டார்கள். அந்த திம்புப் பேச்சுவார்த்தையில் ஈழப் போராளி அமைப்புகள் சேர்ந்து, ஒற்றுமையாகச் சில கோரிக்கைகளை முன் வைத்து, அந்த கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். ஆனால், அந்த கோரிக்கைகள் அப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்னால் தூக்கியெறியப்பட்டன.

1986 - இல் பெங்களூரில் பேச்சு வார்த்தை முறிவு, புலிகளிடம் ஆயுதப் பறிப்பு, புலிகள் சிறைவைப்பு, பிரபாகரன் உண்ணாவிரதம் மீண்டும் இந்திய அரசின் நிர்ப்பந்தம், பேச்சு வார்த்தை என்று நீண்டது.

அதற்குப் பிறகு, 1987-இல் ஜெயவர்த்தனே-ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தை ஒட்டி அமைதிப் பேச்சுவார்த்தை நடந்தது. 1994-இல் சந்திரிகா குமாரதுங்கா ஆட்சிக்கு வந்த பிறகு விடுதலைப் புலிகளுக்கும், சந்திரிகாவுக்கும் இடையில் ஒரு சமாதானப் பேச்சுவார்த்தை நடந்து, போர் நிறுத்தம் செய்யப்பட்டது. ஆனால், அதுவும் முறிந்து போனது. அதற்கு பிறகு ரணில் விக்கிரம சிங்கே பிரதமரானார். அப்பொழுதும் மீண்டும் 2000-இல் போர்நிறுத்தம், அமைதிப் பேச்சுவார்த்தை, அதற்கான முயற்சிகள் நடந்தன.

ஆகவே, இனப் படுகொலை என்பதும் இலங்கையில் புதிதில்லை; பலமுறை தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது; தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கிறார்கள். அவற்றைத் தொடர்ந்து அமைதிப் பேச்சுவார்த்தைகள் என்பதும் பலமுறை நடந்திருக்கிறது. ஆனால், இந்தப் பேச்சுவார்த்தைகளும், அமைதி முயற்சிகளும், போர் நிறுத்தங்களும் எதுவுமே வெற்றிபெற முடியவில்லை.

முன்னர் சொன்னது போல ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் மக்கள் எழுச்சி இயக்கம் என்பதும், மக்கள் உணர்வலைகள் கிளம்புவதும் புதிதல்ல; ஈழத் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதும் புதிதல்ல; போர் நிறுத்தம், அமைதிப் பேச்சுவார்த்தை என்பதும் புதிதல்ல. பலருக்குக் கடந்த காலத்தில் நடந்த இந்த வரலாறுகள் எல்லாம் புதிய விசயங்களாக இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், இவையெல்லாம் வரலாற்றில் நடக்காததைப் போல, புதிதாக மறுபடியும், ஈழப் பிரச்சினையிலே போர்நிறுத்தம் வேண்டும், அமைதிப் பேச்சுவார்த்தை வேண்டும், அரசியல் தீர்வு காணப்பட வேண்டும், அதிகாரப் பகிர்வு வேண்டும், ராணுவ ரீதியாக இந்த பிரச்சினைகள் எதற்கும் தீர்வு காண முடியாது என்று கருணாநிதி முதற்கொண்டு பலரும் பேசுகிறார்கள்.

**இலங்கையில் நிலவும் இனச்சிக்கல்**
**சில உண்மைகள்:**

ஈழப் பிரச்சினையில் எது அடிப்படை, எதற்குத் தீர்வு காணப்பட வேண்டும், உண்மையில் தீர்வு காணும் முயற்சியில் இப்பொழுது அக்கறையுடன் யார் யார் ஈடுபடுகிறார்கள், எப்படி ஈடுபடுகிறார்கள், இது வரையிலான முயற்சிகளெல்லாம் ஏன் தோற்றுப் போயின என்பதற்கு ஒரு வரலாறு இப்படி இருக்கிறது. ஆனால் இப்பொழுது ஈழ நிலைமைகள் என்ன என்பதைப் பற்றி பல்வேறு பிரிவினரும், ஆளுக்கொரு விளக்கங்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ஈழப் பிரச்சினை எப்படி ஏற்பட்டது? ஈழத் தமிழர்கள் என்னதான் கோருகிறார்கள்? அந்த கோரிக்கையிலே நியாயம் இருக்கிறதா? இல்லையா?

''ஈழத் தமிழர்கள் எல்லாம் கள்ளத் தோணிகள்'' என்று சிங்கள வெறியர்கள் தொடர்ந்து கூறி வந்திருக்கின்றனர். அதாவது, 'தமிழகத் திலிருந்து கள்ளத் தோணிகள் மூலம் வந்து குடியேறியவர்கள்தான் ஈழத் தமிழர்கள்', சிங்கள மக்கள்தான் பூர்வகுடி மக்கள்'' என்ற கருத்தை சிங்கள இனவெறியர்கள் தொடர்ந்து பரப்பி வருகின்றனர். ஆனால், இது மானுடவியல் மூலமாகவோ, அகழ்வாராய்ச்சி மூலமா கவோ நிறுவப்படவில்லை, நிரூபிக்கப்படவில்லை. ஆனால், ஈழத் தமிழர்கள் கிட்டத்தட்ட கி.மு. 500 முதற்கொண்டு அங்கே பூர்வகுடி மக்களாய் இருந்து வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான், இந்தியா விலிருந்து - ஒரிஸா, பீகார் மாநிலங்களிலிருந்து - ஒரு பிரிவினர் இலங்கையில் குடியேறி பௌத்த மதத்தை நிறுவி, சிங்கள மொழி யைத் தாய்மொழியாக கொண்டு வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அதற்கு முன்பே, கி.மு. 5-ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழர்கள் ஈழத்தில் பூர்வக்குடிகளாய் இருந்து வந்திருக்கிறார்கள். இதற்கான மானுட வியல் ஆராய்ச்சியாலும் அகழ்வாராய்ச்சியாலும், அல்லது மொழியி யல் ஆராய்ச்சியாலும் நிரூபிக்கப்பட்ட பல ஆதாரங்கள் இருக்கின்



படிப்பகம்

www.padippakam.com

றன. சிங்கள மக்கள்தான் பிற்காலத்தில் குடியேறினார்கள் என்பதற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன.

இது ஒரு விசயம். இன்னொரு விசயம் - இலங்கையில் என்னென்ன இனங்கள் இருக்கின்றன? இலங்கைத் தமிழர்கள் அனைவரும் ஒன்றா? இந்தியத் தமிழர்களும் ஈழத்தமிழர்களும் ஒரே இனமா என்பது போன்ற விசயங்கள் இருக்கின்றன.

இன்று தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஈழ ஆதரவு சக்திகளைத் திரட்டும் வகையில் ஒரு விசயத்தைச் சொல்கிறார்கள். இலங்கையில் வாழும் தமிழர்களும், இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களும் ஒரே இனம், தொப்புள் கொடி உறவு கொண்டவர்கள். இந்தியாவிலுள்ள தமிழ்நாடு என்பது ஈழத் தமிழர்களின் தாயகம், அதாவது தாய்த்தமிழகம். தமிழகத்திலே வாழ்பவர்களும் சரி, ஈழத்திலே வாழ்பவர்களும் சரி ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள், இது ஈழ மக்களுக்கு ஆதரவு - சிங்கள இன்வெறிக்கு எதிர்ப்பு என்ற சக்தியைத் திரட்டுவதற்காக எளிமையான முறையில் சொல்லப்படுகிறது.

ஆனால், ஈழத்தில் வாழக்கூடிய மக்கள் ஒரு இனம், தனி இனம், தேசிய இனம். அவர்களின் பூர்வகுடித் தோற்றமே ஈழம்தான். ஈழத்தைத் தாயகமாகக் கொண்டவர்கள். ஆனால், தமிழ்நாட்டில் வாழக்கூடிய மக்கள் தனி இனத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இருவரும் தனித் தனி இனம். இப்படிச் சொல்வதால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிக்கக் கூடாது அல்லது எதிரான அல்லது பாராமுகம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் சொல்லவில்லை. வரலாற்று ரீதியாக ஈழத் தமிழர்கள் தனி இனத்தை சேர்ந்தவர்கள். இன்று இங்கிலாந்திலே உள்ள பிரிட்டீசாரும் ஆங்கிலம் பேசுகிறார்கள், அமெரிக்காவில் இருக்கக் கூடியவர்களும் ஆங்கிலம் பேசுகிறார்கள், ஆஸ்திரேலியாவில் இருக்கக் கூடிய மக்களும் ஆங்கிலம் பேசுகிறார்கள் என்பதற்காக இவர்கள் எல்லாம் ஒரே தேசிய இனம் என்று சொல்லிவிட முடியாது. ஒரு மொழி மட்டுமே ஒரு இனத்தைக் குறிப்பதில்லை.

மார்க்ஸிய-லெனினிய ஆய்வுப்படி, குறிப்பாக ஸ்டாலின் அவர்கள் வரையறுத்தபடி, ஒரு தேசிய இனம் என்பது என்ன? ஈழ மக்களும், இந்தியத் தமிழக மக்களும் ஒரு தேசிய இனம் என்று எதை வைத்துக் கூற முடியும். ஒரு மொழி பேசும் மக்கள், ஒரே



படிப்பகம்

www.padippakam.com

பண்பாட்டைக் கொண்ட மக்கள், ஒரே அரசியலமைப்பின் கீழ் வாழும் மக்கள், ஒரே பொருளாதாரம் மற்றும் பூகோள அமைப்பின் கீழ் வாழும் மக்கள் ஒரு இனமாக அமைகிறார்கள். முதலாளித்துவம் உலகில் தோன்றிய பிறகுதான் இந்த நான்கு கூறுகளையும் உள்ளடக்கிய தேசிய இனங்கள் தோன்றின. அதற்கு முன்பு தமிழ் நாட்டை சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் ஆண்டார்கள். பின்னர் பல குறுநில மன்னர்கள் ஆண்டார்கள். இப்படிப் பல பிரதேசங்களை தமிழ்நாடு கொண்டிருந்தது. ஆனால், இவ்வாறு பல பிரதேசங்களை கொண்ட, பல பெரிய, சிறிய மன்னர்களைக் கொண்ட தமிழ்நாடு ஒரு தேசிய இனமாக உருவாகி விடவில்லை. தமிழ் தேசியம் என்று நாம் எப்போதிருந்து சொல்கிறோம் என்றால், ஒரு மொழி, ஒரு பூகோள நிலை, ஒரு அரசியல் - பொருளாதார அமைப்பின் கீழ், ஒரு பண்பாட்டின் கீழ் தமிழகம் எப்போழுது வந்ததோ அப்பொழுதுதான் தமிழ் தேசிய இனம் உருவாகியது.

இந்தியாவைப் போல இலங்கையும் பல தேசிய இனங்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இருக்கக் கூடிய மக்கள் ஈழத் தமிழர்கள், தென் புலத்தில் இருக்கும் மக்கள் சிங்களவர்கள். இந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கூட மன்னராட்சிக் காலத்தில் பல்வேறு சிறு சிறு மன்னர்களின் ஆட்சிக்குக் கீழ் ஈழத் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஆங்கிலேயர்கள் வருகைக்கு பிறகுதான் ஒரே இனமாக அமைந்தார்கள். இலங்கையில் உள்ள தமிழர்கள் அனைவரும் ஒரே இனமா என்றால், இல்லை.

உண்மையில் இலங்கை எப்படி அமைந்து இருக்கிறது? இலங்கையில் இரண்டு பிரிவுத் தமிழர்கள் இருக்கிறார்கள். வட-கிழக்கு மாகாணங்களிலே உள்ள ஈழத் தமிழர்கள் ஒரு இனமாகவும், தென் இலங்கையில் மலையகத்தில் வாழக்கூடிய தமிழர்கள் வேறு ஒரு பிரிவினராக, தேசிய இனச் சிறுபான்மையினராக இருக்கிறார்கள். இலங்கையில் வாழும் மக்கள் அனைவரும் ஒரே இனம், உலகத் தமிழ் மக்கள் அனைவரும் ஒரே இனம் என்று பார்ப்பதும் தவறு.

1815-க்குப் பிறகு, ஆங்கிலேயர்கள் இலங்கையை காலனியாக்கிய பிறகு, தென் இலங்கையிலே இருக்கக் கூடிய மலையகத்தில் தேயிலை, ரப்பர், காப்பித் தோட்டங்கள் அமைப்பதற்கு, தென்னைப் பண்ணைகள் அமைப்பதற்கு, இன்னும் முந்திரி, ஏலம் இப்படிப்



படிப்பகம்

பட்ட பணப்பயிர்கள் பயிரிடுவதற்காகத் தமிழ்நாட்டிலிருந்து ஆங்கிலேயர்களால் குடியமர்த்தப்பட்ட மக்கள்தாம் மலையகத் தமிழர்கள். அவர்களில் பெரும்பான்மையினர் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த மக்கள். தென் மாவட்டங்களிலிருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள் - இவர்கள்தான் மலையகத் தமிழகர்கள்.

இந்தியா, இலங்கை இப்படிப் பல நாடுகளை ஆங்கிலேயர்களும், போர்த்துக்கீசியர்களும், டச்சுக்காரர்களும், ஸ்பானியர்களும் கைப்பற்றிய பிறகு, அவர்கள் தங்களது காலனி நாடுகளில் சுரங்கங்கள் வெட்டுவதற்கும், வாழை-கரும்புப் பண்ணைகள் வைப்பதற்கும் தேயிலை, ரப்பர் தோட்டங்களை வைப்பதற்காகவும் பல ஆயிரம் இந்திய மக்களை அழைத்துச் சென்றிருக்கிறார்கள். மேற்கே எடுத்துக் கொண்டால், மத்திய அமெரிக்க நாடுகளில் கரீபியன் தீவுகள் என்று சொல்லப்படக்கூடிய மேற்கிந்தியத் தீவுகளில் கூட தமிழர்கள் இன்று வாழ்கிறார்கள். அவர்களெல்லாம் ஆங்கிலேயர்களால் கரும்புத் தோட்டங்களில் பயிர் செய்வதற்காகக் கொண்டு செல்லப்பட்டவர்கள். கிழக்குக் கோடியிலே திமோர் தீவுகளில், இந்தோனேசியத் தீவுகளில் கரும்பு பண்ணைகளில் வேலை செய்வதற்காக தமிழர்கள் போயிருக்கிறார்கள். ஆப்பிரிக்காவின் பல சுரங்கங்களில் வேலை செய்வதற்காக தமிழர்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள். மலேசியாவில், பர்மாவில், இந்தோனேசியாவில் இப்படிப் பல நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

அப்படி, 1815-க்குப் பிறகு இலங்கையில் குடியமர்த்தப்பட்டவர்கள்தாம் மலையகத் தமிழர்கள் இவர்கள் தமிழ் தேசிய சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மலையகத் தமிழர்கள் ஈழத் தமிழர்களிலிருந்து வேறுபட்டவர்கள். இன்னும் சொல்லப் போனால், மலையகத் தமிழர்களை தாழ்ந்த சாதிக்காரர்களாக, தன்னை விடக் குறைந்த பண்பாட்டு, மொழி வளர்ச்சி உள்ளவர்களாக, கீழ்ச் சாதிக்காரர்களாக ஈழத் தமிழர்களால் கருதப்பட்டவர்கள். ஆகவே, இலங்கையில் வாழக் கூடிய தமிழர்கள் இரண்டு பிரிவாக இருக்கிறார்கள். இந்த மலையகத் தமிழர்களை தமிழ் தேசிய சிறுபான்மை இனத்தவர், ஈழத் தமிழர்களில் இருந்து மாறுபட்ட இனத்தவர் என்று சொல்லலாம்.

இந்தியாவில் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை ஒட்டி தேர்தல்களை நடத்தி இந்தியர்களுக்கு தங்களது அரசியல்

www.padippakam.com

அதிகாரத்தில் ஓரளவு பகிர்ந்து அளித்தார்கள், ஆங்கிலேயர்கள். அதேபோல இலங்கையிலும் வரம்புக்குட்பட்டு அனைவருக்கும் வாக்குரிமை என்பதைக் கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட வாக் குரிமை என்பது மலையகத் தமிழர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந் தது. ஈழத் தமிழர்களுக்கும் கொடுக்கப்பட்டிருந்தது, ஆனால், 1948-இல் ஆங்கிலேயர்கள் இலங்கையிலிருந்து வெளியேறுகிறார்கள், அதிகார மாற்றம் நடக்கிறது, ஐக்கிய தேசியக் கட்சியின் டி.எஸ். சேனநாயகாவிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது. அவர் ஆட் சிக்கு வந்த ஓராண்டிலேயே மலையகத் தமிழர்களுக்கு வாக்குரிமை பறிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு 1958-லே இன்னும் பல உரிமை கள் பறிக்கப்படுகின்றன.

ஆக, ஒரு தேசிய சிறுபான்மை இனமாக மலையகத் தமிழர்ரக ளும், தேசிய இனமாக ஈழத் தமிழர்களும் இருக்கிறார்கள். எஞ்சி இருக்கக்கூடிய இலங்கையில் சிங்களவர்கள் ஒரு இனமாக, பேரின மாக, பெரும்பான்மை மக்களாக தென் இலங்கையிலும், மத்திய இலங்கையிலும், கிழக்கிலும் இருக்கிறார்கள். ஆனால் கிழக்கில் பெரும்பான்மை மக்கள் ஈழத் தமிழர்கள், கிட்டத்தட்ட 30 முதல் 40 சதவீதம் வரை ஈழத் தமிழர்கள் இருந்தனர். மீதி மொரிசியஸ் மற்றும் தென்னாப்பிரிக்காவை அடுத்துள்ள மடகாஸ்கர் தீவுகளிலிருந்தும் குடியேறிய முஸ்லீம்கள். அவர்கள் மூர் என்ற பூர்வகுடி இனத்தைச் சேர்ந்தவர்கள். இன்றைக்கும் பெரும்பாலும், மட்டக்களப்பு, அம் பாறை மாவட்டங்களில் கணிசமான அளவு வாழ்கிறார்கள். அவர்களும், மலையகத் தமிழர்களைப்போல ஒரு தேசிய சிறு பான்மை இனத்தவர்கள். அவர்கள் பிற்காலத்தில் சிங்களம், தமிழ் கற்றுக் கொண்டார்கள். இலங்கைக்கு இன்னும் தெற்கே இருக்கக் கூடிய மாலத் தீவில் முஸ்லீம்கள் குடியேறி பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். மாலத்தீவுகளில் மட்டுமல்ல இலங்கைக்கு இன்னும் தெற்கே, இந்துமாக் கடலில் உள்ள தீவுகளில் இருக்கக்கூடிய முஸ்லீம் கள், இவர்களெல்லாம் ஒரே பூர்வகுடி இனத்தைச் சேர்ந்தவர்கள்.

தமிழ் மொழியை வளர்ப்பதில் தமிழ்நாட்டிலே எவ்வளவோ முஸ்லீம்கள் பங்காற்றியிருக்கிறார்கள். அதேபோல, கிழக்கு இலங்கையின் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருக்கக் கூடிய முஸ்லீம்கள் தமிழை வளர்ப்பதிலும், தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதிலும், தமிழ்ப் பண்பாட்டை வளர்ப்பதிலும் மிகப் பெரிய, பாரிய பங்கு செலுத்தியுள்ளார்கள். அவர்கள் இன்னும் பரவி வடக்கு



படிப்பகம்

www.padippakam.com

- மேற்குப் பகுதியில் உள்ள யாழ் மற்றும் மன்னார் பிரதேசங்களிலே கூட குடியேறியுள்ளனர். இலங்கையில் வாழும் முஸ்லீம்கள் சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். இலங்கையில் உள்ள தேசிய இனங்களைப் பற்றிச் சொன்னால் சிங்களப் பேரினம் ஓரினம், அடுத்து சிறுபான்மையாக இருக்கக்கூடிய ஈழத் தமிழர்கள் ஒரு இனமாக இருக்கிறார்கள். இவர்கள் தவிர முஸ்லீம் தேசிய சிறுபான்மையினர், அதேபோல மலையகத் தமிழர்கள்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய தமிழர்களில் பலரும் இலங்கை என்பது இரண்டு தேசிய இனங்களை மட்டுமே கொண்டிருக்கிறது - ஒன்று சிங்களப் பேரினம், இன்னொன்று ஈழத் தமிழினம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவிர மீதம் இருக்கிற இரண்டு சிறுபான்மை இனங்களைப் பற்றி பலருக்கும் தெரியாது. இந்த இரண்டு தேசிய சிறுபான்மை இனங்களைப் பற்றியும் நாம் பேச வேண்டியதற்கான காரணம் என்னவென்றால் தமிழீழம் என்பது மலையகத்தையும் சேர்த்தது என்று விடுதலைப் புலிகள் கூறுகிறார்கள். மலையகத் தமிழர்களும், மலையகமும் தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டியதுதான் என்று அவர்கள் வரையறுத்துள்ளனர். அதாவது, மலையகத்தில் தோட்டத் தொழிலில் இருக்கக்கூடிய, பூர்வீகமாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள், நம்முடைய வார்த்தைகளில் சொல்லப் போனால் சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள் கூட. ஈழத் தமிழர்கள் எனும் தேசிய இனத்திற்குக் கீழே இருக்க வேண்டியவர்கள் என்ற கண்ணோட்டத்தில் சொல்கிறார்கள்.

தனி ஈழம் என்று சொன்னால், விடுதலைப் புலிகளினுடைய கண்ணோட்டத்தில் மலையகத் தமிழர்களும் சேர்ந்துதான். அவர்கள் வெளியிட்டிருக்கும் வரைபடத்தில் தமிழீழம் மலையகத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ஆனால் உண்மையில் 1815-க்கு பிறகு ஆங்கிலேயர்களால் குடியமர்த்தப்பட்ட, தமிழ்நாட்டை பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் தனி இனத்தவர், தேசிய சிறுபான்மை இனத்தவர்கள்.

இந்த உண்மைகளை எல்லாம் விட்டு தொப்புள் கொடி உறவு, தமிழர்கள் எல்லாம் ஓரினம், உலகம் முழுவதும் வாழக் கூடிய பத்து கோடித் தமிழர்களும் ஓரினம், அனைவருக்கும் பிரபாகரன்தான் தலைவர் என்று பேசுவதெல்லாம் ஒரு அறிவியல்பூர்வமான கண்ணோட்டம் அல்ல.



படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்காவின் அதிபராக இருக்கும் பாரக் ஒபாமா, ஒரு ஆப்பிரிக்க- அமெரிக்கர். அவரது தந்தை கென்யா நாட்டைப் பூர்வீக மாகக் கொண்டவர். அமெரிக்காவில் குடியேறி பரம்பரையாக வாழ்ந் தவர். அவரது மகன் பாரக் ஒபாமா அமெரிக்க அதிபராக வெற்றி பெற்றிருக்கிறார். அவரை இன்னமும் ஆப்பிரிக்கர் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அப்படி சொல்லித்தான் வெள்ளை இனத்தவர்கள் அவரை இழிவுபடுத்துகிறார்கள். ''கறுப்பர்கள் அனைவரும் தனி இனம், அவர்களது பூர்வீகம் அமெரிக்கா கிடையாது, வெள்ளை இனம் மட்டுமே அமெரிக்காவிற்கு உரிமை கோர முடியும்'' என்று சொல்லி வருகிறார்கள். ஆனால், அறிவியல்பூர்வமான கண்ணோட்டப்படி உலகத் தமிழர்களெல்லாம் பல்வேறு காரணங்களால் பல்வேறு நாடுகளில் குடியமர்ந்த மக்கள், குடியமர்ந்து அந்த நாட்டினுடைய பண்பாடு, அந்த நாட்டினுடைய மொழி, பண்பாடு, அரசியல், பொருளாதாரம் இவற்றுடன் ஒன்று கலந்து, ஒரு கணிசமான காலம் வாழ்ந்த பிறகு, அந்த நாட்டினுடைய இனத்தைச் சேர்ந்தவர்களாக உருமாறி விடுகிறார்கள்.

அதுபோல மலையகத் தமிழர்களும், தேசிய சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கென்று தனிச் சிறப்பான சில உரிமைகள், பண்பாடுகள், பொருளாதார அமைப்பு ஆகியன இருக் கின்றன. அந்தப் பண்பாடு பற்றியோ, அவர்களுடைய உரிமைகள் பற்றியோ கவலைப்படாமல் தமிழர்கள் அனைவரும் ஒரே இனம் என்று சொல்வது சரியல்ல. பொதுவாக மக்களின் ஆதரவை திரட்டு வதற்காக தமிழர்கள் அனைவரும் ஒரே இனம், ஈழத் தமிழர்களும் நாமும் ஒரே இனம், பத்து கோடித் தமிழர்களும் ஒன்றுதான், அனைவ ருக்கும் தலைவர் பிரபாகரன், இல்லையென்றால் வீரமணி, இல்லை யென்றால் கருணாநிதி என்பது அறிவியல் பூர்வமான கண்ணோட் டம் இல்லை. இவற்றையெல்லாம் ஈழத் தமிழர்களுக்குத் தர வேண் டிய ஆதரவை மறுப்பதற்காக நாம் கூறவில்லை. ஈழத் தமிழர்களுக் கும், நமக்கும் என்ன உறவு என்பதைச் சரியான வரையறைக்குக் கொண்டு வருவதற்காகச் சொல்கிறோம்.

**சிங்கள இனவெறி அரசியல், அதிகாரம் ஆதிக்கம் பெற்றது....**

இலங்கை வரலாற்றில் எப்படி ஈழத் தமிழினப் பிரச்சினை உருவானது? 1498-ஆம் ஆண்டு போர்ச்சுக்கலைச் சேர்ந்த



படிப்பகம்

www.padippakam.com

வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு வந்தார். பிறகு வணிகத்திற்காக வந்த ஆங்கிலேயர்கள் சிறுகச் சிறுக இந்தியாவைக் காலனியாக மாற்றிக் கொண்டார்கள். அதே போல 1505-ஆம் ஆண்டு போர்த்துகீசியர்கள் இலங்கைக்குச் சென்றார்கள். அதற்குப் பிறகு 1815-ஆம் ஆண்டு பிரிட்டிசார் போர்த்துக்கீசியரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றித் தங்களுடைய காலனி நாடாக்கிக் கொண் டார்கள். காலனியாக்கிய பிறகு மலையகத்திலே தோட்டப் பயிரிடுவது. தமிழர்களைக் குடியேற்றுவது என சிறுகச் சிறுகச் செய்தார்கள். 1833-ஆம் ஆண்டு முதன் முறையாக இலங்கைக்கு ஆங்கிலம்தான் ஆட்சி மொழி என காலனிய அரசு அறிவித்தது.

இப்படி வந்தவர்கள் சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் கணிசமான அளவு கிறித்தவ மதத்திற்கு மத மாற்றம் செய்தார்கள். தமிழ்நாட்டில், குறிப்பாக திருநெல்வேலி, கன்னியாக்குமரி மாவட் டங்களில் எப்படி ஆங்கிலேயர்கள் மத மாற்றம் செய்தார்களோ, அதேபோல இலங்கையிலும், அதுவரை பௌத்த மதத்தை சேர்ந்தவர் களான சிங்களவர்களில் மற்றும் இந்து பார்ப்பனிய மதத்தைச் சேர்ந்த வர்களாக இருந்த ஈழத் தமிழர்களில் கணிசமான பகுதியினரையும் கத் தோலிக்கர்களாக மாற்றினார்கள். இலங்கையின் முதல் ஜனாதிபதி யான டட்லி சேனநாயகா ஒரு கத்தோலிக்கர், பிறகு பௌத்த மதத்திற்கு மாறியவர். அதேபோல சிறீமாவோ பண்டாரநாயகா, அவருடைய கணவர் சாலமன் பண்டாரநாயகா இருவரும் பௌத்த -கிறித்தவ பின்னணிக் கொண்டவர்கள். அதிபர் ஜெயவர்த்தனே என்பவர் ஜூனியஸ் ரிச்சர்டு ஜெயவர்த்தனே.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் எப்படி நாடார் சாதியைச் சேர்ந்தவர்கள் கிறித்தவ மதத்திற்கு போவதும், அதேசமயம் இந்துக் களுடன் கொள்வினை, கொடுப்பினை கொள்வதும், திருமணம் செய்து கொண்டு மறுபடியும் இந்து மதத்திற்கு மாறுவதும், இந்து கிறித்தவர் என இரண்டு பெயர் வைத்துக் கொள்வது என்பதும் சாதாரணமாக இருக்கிறதோ, அதேபோல இலங்கையில் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் கத்தோலிக்கர்களாக மாறுவதும், திருமணம் செய்து கொண்டு மீண்டும் பௌத்த மதத்திற்குத் திரும்புவதும் சாதார ணம். 1900-க்கு பிறகு இலங்கையின் விடுதலைப் போர் காலகட்டத் தில் கூட பௌத்தர்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும் இடையில் பல போர்கள் நடந்துள்ளன. கத்தோலிக்கர்களாக மதம் மாறியவர்கள், ஆங்கிலம் கற்று, காலனிய ஆட்சியில் அதிகாரிகளானார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்களிலும் கணிசமானோர் அதிகாரிகளானார்கள். இந்தியா வில் எப்படி நேரு குடும்பத்தினர்கள், காந்தி, அம்பேத்கர், சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்கள் இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்று வந்தார்களோ அதேபோல இலங்கையிலிருந்து பௌத்தர் களும் தமிழர்களும் இங்கிலாந்து சென்று படித்து, பாரிஸ்டர் பட்டம் பெற்றனர். அப்படி பாரிஸ்டர் பட்டம் பெற்று வருவது என்பது பெருமைக்குரிய விசயமாக இருந்தது. இதில் முக்கியமாகச் சொல்லப் பட வேண்டியது என்னவென்றால் காலனிய ஆட்சிக்கு விசுவாசமாக இருந்து, சேவை செய்து, கல்வி கற்றுச் சலுகைகள் பெறுவதில் பௌத்தர்களும் இருந்தார்கள், கிறித்தவர்களும் இருந்தார்கள், சிங்கள வர்களும் இருந்தார்கள், தமிழர்களும் இருந்தார்கள்.

அதேசமயம், ஈழத்தில் சாதிய அடக்குமுறையும் அதிகமாக இருந்தது. பிள்ளைமார் சாதியைச் சேர்ந்தவர்களில் கணிசமானோர் ஆளும் வர்க்கத்திலிருந்தார்கள். தமிழகத்தில் நிலவுவதைப் போன்றே ஈழத்திலும் பிள்ளைமார், செட்டியார், வேளாளர் போன்ற ஆதிக்க சாதியினர், தாழ்த்தப்பட்டவர்களை அடக்கி ஆண்டு வந்துள்ளனர். தீண்டாமை என்பது கிட்டத்தட்ட ஈழ விடுதலைப் போர் தொடங்கு வதற்குச் சிறிது காலம் முன்பு வரை கூட மிகப் பெரிய பிரச்சினையாக இருந்திருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் ஒடுக்கப்படுவதும், ஊருக்கு வெளியே சேரிகள் தனியாக இருப்பதும், சேரிகளைச் சேர்ந்தவர்கள் பிணம் சுமப்பது போன்ற வேலைகளைச் செய்வது என அனைத்து வகையான சாதிய ஒடுக்குமுறைகளும் ஈழத்தில் இருந்துள்ளது. இதில் குறிப்பாக செட்டியார், பிள்ளைமார், வேளாளர் சாதிகளைச் சேர்ந்த வர்கள், ஆங்கிலக் கல்வி கற்று, பாரிஸ்டர்களாகி காலனியாட்சிக்கு விசுவாசமாக இருந்து வந்தவர்கள்.

பிற்காலத்திலே, சிங்கள இன வெறியர்கள் இவர்களைக் காட்டித் தான் ஈழத் தமிழர்கள் மீது வெறுப்புணர்வைக் கொட்டித் வந்தார்கள். ஈழத் தமிழர்களில் கணிசமான ஆதிக்க சாதியினர் ஆங்கிலேய அரசில் இடம்பெற்று, ஆங்கிலேயர்களின் சேவகர்களாக இருந்தார்கள், கல்வி யில் முன்னிலை பெற்றவர்களாக இருந்தார்கள். இவர்கள் அனைவ ரும் செட்டியார், பிள்ளைமார், வேளாளர் போன்ற முற்பட்ட சாதி களைச் சேர்ந்தவர்கள், சாதிய ஒடுக்குமுறைகளைப் பின்பற்றுபவர் கள். இவர்களைக் காரணம் காட்டி தமிழர்கள் அனைவரும் துரோகி கள், ஆங்கிலேயர்களுக்குச் சேவை செய்யக் கூடியவர்கள், ஆட்சி



படிப்பகம்

அதிகாரத்தில் இன்னமும் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர்கள் என்று கூறி சிங்கள இன வெறி ஊட்டினார்கள்.

இலங்கையில் ஆங்கிலேயர்களுக்கெதிரான சுதந்திரப் போராட்டமும் அவ்வளவு எழுச்சியானதும் இல்லை. இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டு இந்திய தேசிய காங்கிரஸ் இருந்தது, அதற்கு நேர்மாறாக பகத்சிங் போன்றவர்கள் புரட்சிகரமான முறையில் தேசிய விடுதலைப் போராட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள். ஆனால், இலங்கையில் அது போன்ற மிகப் பெரிய அளவுக்கு ஆங்கிலேய எதிர்ப்புப் போரோ, போராட்டமோ நடந்ததில்லை. இலங்கையின் குறுநில மன்னர்கள் சிலர், ஆங்காங்கே ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராகப் போராடினார்கள். சில ஊர் தளகர்த்தர்கள் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்துப் போராடியிருக்கி றார்கள். ஆனால் அவை மிகப் பெரிய அளவிற்கு இல்லை.

இந்தியாவில், அரசு அதிகாரத்தைத் தரகர்களிடம் ஒப்படைத்து விட்டு ஆங்கிலேயர்கள் இந்தியாவிலிருந்து வெளியேறியது போலவே, இலங்கையிலும் தரகு முதலாளிகளிடம் ஆட்சியை ஒப்ப டைத்து விட்டு 1948-இல் வெளியேறினார்கள். இலங்கையின் ஆட்சி யதிகாரம், டி. எஸ். சேனநாயகா தலைமையில் இயங்கிய சிறீலங்கா ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது. அதேசமயம் காபி, ரப்பர், தேயிலைத் தோட்டங்கள், முந்திரிக் காடுகள், தேங்காய் கொப்பரைப் பண்ணைகள் அனைத்தும் ஆங்கிலேய கம்பெனிக ளுக்கே தொடர்ந்து சொந்தமாக இருந்து வந்தன. ஆங்கிலேயரது பண் ணைகள் மற்றும் அவர்களது உடைமைகள் கைப்பற்றப்படவில்லை. ஆங்கிலேயர்கள் வெளியேறிய ஒரு வருடத்திற்குள்ளாகவே, ஆட்சிய திகாரத்தைக் கைமாற்றிக் கொண்ட சிங்கள பேரின ஆட்சியாளர்கள், மலையகத் தமிழர்களின் ஓட்டுரிமையைப் பறித்தார்கள். தமிழர்கள் அரசு அதிகாரத்தில் இடம் பெறுவதைத் தடை செய்வதற்கான எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள்.

தமிழர்களுக்கு காலனியாட்சிக் காலத்தில் இருந்த அளவுக்கு செல்வாக்கு ஆட்சி மாற்றத்தின் போதும், சிங்களப் பெரும்பான்மை யினரிடம் ஆட்சியதிகாரம் வந்த பிறகும் இல்லை. ஈழத் தமிழர்கள் தங்களது உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எதிராகச் செல்வநாயகம் தலைமையில் சில இயக்கங்கள் நடத்தினார்கள். அதன் விளைவாக சேனநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தம் வந்தது. அதன்படி

www.padippakam.com

தமிழர்களுக்கு கணிசமான அளவு அரசு அதிகாரத்தில் பங்கீடு செய் யப்படும், தமிழ் இரண்டாவது ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப் படும், பயிற்று மொழியாக ஏற்றுக் கொள்ளப்படும் என்று முடிவானது. ஆனால் சேனநாயகா-செல்வா ஒப்பந்தம் மலையகத் தமிழர்களின் உரிமைகளை வலியுறுத்தவில்லை, ஈழத் தமிழர்கள் தங்களுடைய உரிமையை, அதிகாரப் பகிர்வைத்தான் வலியுறுத்திப் பெற்றார்கள். மலையகத் தமிழர்களினுடைய வாக்குரிமை பறிக்கப் பட்டதற்கு எதிராக வடக்கு, கிழக்கு மாகாணத்திலே வாழ்ந்த ஈழத் தமிழர்கள் மத்தியிலே ஒரு பெரிய எழுச்சியெல்லாம் ஏற்படவில்லை. அப்பொழுது கம்யூனிஸ்டு கட்சி ஓரளவு செல்வாக்குடைய கட்சியாக ஈழத்திலே இருந்திருக்கிறது. அவர்கள் மலையகத் தமிழர்களின் உரி மைக்காகப் பல்வேறு வகையில் போராடியிருக்கிறார்கள். ஆனால், ஈழத் தமிழர்களுடைய பெரும்பான்மைக் கட்சியாக இருந்தவர்கள் இப்படிப்பட்ட கோரிக்கைகளை எழுப்பியதில்லை.

சேனநாயகா-செல்வா ஒப்பந்தத்தின்படி, ஈழத் தமிழர்களுக்கு கணிசமான அளவில் அதிகாரப் பகிர்வு கொடுக்கப்படும் என்ற வாக் குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு பதிலாக, உரிமைகள் பறிப்பு தொடர்ந்து நடந்தது. அது மட்டுமின்றி, **ஈழத் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த பிரதேசங்களில் சிங்களக் குடியேற் றங்களைச் சிங்கள அரசு புகுத்தியது.** 1948-இல் அதிகார மாற்றம் நிகழ்ந்த பொழுது இலங்கையில் மக்கள் பரவியிருந்த நிலைமை என்னவென்றால், வட இலங்கையில் அறுதிப் பெரும்பான்மையாகத் தமிழர்கள் வாழ்ந்தார்கள். யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத் தீவு போன்ற வடக்கு பிரதேசங்களில் தமிழர்கள்தான் பெரும்பான்மை குடிமக்களாக இருந்தார்கள்; ஆனால் கிழக்கு மாவட்டத்தில் திரிகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட் டங்களில் 60 முதல் 70 சதவீதம் மக்கள் தமிழர்கள், கிட்டத்தட்ட 30 சதவீதம் மக்கள் முஸ்லீம்கள், மிக மிகச் சிறுபான்மையாக, 5 முதல் 10 சதவீதம் வரை மட்டுமே சிங்களவர்கள் இருந்தார்கள்.

ஆனால், அதிகார மாற்றம் நடந்த உடன் தொடங்கி, 1950-க்குள், புறம்போக்கு நிலங்களாக, அரசு நிலங்களாக இருந்த பகுதிகள் அனைத்திலும் வீடுகள் கட்டிக் கொடுத்து, நிதியும் கொடுத்து தமிழ் மக்கள் பிரதேசங்களில் சிங்கள மக்களை கணிசமான அளவு குடியமர்த்தினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

'தேயிலைத் தோட்டங்களில் தமிழர்கள் பெரும்பான்மையாகக் குடியேறி விட்டதாலும், வடக்கே, கிழக்கே ஈழத் தமிழர்களுடைய ஆதிக்கம் இருப்பதாலும் சிங்களவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. அதனால் அவர்கள் வேலை தேடிப் பல இடங்களில் குடியேறுகின்றனர்' என்று கூறினார்கள். தமிழர்களின் பிரதேசங்கள் கைப்பற்றப்படுவது அப்போதுதான் முதல் முறையாக நடந்தது. ஒரு தேசிய இனத்தின் பிரதேசங்களைக் கைப்பற்றுவது, அல்லது ஆக்கிரமிப்பது என்பது அதை அழியச் செய்வதில் முடியும் என்பது மிகவும் முக்கியமான விசயம். காஷ்மீரிலும், இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலும் இந்தி பேசும் மற்ற பகுதிகளை சேர்ந்த மக்கள் குடியமர்ந்து, அங்கே கணிசமான அளவு பொருளாதாரத்தைக் கைப்பற்றிக் கொள்வது என்பதை இந்திய ஆளும் வர்க்கம் செயல்படுத்தி வந்தது. ஆனால், காஷ்மீர் மக்களின் போராட்டத்தை ஒட்டி அந்த முயற்சி தடுக்கப்பட்டது. அங்கு அன்னியர்கள் யாரும் சொத்து வாங்குவதைத் தடை செய்யும் 370-வது சட்டப்பிரிவு இன்னமும் உள்ளது.

ஆனால், ஈழத் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் சிங்கள மக்களைக் குடியமர்த்தி, சிங்கள இனவெறியர்களால் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் பிரச்சனை எழுப்பிய உடன் இலங்கையில் தமிழர்களுக்கெதிரான முதல் கலவரம் வெடித்தது. இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய கள்ளத் தோணித் தமிழர்கள் தேயிலை, முந்திரி, ரப்பர் தோட்டங்களையும், தென்னை பண்ணைகளையும் தங்களிடமிருந்து பறித்துக் கொண்டதாக சிங்கள இனவெறி ஊட்டப்பட்டு மலையகத் தமிழர்களுக்கு எதிராகவும் பெரிய அளவிற்கு கலவரம் வெடித்தது. நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆனால் அதேசமயம் பாதிக்கப்படும் தமிழர்கள் அனைவரும் ஒரே அணியாக இருக்க வேண்டும், சிங்கள இனவெறிக்கு எதிராக மலையகத் தமிழர்களும், தாங்களும் ஓர் ஐக்கியப்பட்ட அணியாக இருக்க வேண்டும் என்று ஈழத் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கிய அமைப்புகள் கூறவில்லை. இந்த முதல் தமிழர் எதிர்ப்பு இனவெறி கலவரம் 1956-இல் நடந்தது. அதற்கு பிறகு 1958-இல் இரண்டாவது கலவரம் வெடித்தது.

ஆங்கிலேயரிடமிருந்து அதிகாரத்தைக் கைமாற்றிக் கொண்ட சேனநாயகா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியில் ஒரு பிளவு



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்டு 1956-லே நடந்த தேர்தலில் பண்டாரநாயகா தலைமையிலான கட்சி அதிகாரத்திற்கு வந்தது. பின்னாளில் அதுவே சிறீலங்கா சுதந்திர கட்சி என்றானது. டட்லி சேனநாயகா கட்சியிலேதான் ஜெயவர்த்தனே அதிபரானார். அந்த கட்சியிலேதான் ரணில் விக்கிரமசிங்கே பிரதமரானார். இவ்விரு கட்சிகள்தான் மாறி மாறி அதிகாரத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன.

1956-லே பண்டாரநாயகா தலைமையிலான சிறீலங்கா சுதந்திர கட்சி ஆட்சிக்கு வந்தபோது ''ஆங்கிலேயர்கள் இலங்கையிலிருந்து வெளியேறினால் கூட இன்னும் தொழில்களும், பண்ணைகளும் ஆங்கிலேயர் கையிலேயே இருக்கின்றன. இலங்கை சிங்கள மக்கள் கையிலே தொழில்களும், பண்ணைகளும் வரவில்லை. ஆகவே தேசியமயமாக்கத்தின்கீழ், பண்ணைகளும், தொழில்களும் அரசுடைமையாக்கப்படும்'' என்றதொரு திட்டத்தை வைத்தது. ஆங்கிலேயருடைய நேரடி தரகு முதலாளிகளாக இருந்த டட்லி சேனநாயகாவுக்கு மாற்றாக இவர் வைத்த தேசியவாதம் என்பது பல்வேறு ஏகாதிபத்தியங்களுக்கு சேவை செய்வது என்கிற அடிப்படையிலான போலி தேசியவாதம்தான்.

அந்தப் போலி தேசியவாதத் திட்டத்தின்படி பண்ணைகளையும், தொழில்களையும் இலங்கை அரசே மேற்கொண்டது; சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்குவதுபோன்ற தமிழர் விரோதக் கொள்கையும் வைக்கப்பட்டது. இதனால் சிங்கள இனத்தை சேர்ந்த பௌத்தர்கள் மட்டும்தான் ஆட்சியதிகாரத்திற்கு வரமுடியும் என்றானது. தமிழர்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். ஆட்சியதிகாரத்தில் தமிழர்களுக்குப் பங்கு கிடையாது. பண்டாரநாயகா அதிகாரத்திற்கு வந்ததே இப்படிப்பட்ட திட்டங்களை முன்வைத்துத் தான். இவர் பிரிட்டன் தவிர வேறு சில ஏகாதிபத்தியங்களுக்கு ஆதரவாளர்தான். இவருடைய தேசவுடைமை என்ற கொள்கையும் கூட இலங்கை தேசிய மூலதனம், சிங்கள மக்களுடைய உரிமை என்பதை அடிப்படையாக கொண்டதல்ல.

இவ்வாறு சேனநாயகா, பண்டாரநாயகா ஆகியோரின் இரண்டு கட்சிகள் தவிர, சிறீலங்கா லங்கா சமசமாஜக் கட்சி, சிறீலங்கா கம்யூனிஸ்டு கட்சி போன்ற சில கட்சிகளும் இருந்தன. அந்த கட்சிகள் எல்லாம் போலி கம்யூனிஸ்டு கட்சிகள்தான். அடிப்படையில்



படிப்பகம்

www.padippakam.com

பண்டாரநாயகாவின் தேசியமயமாக்கத்தை கடுமையாக எதிர்த்து, இவைகளுக்கு பின்னே நின்ற ஏகாதிபத்திய சக்திகளை அம்பலப் படுத்தும் பார்வை இக்கட்சிகளுக்கு இருந்ததில்லை. இன்றைக்கும் நாம் இந்தியாவில் பார்க்கக் கூடிய போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள்மாதிரி டட்லி சேனநாயக கட்சியையோ, பண்டாரநாயக கட்சியையோ பின்பற்றி அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தன; அவர்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு ஒரு முற்போக்கான சமூக அமைப்பை இலங்கையிலே ஏற்படுத்திவிட முடியும் என்று நம்பிக்கை கொண்ட போலி கம்யூனிஸ்டு கட்சிகள்தான் இந்த கட்சிகள் எல்லாமே. உண்மையைச் சொல்லப் போனால் இந்த கட்சிகள் எல்லாம் சர்வதேசிய ரீதியிலே குருசேவ், பிரஸ்னெவ் தலைமையிலே அமைந்த திரிபுவாத கட்சிகளுடன் ஏதோ ஒரு வகையில் உறவு வைத்துக் கொண்டிருந்த கட்சிகள். அதிலிருந்து பிரிந்து போன ஒரு இளைஞர் பிரிவினர், ஒரு பெரிய எழுச்சி நடத்தி இலங்கையில் சோசலிசத்தை நிறுவிவிடலாம் என்ற திட்டத்தைக் கொண்டிருந்தனர். அவர்கள்தான் ஜேவிபி என்ற கட்சியினர். அதெல்லாம் பின்னாளில்தான் வருகிறது.

ஆக, இலங்கையைப் பொறுத்த வரைக்கும் முதலிலே டட்லி சேனநாயகா ஈழப் பகுதியிலே பிரதேச ஆக்கிரமிப்பு என்பதைக் கொண்டு வருகிறார். எதிர்க்கட்சியைச் சேர்ந்த பண்டாரநாயகா மேலும் சிங்கள இனவெறியைக் கொண்டு வரக் கூடியவராக இருக்கிறார். சிங்களமே ஆட்சி மொழி, சிங்கள இனத்தைச் சேர்ந்த பௌத்தர்கள் மட்டும்தான் அதிகாரத்திற்கு வரமுடியும். அதாவது தேசியமயமாக்கம் என்கிற திட்டத்துடன் இவையும் சேர்ந்து இருக்கின்றன. தமிழுக்கும் தமிழர்க்கும் உரிமை என்பது பெயரளவுக்கு தான். நடைமுறையில் கிடையாது. பண்டாரநாயகா அரசும் பிரதேசக் கைப்பற்றுதலை மேலும் ஊக்குவித்தது. புதிய புதிய திட்டங்களை கொண்டு வந்தால், அதாவது புதிய தொழிற்சாலைகள் வைத்தாலோ, புதிய பண்ணைகள் வைத்தாலோ, தேசிய உடைமையாக்கப்பட்ட ரப்பர், தேயிலை தோட்டங்களிலோ நிர்வாகிகளாக, அதிகாரிகளாக சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் களையே நியமித்தல் என்று சிங்கள ஆதிக்கமே ஏகபோகமாக நிறுவப் பட்டது.

மலையகத் தமிழர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுதல் தீவிர மாகியது. 1949-லே மலையகத் தமிழர்களுடைய வாக்குரிமை



படிப்பகம்

www.padippakam.com

பறிக்கப்படுகிறது. 1960-களிலே பண்டாரநாயகாவின் மனைவி சிறீமாவோ ஆட்சிக்கு வந்தார். 1964-இல் சாஸ்திரி-சிறீமாவோ ஒப்பந்தம் போடப்பட்டது. இதன்படி மலையகத் தமிழர்களிலே 5,25,000 மலையகத் தமிழர்களும் அவர்களின் சந்ததியினர்களும் அகதிகளாக இந்தியா ஏற்றுக் கொள்வது என்றானது. இங்கே இருக்கக்கூடிய தேயிலைத் தோட்டங்களிலே கொண்டு வந்து ஊட்டி, வால்பாறை பகுதிகளிலே குடியமர்த்தினார்கள். 1815-இல் இலங்கையிலே குடியேறி இத்தனை ஆண்டுகள் அங்கேயிருக்கிற தரிசு நிலங்களைப் பண்படுத்தி, தோட்டங்கள் அமைத்த தமிழர்களுக்கு அவர்களது அடிப்படை உரிமைகளைப் போராடி பெறுவதற்குப் பதிலாக இந்திய அரசு என்ன செய்தது? அவர்களிலே 5,25,000 மலையகத் தமிழர்களும் அவர்களின் சந்ததியினர்களும் இந்தியா எடுத்துக் கொள்வது. 3,00,000 பேருக்கு மட்டும் இலங்கைக் குடியுரிமை வழங்குவது, எஞ்சிய மலையகத் தமிழர்களை என்ன செய்வது என்பது பின்னாளில் தீர்மானிக்கப்படும்; அதாவது, அவர்கள் நாடற்றவர்கள், குடியுரிமை கிடையாது என்றானது. இன்னமும் 4,00,000 மலையகத் தமிழர்கள் இந்த நிலையிலேயே உள்ளனர். இதுதான் இந்திய அரசு மேற்கொண்ட முதல் நேரடி துரோக நடவடிக்கை. இப்படிப்பட்ட இந்திய அரசுதான் ஈழத் தமிழர்களுக்கு, இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக எப்பொழுதாவது வருவார்கள் என்ற நம்பிக்கை தொடர்ந்து இங்கு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தேச உடைமையாக்கம் என்பதின் கீழே ஆங்கிலேயர் தவிர வேறு பல ஏகாதிபத்தியங்களுக்கு ஆதரவு நிலையிலிருந்து செயல்பட்ட பண்டாரநாயகா சில ஏகாதிபத்தியங்களின் தூண்டுதலின் பெயரிலே பௌத்த பிட்சுவால் படுகொலை செய்யப்பட்டார். தொடர்ந்து, அவருடைய மனைவி சிரிமாவோ பண்டாரநாயகா பிரதமரானார். அவரும் தேசியமயமாக்கலையும், சிங்கள இனவெறியையும், பௌத்த வெறியையும், சிங்கள மொழி வெறியையும் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார். இதன் விளைவாக மேலும் பிரதேச கைப்பற்றுதல்கள் எல்லாம் நடந்தன. முன்பு சேனநாயகா-செல்வா ஒப்பந்தம் குழி பறிக்கப்பட்டது. பின்பு சாஸ்திரி-சிறீமாவோ ஒப்பந்தத்தின் மூலம் மலையகத் தமிழர்கள் வெளியேற்றப்பட்டார்கள், நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள். இந்த நிலையில் கூட ஈழத் தமிழர்கள் மத்தியில் இருந்த அரசியல் கட்சிகள் மலையகத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை.

ஆனால் மலையகத் தமிழர்கள் மத்தியிலே தொழிற்சங்கங்கள் வைத்து கொண்டிருந்த தொண்டைமான் என்பவர் தலைமையில்



படிப்பகம்

இருக்கக் கூடிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி எந்த சிங்களக் கட்சி ஆளும் கட்சியாக வருகிறதோ அதனுடன் கூட்டணி வைத்துக் கொண்டது. அதாவது தொழிற்சங்கங்கள் வைத்துக் கொண்டு, காங்கிரசினுடைய INTUC தொழிற்சங்கம் போல, தொண்டைமான் தலைமையில் இருந்த தொழிற்சங்கம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி, ஆளும் கட்சியாக சேனநாயகா கட்சி வந்தாலும் பண்டாரநாயகா கட்சி வந்தாலும், அதனுடன் கூட்டணி சேர்ந்து, மந்திரி சபையில் இடம் பெற்று மலையகத் தமிழர்களுக்கு துரோகம் செய்கிற சக்தியாகவே இருந்தது.

### ஈழப் போராளிக் குழுக்களின் அராஜகவாதம்! இந்திய அரசின் பிராந்திய மேலாதிக்க முன்னெடுப்பு!

ஈழத் தமிழர்கள் மத்தியில் இருந்த அரசியல் கட்சிகள் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்று சேர்ந்த தமிழர் பிரதேசங்களுக்கு தன்னாட்சி, மாநில சுயாட்சி என்ற கோரிக்கையைத்தான் முன் வைத்தனர். அந்த மாநில சுயாட்சி கோரிக்கையை ஒப்புக் கொள்வதுபோல பண்டாரநாயகா போக்குக் காட்டிக் கொண்டிருந்தாரே ஒழிய நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. அதற்கு பிறகு 1972-லே பண்டாரநாயகாவுடைய நடவடிக்கைகளுக்கு எதிராக மீண்டும் ஈழத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மத்தியில் இருந்து எதிர்ப்பு வந்த பொழுது படுகொலைகள், கலவரங்கள் நடத்தி தமிழர்களை ஒடுக்குவது என்பதுதான் 72-லும் 77-லும் நடந்தன.

ஈழத் தமிழர்களின் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரை தன்னாட்சி கோரிக்கைக்காக எல்லாரும் ஒரே கூட்டணியில் நின்று போராடினார்கள். 1977 தேர்தலில் அவர்கள் வெற்றி பெற்றார்கள். அதற்கு பிறகு நடந்த தேர்தல்களிலும் அவர்கள் வெற்றி பெற்றார்கள். அவர்கள் ஈழத் பிரதேசங்களுக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தன்னாட்சி வாங்கித் தந்து விடுவோம் என்று போக்கு காட்டிக் கொண்டே இருந்தார்கள். ஆனால் சிங்கள ஆளும் தரப்பின், சிங்களப் பேரினவாதம் தொடர்ச்சியாக எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் குழி பறிப்பு செய்து, கிடப்பில் போட்டது. தொடர்ச்சியாக, தமிழ் மக்களை - மலையகத் தமிழர்களாக இருந்தாலும் சரி, ஈழத் தமிழர்களாக இருந்தாலும் சரி - பிரதேச கைப்பற்றுதல், மொழி

அடக்குமுறை, இன அடக்குமுறை, கலவரங்கள் பல நடத்தி ஒடுக்குமுறையை ஏவியது.

இந்த சமயத்தில்தான் தமிழீழத்தில் இருக்கக் கூடிய இளைஞர்கள் மத்தியிலே ஒரு எழுச்சி ஏற்பட்டது. அதாவது TULF என்று சொல்லக் கூடிய தமிழர் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தேர்தல் மூலமாக தன்னாட்சி பெற்று தந்து நமக்கு விடுதலை வாங்கித் தரமுடியாது. ஆயுதப் போராட்டத்தின் மூலமாகத்தான் விடுதலைபெற முடியும். இனிமேலும் தமிழர் கூட்டமைப்பை நம்பிக் கொண்டிருக்க முடியாது என்று முதல் முறையாக பல்வேறு அமைப்புகள், தனித் தனிக் குழுக்கள் தோன்ற ஆரம்பித்தன. சுயநிர்ணய உரிமை கோரிக்கையாக இருந்தாலும் கூட அதனை தேர்தல் அரசியல் மூலமாக, ஓட்டு கட்சி அரசியல் மூலமாகப் பெற முடியாது என்ற கருத்தே இளைஞர் மத்தியிலிருந்தது. ஆயுத போராட்டத்திற்கான ஆதரவு ஈழக் கம்யூனிஸ்டு குழுக்களிலும் ஏற்பட்டது.

இவ்வாறு இளைஞர்கள் மத்தியிலிருந்து பல்வேறு ஆயுத போராட்டக் குழுக்கள் தோன்றின. அதில் முக்கியமாக குட்டிமணி, ஜெகன், தங்கதுரை இப்படிப்பட்டவர்கள் தலைமையில் தோன்றியது TELO என்ற அமைப்பு. உமாமகேஸ்வரன், பிரபாகரன் பேன் றவர்களுடைய தலைமையில் LTTE அமைந்தது. அப்போது ஆயுதப் போராட்டத்தை பற்றி இந்த இளைஞர்கள் மத்தியிலே எந்த மாதிரியான கண்ணோட்டம் இருந்தது?

உலகத்தின் பல நாடுகளிலே மார்க்ஸிய-லெனினிய இயக்கங்கள் நடத்திய ஆயுதப் போராட்டங்கள், குறிப்பாக, இந்தியாவிலே நக்சல்பாரி எழுச்சி, தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த சமயம் அது. அப்பொழுது தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்காவில் க்யூபா போராட்டம், சேகுவேரா இயக்கம், குறிப்பாக இந்தியாவில் நக்சல்பாரி இயக்கம், பிலிப்பைன்ஸ் - இப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் நடக்கும் ஆயுதப் போராட்டங்கள் - கொரில்லா யுத்தங்கள் இந்த இளைஞர்களிடம் பாரிய தாக்கம் செலுத்தின. ஈழத் தமிழர் குழுக்கள் மத்தியிலேயும் கொரில்லா முறையிலே, ஆயுத போராட்டத்தை நடத்தி ஈழத்தை விடுதலை சாதிக்க முடியும் என்கிற ஒரு கண்ணோட்டம் எழுந்தது.

ஆனால், ஒன்றுபட்ட ஒரு கட்சி, அதற்கென்று ஒரு சித்தாந்தம் - தத்துவம், அதற்குக் கீழே ஆயுதப் போராட்டம் என்பது ஈழத் தமிழர்

www.padippakam.com

மத்தியிலே ஏற்படவில்லை. அதற்கு மாறாக, ஈழத் தமிழர் மத்தியிலே, நாடாளுமன்ற முறையின் மூலம் நாம் விடுதலை பெற முடியாது; ஆயுதப் போராட்டத்தின் மூலம்தான் முடியும். அதுவும் எப்படி என்றால், இரகசிய கொரில்லா குழுக்களாக இருந்து கொண்டு, சில தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அந்தத் தாக்குதல் நடவடிக்கைகள் மூலமாக செல்வாக்கு பெறுவது, எதிரியைப் பணிய வைப்பது என்பதுதான் இருந்தது. ஒரு சித்தாந்தபூர்வமான, முறையான மக்கள் யுத்தம் வழியாக, முறையான ஆயுதப் போராட்டம் நடத்துவது என்கிற அறிவும் படிப்பினையும் அடிப்படையில் அவர்களிடம் இல்லை.

இந்த சமயத்திலே ஈழத் தமிழர்கள் மத்தியிலே பிளவுகள் ஏற்படுத்துவது, அழிவு வேலைகள் செய்து ஈழத் தமிழர்களை ஆத்திரம் கொள்ளச் செய்வது போன்ற சில காரியங்களை சிங்கள இனவெறியர்கள் செய்தார்கள். குறிப்பாக 1981-லே சிங்களப் போலீசை ஏவி விட்டு, யாழ் பல்கலைகழகத்தின் மீது தாக்குதல் தொடுத்து, யாழ் நூலகத்திற்கு தீ வைத்து ஆத்திரம் மூட்டும் ஒரு செயலை மேற்கொண்டார்கள். அது ஒரு முக்கியமான சம்பவம். இதனையொட்டி பிரபாகரன் தலைமையிலான குழு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் ரயிலை மறித்துத் தாக்குதல் நடத்தியது. அந்தத் தாக்குதலில் சிங்கள ராணுவத்தினர் 13 பேரை ஆயுதம் தாங்கிய ஈழத் தமிழர் குழு கொலை செய்தது.

அதற்கு முன்பு, பிரபாகரன், உமாமகேஸ்வரன் என்ற (பிளாட்) முகுந்தன் உள்ளிட்டவர்கள் எல்லாம் ஆரம்பத்தில் ஒரே அணியில் தான் இருந்தார்கள். ஆரம்பத்தில் வங்கிக் கொள்ளைகள் மூலம் நிதி திரட்டுவது, சிங்கள வங்கிகளில் கொள்ளை நடத்துவது, சிங்கள அரசு ஆதரவு அதிகாரிகள் சிலரை அழித்தொழிப்பது, சிங்கள ராணுவ வீரர்களைக் கொலை செய்வது போன்ற கொரில்லா தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் திட்டமாக இருந்தன. இந்த கொரில்லா தாக்குதல் நடவடிக்கைகளாலும், பல்வேறு காரணங் களாலும், ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கக்கூடிய இலங்கை தமிழர்களில் கணிசமான இளைஞர்கள் சிங்களப் போலீசால், ராணுவத்தால் சிறை பிடிக்கப்பட்டு இருந்தார்கள்.

1983-இல் ஈழத் தமிழர்கள் மத்தியிலே ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கக்கூடிய குழுக்களுக்கு ஒரே தலைமையில்லாத நிலைமை இருந்தது. ஆரம்பத்தில் தனிப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளில்



படிப்பகம்

www.padippakam.com

ஈடுபட்ட, சிறைப் பிடிக்கப்பட்ட பல ஈழத் தமிழ் இளைஞர்கள் - இவர்கள் எல்லாம் சிங்கள பிரதேசங்களிலே சிறை பிடிக்கப்பட்டு இருந்தவர்கள். புலிகளால் கொல்லப்பட்ட 13 சிங்கள இராணுவத்தினரின் பிணங்களை எடுத்துக் கொண்டு போய் கொழும்பிலே ஊர்வலம் நடத்தி சிங்கள மக்கள் மத்தியிலே இனவெறியைத் தூண்டுவதை சிங்கள அரசு மேற்கொண்டது.

அதையொட்டி, கொழும்பு உட்பட சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் சிங்கள இனவெறியர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்கள், ஈழத்தில் வாழ்ந்த தமிழர்களை சிங்கள ராணுவம் படுகொலை செய்தது. படுகொலை தொடங்கிய ஜூலை 27, 28 நாட்களில் வெலிக்கடை சிறையிலிருந்த குட்டிமணி, ஜெகன், தங்கதுரை உள்ளிட்ட 35 ஈழ விடுதலைப் போராளிகள் படுகொலை செய்யப் பட்டனர். சிங்கள கிரிமினல் கைதிகளை ஏவிவிட்டு ஈழ விடுதலைப் போராளிகளின் கண்களைத் தோண்டியும், உயிருடன் எரித்தும், உறுப்புக்களை அறுத்தும் இந்த படுகொலைகளைக் குரூரமாகச் செய்தனர். இதைப் பற்றிய ஆவணங்கள் இருக்கின்றன. இக்கொடுமைக்கு நேரடி சாட்சிகளாக இருந்தவர்கள் - காந்தியவாதிகளாக இருந்தும் ஈழ மக்களுடைய உரிமைக்காகப் போராடியவர்கள் - ஈழத் தமிழர்கள் ஆவணங்களாக எழுதியிருக்கிறார்கள்.

இனவெறி பிடித்த சிங்களக் கைதிகளை, சிறையிலிருக்கும் கைதிகளை விடுதலை செய்து, தமிழ் போராளிகள் உள்ள சிறைச்சாலைகளுக்குள் அனுப்பி அவர்களை ஒரேடியாகக் கொன்று குவித்தார்கள். ஈழத் தமிழர்கள் வரலாற்றிலே கருப்பு சூலை என்று அழைக்கப்படும் அக்காலகட்டத்தில்தான் இப்படுகொலைகள் நடந்தன. அதை ஒட்டி ஈழத் தமிழர்கள் மிகப் பெரும்பான்மையான அளவுக்கு அகதிகளாக தமிழகத்திற்கு வந்து சேர்வது தொடங்கியது. அப்போது தமிழ்நாட்டிலே மிகப் பெரிய எழுச்சி ஏற்பட்டது. பள்ளி, கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்கள் திரண்டு போராடினர். ஒவ்வொரு ஊரிலும் இதற்கு நிதிகள் திரட்டப்பட்டது. ஜெயவர்த்தனே தலைமையிலான சிங்கள அரசுக்கு எதிராக மிகப் பெரிய எழுச்சி ஏற்பட்டது. ஜெயவர்த்தனேவினுடைய கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

அந்தச் சூழ்நிலையில் நம்முடைய அமைப்பு ஒரு தொடக்க நிலை அமைப்பாக இருந்தது. நம்முடைய வெகுசன அமைப்புகள்



படிப்பகம்

www.padippakam.com

உடனடியாக ஈழத் தமிழருடைய சுயநிர்ணய உரிமைக்கான ஆதரவு முழக்கங்களை முன் வைத்து, அதுதான் மிகச் சரியானது என்று இயக்கங்களை மேற்கொண்டது. அதற்குப் பிறகு ஒரு சில நாட்களிலேயே அப்படி அகதிகளாக ஓடி வந்த போராளிக் குழுக்கள் அப்பொழுது ஆட்சியிலிருந்த இந்திரா காந்தியால் வரவேற்கப் பட்டன. ஓடி வந்த போராளிக் குழுக்களுக்கெல்லாம் தனித் தனி இடங்களிலே வைத்து - ஆயுத பயிற்சி, நிதி உதவி, ஆயுதங்கள் எல்லாம் கொடுத்து மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டு சிங்கள சிவிலியன்களுக்கு எதிராக படுகொலைகள் செய்வதற்கு தூண்டிவிடப்பட்டார்கள்.

அப்பொழுது நம்முடைய கலை இலக்கியப் பத்திரிகையிலே, ஈழத்திலிருந்து அகதிகளாக வரும் மக்களுக்கு இங்கே அகதிகள் முகாம் வைத்துத் தருவதும், அங்கிருந்து வரும் போராளிகளுக்குப் பயிற்சி கொடுப்பதும், ஆயுதங்கள் கொடுப்பதும், நிதி கொடுப்பதும் கருணையினால் செய்யப்படுவது அல்ல, ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்காகச் செய்யப்படுவது அல்ல என்று முதல் கட்டுரையிலேயே சொல்லி இருக்கிறோம். இந்திய அரசாங்கம் ஈழப் போராளிகளுக்கு பயிற்சியும் கொடுத்து, ஆயுதமும் கொடுத்து உதவுவது என்பது இந்திய தெற்கு ஆசியாவிலே தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக ஒரு கருவியாக ஈழப் போராளிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குத்தான் என்கிற கருத்து முன்வைக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து வந்த போராளிகளிலே மார்க்ஸிய - லெனினியத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். அப்பொழுது இலங்கையில் சட்டபூர்வமான கட்சியாக இருந்த இலங்கை கம்யூனிஸ்டு கட்சியின் தலைவராக இருந்த சண்முகதாசன் போன்றவர்கள் கூட இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். இந்தியா ஈழத் தமிழர்களை ஆதரித்து வரவேற்பதும், அகதிகள் முகாம் அமைத்துக் கொடுத்து, ஆயுதப் பயிற்சி கொடுப்பதும், இந்திய மேலாதிக்க நலன்களுக்கானதுதான். சுயநிர்ணய உரிமை முழக்கத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஈழத் தமிழர்களினுடைய சுயநிர்ணய உரிமைக்காக ஈழ மக்கள் ஆதரவு திரட்டப்பட வேண்டும். கொரில்லா போராட்டமும் உலக நாடுகளின் அனுபவங்களின் அடிப்படையில் நடத்தப்படவேண்டும் என்று நாம் தெளிவாகச் சொன்னோம்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், அப்பொழுது நாம் ஒரு சக்தியாக வளர்ந்திருக்க வில்லை. விடுதலைப் புலிகளுக்கு மாற்றாக ஒரு சக்தியாக ஈழத்திலே இருக்கக்கூடிய கம்யூனிஸ்டுகள் வளருவதற்கு முன்பாகவே சிங்கள இனவொடுக்குமுறை மிகப் பெரியதாகவும் அதிவேகமாகவும் வந்தது. ஈழத் தமிழர்கள் மிகப் பெரிய அளவில் படுகொலை செய்யப்படுவது, அகதிகள் மிகப் பெரிய அளவில் ஓடி வருவதும், போராளிகள் பலரும் இங்கே ஓடி வருவதும், அவர்கள் இந்திய அரசாங்கத்திடம் தஞ்சம் அடைவதும் நடந்தது. 'இங்கே தமிழர்களுடைய ஆதரவைப் பெறுவது என்பது இங்கு ஏற்கெனவே செல்வாக்காய் இருக்கக்கூடிய ஓட்டு கட்சிகளைக் நம்பித்தான் செய்ய முடியுமே தவிர, இங்கே சிறுபான்மையாக இருக்கக் கூடிய, சிறு சிறு குழுக்களாய் இருக்கக் கூடிய மா-லெ குழுக்கள், புரட்சிகர இயக்கங்களை நம்பி இருக்க முடியாது. ஏற்கெனவே மக்கள் ஆதரவு பெற்ற ஓட்டுக் கட்சிகளால் மட்டும்தான் தங்களுக்கு உதவ முடியும்' என்ற நம்பிக்கையிலே அவர்கள் வந்தார்கள். இந்திய அரசாங்கத்தை, இந்திய ஓட்டுக் கட்சிகளை நம்பி தங்களுடைய எல்லா உரிமைகளையும் அவர்களிடம் அடகு வைப்பது என்பது பயனற்றது என்ற நம்முடைய வாதத்தை அவர்களால் ஏற்றுக் கொள்ளவில்லை.

''சிங்களப் பேரினவாதம் ஈழத் தமிழர்களைப் படுகொலைகள் செய்து ஈழத் தமிழர்களின் கறி யாழ்ப்பாணம் வீதிகளிலே மனிதக் கறியாக விற்கப்படுகிறது. தமிழச்சிகள் பாலியல் வன்முறைக்கு ஆட்படுகிறார்கள். இதை எதிர்த்து முறியடிப்பதற்கு எங்களுக்கு உடனடி தேவை ஆயுதம். அதை உங்களால் தரமுடியுமா? நீங்களே ஆயுதப் போராட்டத்தில் இல்லை. ஆயுதப் போராட்டத்தில் எந்தெந்த குழுக்கள் இருக்கின்றனவோ, பயிற்சி கொடுக்கின்ற நிலையில் எந்தெந்த குழுக்கள் இருக்கின்றனவோ அவர்களை மட்டும்தான் நாங்கள் நம்பக் கூடியவர்களாக இருக்கின்றோம். இந்திய அரசு மட்டும்தான் நாங்கள் ஏற்கக் கூடியதாக உள்ளது. தமிழகத்தை ஒரு பின்புலமாகப் பயன்படுத்துவதற்கு பெரிய அரசியல் கட்சிகள்தான் உதவ முடியுமே ஒழிய, இன்று சிறு சிறு குழுக்களாக உள்ள நீங்களெல்லாம் உதவ முடியாது'' என்று கூறி எமது கருத்து நிராகரிக் கப்பட்டது. இதுதான் வரலாறு.

இந்த கருத்து நிராகரிக்கப்பட்டது மட்டுமல்ல. ஈழத்திலே கம்யூனிச சிந்தனையின் அடிப்படையிலே ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக போராட வேண்டும் என்று சில சிறு குழுக்கள் கூறின.



படிப்பகம்

''நாங்களும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுகிறோம், ஆனால் மக்கள் ஆதரவில், சிங்கள இனவெறிக்கு எதிராக, இஸ்லாமிய மக்கள் - சிறுபான்மை தேசிய இனம், மலையக தேசிய இனத் தமிழர்களை யும், முஸ்லீம் தேசிய சிறுபான்மையினரையும், சிங்கள மக்கள் மத்தியிலே கூட கணிசமான பேர் தமிழ் சிறுபான்மையினருக்கு ஆதரிப்பவர்களின் ஆதரவையும் திரட்டிக் கொண்டு மக்கள் யுத்தமாக நடத்தக் கூடிய ஒரு இயக்கம்தான் ஈழ விடுதலைக்கு சாதகமானதாக இருக்க முடியும்'' என்ற கருத்தைக் கொண்ட ஈழத் தமிழர்கள் மத்தியிலே தனிக் குழுவாக அமைந்த சிறு குழுக்களைச் சேர்ந்தவர் கள் கூட உதாசீனப்படுத்தப்பட்டார்கள். தனிமைப்படுத்தப்பட்டார் கள், அடுத்தக் கட்டமாக, அப்படிப்பட்ட தோழர்கள் விடுதலைப்புலி களால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

பிரபாகரன் தலைமையில், டிராட்ஸ்கியவாதியான ஆண்டன் பாலசிங்கம் வழிகாட்டுதலில் இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தி னரும் கம்யூனிசம் பேசினார்கள். தங்களுடைய சித்தாந்தமாக - சோச லிசம் எமது லட்சியம் என்றார்கள். ஆனால் நடைமுறையில் இவர் கள் எல்லாருமே குறுந்தேசிய இன வாதத்தில் மூழ்கினர். அதாவது ''சிங்கள ராணுவம் ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்கிறது, பாலியல் வன்முறை செய்கிறது. அதற்குப் பதிலாக சிங்கள மக்களை, சிங்கள கிராமங்களிலே புகுந்து சிங்களக் குழந்தைகளைக் கூட கை, கால்களை வெட்டி தெருவிலே வீசியெறிந்து, அவர்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இப்படித்தான் அவர்களிடமும் பய பீதியை உருவாக்க முடியும்'' என்றனர். இதற்கு மாறாக, சிங்கள மக்களிடையே மனிதா பிமானத்தைப் பற்றிப் பேசுவது பயன் தராது. அதையெல்லாம் கம்யூ னிஸ்டுக்காரன்தான் பேசுகிறான். ஆகவே, கம்யூனிஸ்டுகளும் நம்மு டைய எதிரிதான் என்றனர்.

''இன்றைக்கு இலங்கையே இரண்டு கூறுகளாகப் பிரிந்து நிற்கிறது, ஒன்று சிங்கள பேரினவாதம், இன்னொன்று ஈழத் தமிழர் களினுடைய உரிமைப் போர். இப்படி இரண்டு கூறுகளாகத் தான் இருக்கிறதே ஒழிய, நடுவிலே ஒன்றுமே கிடையாது. ஆகவே, தனி ஈழம்தான் உடனடியாக தீர்வு, சிங்களத் தொழிலாளர்கள், மக்கள் என் றெல்லாம் கிடையாது, ஈழத்தில் வாழும் சிங்களவர், முஸ்லீம்கள் எல்லாரும் வெளியேற வேண்டும், எல்லாரும் படுகொலை செய்யப்பட வேண்டும்'' என்றார்கள். இந்தக் கருத்து இந்திய உளவுத் துறையாக அப்பொழுது உருவாக்கப்பட்டிருந்த 'ரா'வால் புகுத்தித்

www.padippakam.com

திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்பட்டது. ஆனால் அங்கிருந்த கள நிலைமை பற்றி வந்த தகவல்களும், செய்திகளும் சொன்ன உண்மை நிலை அதுவல்ல. சிங்கள சிவிலியன்கள், சிங்கள மக்கள் மத்தியிலே பய பீதியை உருவாக்கித்தான் பணிய வைக்க முடியும் என்ற கருத்தை 'ரா' என்கிற இந்திய உளவுப் படை பிரச்சாரம் செய்து, ஆயுதப் பயிற்சி கொடுத்து, ஈழப் போராளி குழுக்களை அனுப்பி வைத்தார்கள்.

அந்த சமயத்தில் இலங்கையிலே என்னென்ன போராளி அமைப்புகள் இருந்தன. பிரபாகரன் தலைமையிலான LTTE, சிறீ சபாரத்தினம் என்பவர் தலைமையிலான டெலோ, பாலகுமாரன், ரத்தினசபாபதி, சங்கர் இப்படிப்பட்டவர்கள் தலைமையிலான ஈராஸ், பத்மநாபா தலைமையிலான EPRLF இந்த நான்கு அமைப்புகளும் மிகப் பெரிய அமைப்புகளாக அன்று கருதப்பட்டன. இந்த நான்கையும் தவிர உமாகேஸ்வரன் என்ற முகுந்தன் என்பவர் தலைமையிலான பிளாட். இவற்றுக்கு வெளியே கம்யூனிசத்தை சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்ட இருக்கக்கூடிய NLFT போன்ற சிறு சிறு குழுக்களும் இருந்தன. ஆனால் இந்திய அரசாங்கத்தினாலே, 'ரா'வாலே அங்கீகரிக்கப்பட்டவை முதல் ஐந்து அமைப்புகள்தாம். இந்த ஐந்து அமைப்புகளுக்கும் இந்தியா 'ரா'மூலம் ஆயுதங்களும், நிதியும் பயிற்சியும் கொடுத்தது.

அப்பொழுது இந்திய அரசாங்கத்தை ஆதரிப்பது பற்றியும், 'ரா'-வினுடைய சர்வதேசியப் பொறுப்பு என்ன, எதற்காக உருவாக் கப்பட்டது என்பது பற்றியும் நாம் முதல் முறையாக எழுதினோம். அப்பொழுது நாம் சொன்ன அனைத்துக் கருத்துக்களும் போராளிக் குழுக்களால் நிராகரிக்கப்பட்டன. முதல் விசயம், இந்திய உளவுப் படையை நம்பி ஈழ விடுதலைப் போராளி அமைப்புகள் போகலாமா, அவர்களுடைய பயிற்சி, நிதி போன்றவற்றை ஏற்றுக் கொள்ளலாமா என்கிற கேள்விகள் எழுப்பப்பட்டன, அதற்கு "வேறு என்ன வழி இருக்கிறது? நீங்களோ சிறு சிறு குழுக்களாக இருக்கிறீர்கள். அவர்கள்தான் எங்களது உடனடித் தேவையான - சிங்கள ராணுவத்தை எதிர்ப்பதற்கான - ஆயுதமும், பயிற்சியும், நிதியும் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் படித்தவர்கள், திறமைசாலிகள் - 'ரா' என்ன, எம்.ஜி.ஆர். என்ன, இந்திரா காந்தி என்ன, யாரும் எங்களைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. இவைகள் எல்லாவற்றையும் நாங்கள்



படிப்பகம்

www.padippakam.com

பயன்படுத்திக் கொண்டு சுயமாக நின்று விடுவோம்'' என்பதுதான் அவர்களுடைய கருத்தாக இருந்தது.

ஆக, 1983 ஜூலை இனப் படுகொலையை தொடர்ந்து, இலங்கையிலிருந்து மிகப் பெருமளவிற்கு அகதிகளும், போராளிகளும் இந்தியா வந்தனர். இந்தியா வந்த பிறகு இந்திய அரசையும், இங்கிருக்க கூடிய தேர்தல் அரசியல் கட்சிகளையும் நம்பித்தான் மக்கள் ஆதரவை திரட்ட முடியும், சிங்கள ராணுவத்திற்கு எதிரான போரிலே தேவையான சக்திகளைத் திரட்டவும் முடியும் என்பதுதான் ஈழப் போராளிக் குழுக்களினுடைய நிலை. இதற்காக 'ரா' என்ற இந்திய உளவுப் படையினுடைய ஆதரவைப் பெறுவது என்பதுதான் எல்லா ஈழப் போராளி அமைப்புகளும் மேற்கொண்ட வழி. இந்த 'ரா' அதன் வரலாறு பற்றி நாம் தனியே பார்க்க வேண்டி இருக்கிறது.

### வங்கதேசம், ஈழம் இனவாதிகளின் விபரீத எதிர்பார்ப்புகள்

1967-லேதான் இந்த 'ரா' என்ற ஒரு அமைப்பை முதன்முதலாக இந்திய அரசு உருவாக்கியது. அதன் பிறகு இந்த 'ரா' செய்த முதல் வேலை வங்கதேசம் என்றிருந்த கிழக்கு பாகிஸ்தானில் ஊடுருவி, அங்கே தனிநாடு கோரிக்கையை எழுப்பி, அதற்கான அரசியல் அமைப்புகளை, போராளி அமைப்புக்களை உருவாக்கி உள்ளிருந்தே மேற்கு பாகிஸ்தானை எதிர்த்து போரை தொடங்குவது; இதற்காக உருவாக்கப்பட்டதுதான் 'ரா'. இந்த அமைப்பைப் பற்றித் தெளிவாகப் பல ஆவணங்கள் இப்பொழுது இருக்கின்றன.

வங்கதேசத்தில் ஊடுருவி, வங்கதேசத் தந்தை என்று சொல்லப்பட்ட, முஜிபூர் ரஹ்மானுடைய கட்சிக்குள் ஊடுருவி, தனிநாடு கோரிக்கையைத் தூண்டிவிட்டது. வங்க மக்களினுடைய சுயநிர்ணய உரிமை என்பது நியாயமாக இருக்கிறது, அது சரியானதுதான், கிழக்கு பாகிஸ்தான் என்று அப்பொழுது இருந்த பிரதேசத்தை தனிநாடாகக் கோருவதற்கு வங்க மொழியை தாய்மொழியாகக் கொண்ட, மக்களுக்கு முழு உரிமையும் உண்டு. ஆனால் அந்தக் கோரிக்கையை இந்திய அரசின் தயவிலே நின்று அடைவது என்பது, முஜிபூர் ரஹ்மான் - இன்றைக்கு பிரபாகரன் போன்றவர்கள் பின்னாளில் செய்தது போல - இந்திய அரசினுடைய ஆதரவிலே நின்று வங்க தேசத்தை அடைவது என்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

இப்பொழுது எப்படி இலங்கையிலே சிங்கள இனவெறி ராணுவம் மிகப் பெரிய அளவிற்கு ஈழத் தமிழர்களைக் கொன்றொ ழித்து, மிகப் பெரிய அளவிற்கு அகதிகளாகவும் விரட்டியடித்துத் தமிழகத்திற்கு வரும்படியாக ஒரு நிலைமை ஏற்பட்டதோ, அதே போல மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்த ராணுவம் மிகப் பெரிய அளவிற்கு கிழக்கு பாகிஸ்தான் மக்களைப் படுகொலை செய்தது; அப்போது பாகிஸ்தான் நாடாளுமன்றத்திலே முஜிபூர் ரஷ்மானு டைய அவாமி லீக் கட்சி பெரும்பான்மை இடத்தைப் பெற்றிருந்தது. பாகிஸ்தான் முழுமைக்கும் ஆட்சியமைக்கக்கூடிய பலத்தை வங்க தேசத்தினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் பெற்றனர்.

ஒன்று, ஆட்சியதிகாரத்தை கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒப்படைக்க வேண்டும் அல்லது அவர்களுடைய உரிமைகள் முழுவதும் பறிக்கப்பட வேண்டும். அந்த நிலைமையில் மேற்கு பாகிஸ்தான் அதிகாரத்தை ஒப்படைக்க மறுத்தது. அதற்கு எதிராக இன்றைக்கு வங்க தேசம் என்று சொல்லக் கூடிய கிழக்கு பாகிஸ்தானில் மாபெரும் மக்கள் எழுச்சி நடந்தது. அந்த மக்கள் எழுச்சியை ஒடுக்கும் நடவடிக்கையை பாகிஸ்தான் ராணுவம் மேற்கொண்டது. அந்த மக்கள் எழுச்சியை ஒடுக்கும் போது கணிசமான அளவு வங்கதேசத்தைச் சேர்ந்த மக்கள் மணிப்பூர், திரிபுரா, மேற்கு வங்காளம் போன்ற இந்தியப் பகுதிகளுக்கு அகதி களாக வந்து சேர்ந்தனர். அப்படி அகதிகளாக வந்தவர்களை முக்தி வாஹினி என்ற புதிய கொரில்லாப் படையமைத்து, பயிற்சி கொடுத்து, ஆயுதம் கொடுத்து மீண்டும் வங்கதேசத்திற்குள்ளே அனுப்பி, தனிநாடு கோரிக்கை என்கிற பெயரில் போராட்ட அமைப்பை உருவாக்கி, இந்தியப் படை கிழக்கு பாகிஸ்தானிலே ஊடுருவுவதற்கு, ஒரு தளம் அமைத்துக் கொடுத்ததுதான் 'ரா'. பின் னாளில் 'ரா'-விலிருந்து ஓய்வு பெற்ற பல அதிகாரிகளே இதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

''கிழக்கு வங்கத்திலேயே, கிழக்கு வங்க மக்கள் தானாகவே முக்தி வாஹினி என்ற பெயரிலே போராளி அமைப்பை உருவாக்கிக் கொண்டார்கள். அங்கேயே முஜிப் நகர் என்ற தளப் பிரதேசத்தையும் போட்டி அரசையும் அமைத்துக் கொண்டார்கள். அப்படிப்பட்ட ஒரு போட்டி அரசுக்கும் மக்களுக்கும் எதிராக பாகிஸ்தான் ராணுவம் கொலைவெறிப் போர் நடத்தியது. அந்த போரிலே முக்தி வாஹினி உள்ளிட்ட கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த விடுதலைப் போராளிகள்



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு இந்திய ராணுவமும் இந்திய அரசும் உதவின'' என்பதுதான் வெளியிலே சொல்லப்பட்ட செய்தி.

ஆனால் உண்மை என்னவென்றால் மேற்கு வங்காளத்திற்கு வந்த அகதிகளைக் கொண்டு முக்தி வாஹினி என்கிற ஆயுதந்தாங்கிய அமைப்பை உருவாக்கி, அதனுடைய தலைமை நிலையத்தை முஜிப் நகர் என்ற பெயரில் கல்காத்தாவிலே நிறுவி ஒரு போட்டி அரசாங் கத்தை — அதாவது கிழக்கு வங்க மக்கள் தாங்களாகவே உருவாக்கிக் கொண்ட ஒரு போட்டி அரசாங்கம் என்கிற பெயரிலே ஒரு போட்டி அரசாங்கத்தை 'ரா'தான் உருவாக்கியது. ஆனால், தானே உருவான ஒரு போட்டி அரசாங்கம், ''கிழக்கு வங்காளத்துக்கு இந்திய ராணுவம் வந்து எங்களை காப்பாற்ற வேண்டும். நாங்கள் தனிநாடு அடைவ தற்கு இந்தியா ராணுவம் உதவ வேண்டும்'' என்று கோரியதைப் போல கூறினார்கள். கல்கத்தாவிலே உள்ள முஜிப் நகரிலே இருக்கக் கூடிய முக்தி வாஹினி என்கிற 'ரா' உருவாக்கிய அமைப்புதான் கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த போராளிகள் விடுத்ததைப் போல ஒரு கோரிக்கையை வைத்தது. அந்தக் கோரிக்கையை ஏற்று, ''அகதிகள் பிரச்சினை பெரிய பிரச்சினையாகி விட்டது, இனி மேல் தாங்கிக் கொள்ள முடியாது'' என்கிற பெயரிலே இந்திய ராணுவம் உள்ளே நுழைந்து, அதிகாரத்தைக் கைப்பற்றி முஜிபுர் ரஹ்மானிடம் ஒப்படைத்தது. இப்படித்தான் நடந்தது என்பது பின்னாளில் இந்தியப் பத்திரிகைகளிலும் செய்திகளாக வெளியிடப்பட்டிருக்கிறது. 'ரா' விலிருந்து இந்திய ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் எழுதிய ஆவணங்களிலே கூட இப்படித்தான் இருக்கிறது.

'ரா'வினுடைய நோக்கம் என்ன? இந்த முக்தி வாஹினியைப் பின் தொடர்ந்து போன இந்திய ராணுவம் உடனடியாகவே அங்கிருந்த சணல் ஆலைகளைக் கைப்பற்றி பிர்லாவிடம் ஒப்படைத்தது. மேற்கு வங்காளத்திலே ஏகபோக சணல் ஆலை அதிபராக இருக்கும் பிர்லா, உடனடியாகவே ஒப்பந்தங்கள் போட்டு, சணல் ஆலைகளுக்குத் தேவையான கச்சாப் பொருட்களைக் கொண்டு உற்பத்தியை மேற்கொண்டார். இதைப்போல இந்திய இராணுவத்தைத் தொடர்ந்து சென்று கிழக்கு வங்காளத்துக்குத் தேவையான உணவு மற்றும் நுகர்பொருட்கள் சந்தையைக் கைப்பற்ற பல பெரு முதலாளிகள் துடித்தனர்.

ஏற்கெனவே, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இருக்கும் பகையைப் பயன்படுத்திக் கொண்டு பாகிஸ்தனைத் துண்டாடு



படிப்பகம்

www.padippakam.com

வதுதான் இந்தியாவின், 'ரா' வின் நோக்கம். அதற்கு கிழக்கு வங்காளத்து மக்களின் சுயநிர்ணய உரிமை, பிரிவினை முழக்கம், அதற்கான தாகம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்வது என்பதுதான் இந்தியாவின் தந்திரம். அதேசமயம், கிழக்கு வங்காளத்தில் இருக்கக் கூடிய மக்கள் தாங்களே சுயமாக விடுதலை படை அமைத்துக் கொண்டு விடுதலை அடைந்து விடக்கூடாது, தங்களுடைய கைக்கூலிகளைக் கொண்ட ஒரு அரசை அங்கு உருவாக்க வேண்டும் என்றும் விரும்பியது. இதற்காகத்தான் இந்திய ராணுவம் அங்கே தலையிட்டது. அதற்குப் பின் அங்கு நடந்தது, இந்தியாவை பொறுத்தவரை வெட்கக்கேடு!

இந்திய ராணுவம் பங்களாதேசை விட்டு விட்டு வெளியேறிய சிறிது நாட்களிலேயே முஜிபுர் ரஹ்மானும், அவரது குடும்பமும் இராணுவப் புரட்சியில் படுகொலை செய்யப்பட்டனர். பாகிஸ்தான் ராணுவத்திலிருந்து பிரிந்து வந்தவர்களைக் கொண்டு இந்தியா அரசு அமைத்துக் கொடுத்த வங்கதேச இராணுவம் தான் இந்தப் படுகொலைகளை நடத்தி, ஆட்சியைப் பிடித்தது. இராணுவப் புரட்சியாளர்களைக் கொன்று மீண்டும் தனது கைப்பொம்மைகளை ஆட்சியில் அமர வைக்க 'ரா' எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் முதல் நடவடிக்கையாக மேற்கண்ட இந்திய எதிர்ப்பு முடிவுகளை எடுத்த னர். இப்படித்தான் வங்கதேசம் உருவானது.

வங்க மக்களின் சுயநிர்ணய உரிமை நியாயமானது, வங்கதேசம் ஒரு தனி தேசமாக, தனிநாடாக இருக்கும் உரிமையுடையது. ஆனால் அது வேறொரு நாட்டினுடைய அடிமையாக இருக்கக் கூடாது என்பது தான் சரி; நாமும் அதைத்தான் சொல்கிறோம். ஆனால், அப்படிப்பட்ட சுய அதிகாரத்தைக் கொண்ட, இறையாண்மை கொண்ட ஒரு வங்க தேசம் உருவாகிவிடக் கூடாது, அதற்கு முந்திக் கொண்டு தன்னுடைய கைக்கூலிகளினுடைய ஆட்சியை அங்கே உருவாக்க வேண்டும் என்று இந்திய ராணுவமும், உளவுப் படையும் செயல்பட்டன.

அதற்குப் பிறகு இன்றும் கூட திரிபுரா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம் பழங்குடி மக்களுக்கு ஆயுதம் கொடுத்து, பயிற்சி அளித்து, ஏவிவிட்டு வங்க தேசத்தில் கணிசமான அளவில் உள்ள மலைவாழ் மக்களுக்கு தனி அதிகாரம் வேண்டும் எனப் போராட



படிப்பகம்

www.padippakam.com

வைக்கிறது, இந்தியா. இதன் மூலம் வங்க தேசம் ஒரு சுயாட்சி பெற்ற தனிநாடாகத் தொடர்ந்து இல்லாமல், தனது ஆதிக்கத்திலேயே தொடர்ந்து இருக்க வேண்டும் என இந்திய அரசு நினைக்கிறது. இப்படித்தான் அண்டை நாடுகளின் விடுதலைக்கு இந்தியா 'உதவுவது' என்பது, அதன் மேலாதிக்க நோக்கத்தை முதன்மையாகக் கொண்டதாக இருக்கிறது.

இலங்கையிலிருந்து போராளிகள் தமிழகம் வந்தபோது, அவர்களை முதலில் வரவேற்றவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்கள். அவர்களுக்கு உணவு கொடுத்தார்கள், வாழ்விடம் கொடுத்தார்கள். அதற்குப் பிறகுதான் இந்திய அரசு வந்தது. ஈழத் தமிழர்களைத் தனியே விட்டுவிடக் கூடாது. இவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த மக்களுடன் கலந்து விடக் கூடாது. தங்களது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு மக்களிடம் நேரடியாக ஆதரவு பெற்று விடக் கூடாது என்றுதான் அவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து அகதிகள் முகாம் என்று சொல்லப்படும் திறந்தவெளிச் சிறையில் வைத்தது. எம்.ஜி.ஆரினுடைய காலத்தில் இது நடந்தது.

ஈழ மக்களுடைய சுயநிர்ணய உரிமை என்ற முழக்கத்தை முன் வைத்து தமிழகத்திற்கு ஆதரவு தேடி வந்த முற்போக்குச் சிந்தனையுடைய சிறு சிறு குழுக்கள், இயக்கங்கள் எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, இந்திய அரசின் கீழ், அதனுடைய உளவுப்படையின் கீழ் சில போராளி அமைப்புகளை இந்தியா திரட்டியது. ஈழ விடுதலை என்பது எப்படிச் சாதிக்க முடியும், அதற்கான சமூக அடிப்படை என்ன, மக்கள் ஆதரவு என்ன, அப்படி விடுதலை பெற்ற ஈழம் யாருடைய ஆதரவின் கீழே நிற்க முடியும் - என்பது போன்ற தொலைநோக்குப் பார்வை இந்தக் குழுக்களிடம் கிடையாது.

சிங்கள இனவெறி ராணுவத்தை ராணுவ ரீதியில் வெற்றி பெற்று விட்டால் தனி ஈழம் மலர்ந்து விடும் என இவர்கள் நினைத்தார்கள். அப்போதைக்கு உடனடித் தேவை ஈழ மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த ஆயுதம் தேவை. மக்களுடைய ஆதரவைப் பெற ஆயுதம் தேவை. மக்கள் தங்கள் பின்னால் வரவேண்டும், தங்களது சொற்படி கேட்டு நடப்பவர்களாக மட்டுமே மக்கள் இருக்க வேண்டும். இதற்கு இராணுவத் தலைமை, இராணுவத் தீர்வுதான் ஒரே வழி. இதற்கு உதவக் கூடிய நிலையில் யார் இருக்கிறார்கள் என்றால் அது இந்தியஅரசுதான். ஏற்கெனவே



படிப்பகம்

வங்கதேசத்தை விடுதலை செய்து கொடுத்தது போல, இந்தியஅரசு தங்களுக்கும் ஈழத்தைப் பிரித்துக் கொடுக்கும் என நம்பினார்கள்.

அப்படி இந்தியா வங்க தேசத்தை விடுதலை செய்து கொடுக்கவில்லை என்பதும், அது எப்படி வங்கதேசத்தைத் தன்னுடைய அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்தது என்பதும் இவர்களுக்கும் தெரியும். இது பலமுறை அக்குழுக்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டது. ''இந்தியாவிடம் நீங்கள் பெறும் உதவி என்பது, 'ரா' விடம் நீங்கள் வைத்திருக்கும் உறவு என்பது, நீண்ட கால நோக்கில் உங்களை அடிமைப்படுத்துவது, கைக்கூலிகளாக்குவது, சுயமாக நின்று சுயநிர்ணய உரிமையை, ஈழ விடுதலையைநீங்கள் அடைந்து விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தியா முந்திக் கொண்டு தலையீடு செய்கிறது. இந்த ஈழப் போரின் ஊடாகவே இலங்கை முழுமையும் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற உள் நோக்கத்துடன் தான் 'ரா' செயல்பட்டது. வங்க தேசத்திலும் அந்த நோக்கத்துடன்தான் செயல்பட்டது. வங்கதேசம் மட்டுமல்ல, சிக்கிமை இந்தியாவுடன் இணைத்துக் கொண்டது, இந்த 'ரா'வின் மூலம் பூடானை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துவிட்டது, நேபாளத்தை தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது. ஆப்கானிஸ்தானத்தில் ஊடுருவி தன்னுடைய சக்திகளைக் கொண்டு தன்னுடய செல்வாக்கு மண்டலத்தின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிக்கிறது'' என்று பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டது.

ஆனால், ஈழப் போராளிகள் 'ரா'வின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்தார்கள். அவர்கள் இடுப்பில் ஒரு கயிறு கட்டி ''நீ போய் தாக்குதல் நடத்து, அந்த தாக்குதல் என்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும், அந்த கட்டுப்பாட்டை மீறிப் போய்விடக் கூடாது'' என்ற முறையில் இந்திரா காந்தி சொன்னதை, ராஜீவ்காந்தி சொன்னதை, இவர்கள் அப்படியே செய்தார்கள்.

இந்த 'ரா' பாகிஸ்தானில் கூட பல சதி வேலைகளைச் செய்துள்ளது. இன்றைக்கும் செய்தி ஏடுகளிலே கூடப் பார்க்கலாம், சரப்ஜித் சிங் என்பவருக்கு 'ரா' ஏஜெண்டாகச் செயல்பட்டு பாகிஸ்தானில் குண்டு வைப்புகளில் ஈடுபட்டதற்காகத் தூக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவர் ஒரு 'ரா' ஏஜெண்டு என்ற உண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது. அதே சரப்ஜித் சிங், தான் இந்திய ராணுவத்துக்கு வேலை செய்ததாகவும் அதற்காகத் தான் வெட்கப்பட

www.padippakam.com

வில்லை என்றும் அறிக்கை விடுகிறார். இப்படி மேற்கு பாகிஸ்தானில் சதி வேலைகள் செய்து, கலவரங்களை மூட்டி, அங்கே ஒரு நிலையற்ற நிலையை ஏற்படுத்துவதற்கான உளவுப் படையாக 'ரா' செயல்பட்டுள்ளது.

மாலத்தீவிலும் இந்திய உளவுப் படை தனது கை வரிசையைக் காட்டியிருக்கிறது. இலங்கைக்குத் தெற்கே உள்ள மாலத்தீவில் கையூம் என்கிற சர்வாதிகாரி, 30 ஆண்டுகளாக சர்வாதிகார பாசிச ஆட்சி நடத்தி வந்தான். அங்கே எதிர்கட்சிகள் எதையும் அவன் செயல்பட விடுவதில்லை. எதிர்கட்சிகளில் ஒரு பிரிவு ஈழப் போராளிக் குழுக்களில் ஒன்றாக இருந்த 'பிளாட்' அமைப்பை ரகசிய மாக வரவழைத்து, ஆட்சிக் கவிழ்ப்பு நடத்த முயற்சித்தது. மாலத் தீவில் ஆட்சி கவிழ்ப்பு நடத்தி, கையூமைத் தூக்கியெறிந்து, ஒரு மாற்று அரசை நிறுவுவதற்கு மாலத்தீவைச் சேர்ந்த அந்த எதிர்கட்சி செயல்பட்டது. ஒருபுறம் 'ரா'வின் செல்லப்பிள்ளையாக இருந்து கொண்டு, இராணுவ சர்வாதிகாரிக்கு எதிரான அந்த கலகத்தை நடத்த 'பிளாட்' முயன்றபோது அதை ஒடுக்குவதற்கு இந்திய ராணுவம்தான் போய் நின்றது. இதுதான் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை.

ஆனால், ''நேரு காலத்தில் இந்தியாவிற்கு ஒரு சரியான வெளியுறவு நடைமுறை இருந்தது, இந்திராகாந்தி காலத்திலே ஈழ மக்களுக்கு ஆதரவாக ஒரு சரியான நடைமுறை இருந்தது, ராஜீவ் காந்தி காலத்திலே கூட ஆரம்பத்திலே சரியான ஒரு நடைமுறை இருந்தது. பார்த்தசாரதி அயல் உறவுச் செயலாளராக இருந்த பொழுது, ஏ.பி. வெங்கடேசன் இந்திய அயல் உறவுச் செயலாளராக இருந்த பொழுது இந்திய அரசுக்கு சரியான வழிகாட்டுதல்கள் கொடுத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு மலையாளி, பார்ப்பன அதிகாரிகளும் இந்திய அயல் உறவுத் துறையில் புகுந்து விட்டார்கள். அவர்கள் வழிகாட்டுதல் தவறாக இருக்கிறது'', என்று புலிகளும் தமிழினவாதிகளும் கூறுகிறார்கள்.

இந்திய அரசைப் பொறுத்தவரைக்கும் இலங்கை தமிழர்களைப் பற்றி, ஈழத் தமிழர்களைப் பற்றி, இலங்கை அரசைப் பற்றி ஒரே சீராக, ஒரே வகையான ஒரு கொள்கையைப் பின்பற்றி வந்திருக்கிறது. அது இந்திய மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதுதான். சர்வதேச நிலைமைகளை ஒட்டி அவர்கள் அவ்வப்பொழுது மாறுபாடான கொள்கைகளை வகுத்துக் கொண்டு, செயல் தந்திரங்களை வகுத்துக் கொண்டு, செயல்பட்டு வந்திருக்கிறார்கள்.



படிப்பகம்

விழிப்புணர்வு பெற்ற சில சிறு ஈழப் போராளிக் குழுக்களும் , தனிநபர்களும் கூட, ''இந்திய மக்களும், இந்திய அரசாங்கமும் வெறும் உதவி அளவுக்குச் செய்தால்போதும், எங்களுக்கு ஆயுதப் பயிற்சி, ஆயுதங்கள் தருவது போதும். நீங்கள் வழிகாட்டுவதாக இருப்பது வேண்டாம்'' என்றுதான் சொன்னார்கள். இந்திய அரசின் மேலாதிக்க நலன்களைக் காண மறுத்தனர். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரைக்கும் இலங்கை மீதான மேலாதிக்கத்தை நிறுவுவதை யே நேக்கமாகக் கொண்டிருந்தது. இங்கு உள்ள ஈழ ஆதரவு ஓட்டுக் கட்சிகள், தமிழினவாத இயக்கங்கள்தாம் முன்பு, 1980-களின் மத்தி யில் இந்திய ராணுவம் இலங்கைக்குப் போக வேண்டும் என்றார்கள். இந்தக் கோரிக்கையை எம்.ஜி.ஆர் வைத்தார், கருணாநிதி வைத்தார், நெடுமாறன் வைத்தார், வீரமணி வைத்தார் - இப்படி இங்குள்ள அமைப்புகள் எல்லாமும் சேர்ந்து இந்திய ராணுவத்தை வழியனுப்பி வைத்தார்கள். ''இவர்கள் போய் ஈழத் தமிழர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுப்பார்கள்'' என்றெல்லாம் கூறினார்கள்.

இந்தியாவில் இருக்கக்கூடிய நம்மைப் போன்ற ஒரு சில மார்க்சிய-லெனினியக் குழுக்கள் மட்டுமே இந்திய ராணுவம் இலங்கைக்குப் போவது தவறானது என எதிர்த்தார்கள். இவர்களது நோக்கம் இலங்கையில் ஒரு மேலாதிக்கத்தை நிறுவுவதுதான் என்று கூறினோம். அது உண்மைதான் என்று ஒரு சில மாதங்களிலேயே நிரூபிக்கப்பட்டது. இந்திய ராணுவம் அமைதிப் படையாக போகவில்லை. இதனைக் கருணாநிதியின் வார்த்தைகளிலே சொல்லப் போனால் ''இந்திய ராணுவம் என்பது அமைதிப் படையாக இல்லை, அமளிப் படையாக மாறியது.''

### ஈழப் போராளிக் குழுக்களின் அரசியல் பிறழ்வுகள்

ஈழ விடுதலைக்காகப் போராடிய குழுக்களிடம், ஈழ விடுதலையை எப்படிச் சாதிப்பது, அதற்கு என்ன போராட்ட முறையை பின்பற்றுவது, அதற்கான வழிமுறை என்ன, எந்த சக்திகளை சார்ந்து அதனைச் சாதிக்க முடியும் என்ற பார்வை கிடையாது. இங்கேயிருக்கிற அரசியல் கட்சிகளிடமும் தமிழினக் குழுக்களிடமும் கிடையாது. ஈழ விடுதலைக்குச் சரியான தீர்வு ஒரு நீண்ட கால மக்கள் யுத்த பாதைதான். ஈழம் போன்ற ஒரு சிறு பிரதேசம் தனி நாடாக நிற்க வேண்டும் என்று சொன்னால், முதலில் மிக அடிப்படையான தேவை அப்படிப்பட்ட ஒரு தனிநாடு

www.padippakam.com

மக்களுடைய ஒருமனதான ஆதரவு பெற்றதாக இருக்க வேண்டும். விடுதலை இயக்கம் ஈழத் தமிழர்களுடைய எவ்வித நிபந்தனையும் அற்றதாக, ஒருமனதான ஆதரவு பெற்றதாக இருக்க வேண்டும்.

ஈழத்திலிருந்த தமிழரசுக் கட்சி முதலிய தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்றப் பாதையின் மூலமாக சேனநாயகா-ஜெயவர்த்தனே கட்சியிடமும், பண்டாரநாயகா கட்சியிடமும் பேச்சுவார்த்தை நடத்தி நாடாளுமன்ற முறையின் மூலமாக தன்னாட்சியை பெற்றுவிட முடியும் என்ற முழக்கத்தை முன் வைத்தவர்கள். இன்னொரு பிரிவு, இளைஞர் பிரிவு, பல்வேறு குழுக்களாக பிரிந்து நின்று - ஆயுதப் போராட்டத்தின் மூலமாக ஈழ விடுதலையைச் சாதிக்கப் போகிறோம் என்று சொன்னவர்கள்.

அவர்களது ராணுவப் பாதை சரியா, தவறா என்பதெல்லாம் இருக்கட்டும். அவர்களது அரசியல் பாதை என்ன? ஒரு நாடு விடுதலைபெற வேண்டுமென்றால், அந்தப் பகுதியினுடைய மக்களிடையே ஒன்றுபட்ட தலைமையும், முழு மக்களுடைய எவ்வித நிபந்தனையுமற்ற ஆதரவும் தேவை. ஆனால் ஈழத்தில் ஒடுக்கப்பட்டிருக்கும் மக்கள் அனைவரும் சாதி ரீதியாகப் பிரிந்திருக்கிற நிலைமை இருந்தது. ஈழ விடுதலைக்கு இந்த மக்களை ஒன்றுபட்ட தலைமையின் கீழ், ஒன்றுபட்ட கருத்தின் கீழ் கொண்டு வருவதுதான் முதல் நிபந்தனை. ஈழ விடுதலைப் போராட்டம் ஒரு போராக வெடித்த வடக்கே, தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE-எல்டிடிஇ), தமிழீழ விடுதலை அமைப்பு (TELO-டெலோ), புரட்சிகர ஈழ மாணவர் அமைப்பு (EROS-ஈராஸ்), தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பு (PLOTE-பிளாட்) போன்ற போராளிக் குழுக்கள் தோன்றின. கிழக்குப் பகுதியில் ஒரு பெரும்பான்மை இயக்கமாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF-ஈபிஆர்எல்எஃப்) வந்தது. ஈபிஆர்எல்எஃப் என்பது பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் பெரும்பான்மையாக இருக்கக்கூடிய ஒரு அமைப்பாகத்தான் முதலில் தொடங்கியது.

அப்போது கிழக்கில் பெரும்பான்மையாக புலிகள் இல்லை. புலிகள் அமைப்பே ஈழ விடுதலைப் போர் தொடங்கி கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்குப் பிறகுதான் கிழக்கிலே காலடி எடுத்து வைக்க முடிந்தது. இன்னும் சொல்லப் போனால் ஈபிஆர்எல்எஃப் போராளிகளைப் படுகொலை செய்தும் பல்வேறு ராணுவ நடவடிக்கைகளை



படிப்பகம்

மேற்கொண்டும் ஈபிஆர்எல்எஃப் போராளிகளில் பலர் துரோகிகளான பிறகும்தான், கிழக்கிலிருந்து அவர்களை விரட்டியடித்த பிறகுதான் புலிகள் நுழைய முடிந்தது. எல்டிடிஇயும் டெலோவும் வடக்கிலிருந்த மேல்சாதியினர், மேட்டுக் குடியினர் சித்தாந்தம், கண்ணோட்டம் கொண்டவை. இன்னமும் புலிகள் நாங்களெல்லாம் ஆண்ட பரம்பரை என்று குறுந்தேசிய இனவாதம் பேசுகின்றனர். சிங்கள இன வெறியர்கள் எப்படி ஈழத் தமிழர்களை படுகொலை செய்கிறார்களோ, அதேபோல பதிலுக்கு புலிகளுக்கும் ஒரு குறுந்தேசிய இனவெறி - அதாவது சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருமே பகைவர்கள் என்கிற ஒரு குறுந்தேசிய இனவெறி வந்துவிட்டது.

பிற்காலத்தில் ''ஈழத்து முஸ்லீம்களும் நமக்குப் பகைவர்கள். அவர்கள் என்றைக்கு இருந்தாலும் ஈழத் தமிழர்களுக்கு எதிரியாகப் போகக் கூடியவர்கள். முஸ்லீம்களையும் நம்ப முடியாது. அவர்களும் சிங்கள ராணுவத்துக்கு அடிபணிந்தோ, சமரசம் செய்தோ காட்டிக் கொடுக்கக் கூடிய துரோகிகளாவார்கள்'' என்று கூறித் துவேசம் வளர்த்தனர்.

ஒரு தேச விடுதலைப் போராட்டம் வெற்றிபெற இரண்டாவது நிபந்தனை என்னவென்றால், அந்த நாட்டினுடைய ஆளும் அரசு முற்றும் முழுவதாக - அந்த மக்களிடமிருந்து தனிமைப்பட்டிருக்க வேண்டும். அந்த ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் மத்தியிலே முற்று முழுதான ஒரு வெறுப்பு இருக்க வேண்டும். அந்த மக்களுக்குத் தலைமை தாங்கக்கூடிய இயக்கம் ஒரு பிளவுபடாத ஒன்றுபட்ட இயக்கமாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் அந்த இனம் விடுதலைப் போரில் வெற்றி பெறாது. இது புரட்சி வெற்றி பெற்ற ரசியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து நாம் பெறும் படிப்பினை.

இதனை மார்க்சிய லெனினியவாதிகள் வேண்டுமென்றே சொல்வதில்லை, எந்தவொரு நாட்டில் புரட்சி வெற்றி பெற்றிருந்தாலும், ஆயுத பலம், ராணுவம் பலம் மட்டும் கொண்டே வெற்றி பெற்றதாக சரித்திரம் கிடையாது. அப்படியே வெற்றி பெற்றாலும், அதற்குப் பிறகு அந்த ராணுவ பலத்தை வைத்திருப்பவர்கள் பிற பகுதி மக்களிடம் ஒரு பாசிச சர்வாதிகாரத்தை நிறுவக் கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

எந்த இனம் விடுதலை பெற விரும்புகிறதோ, அது தன்னை ஒடுக்கக் கூடிய சக்தியை தனிமைப்படுத்த வேண்டும்; பிளவுபடுத்த வேண்டும். ஈழத் தமிழர்கள் மத்தியில் ஒற்றுமையை மட்டுமல்ல, எதிரிகளுக்கு சமூக ஆதரவாக இருக்கக்கூடிய சிங்கள சக்திகளிடையே கூட பிளவு ஏற்பட்டிருக்க வேண்டும். சிங்கள ராணுவத்திற்கு சமூக அடிப்படையாக இருக்கக்கூடிய, சமூக ஆதரவாக இருக்கக்கூடிய சிங்களப் பேரின மக்கள் மத்தியிலே ஒரு பிளவு, சிங்கள ஆளும் வர்க்கத்தில் பிளவு, ஒன்றுபட்டு ஈழத் தமிழர்களை ஒடுக்கிவிட முடியும் என்ற நம்பிக்கையில் ஒரு உடைவு ஏற்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு உடைவு ஏற்படக்கூடிய சூழலில்தான் வெற்றி பெற முடியும்.

எதிரி மத்தியில் ஒரு ஸ்திரமற்ற நிலைமை, அவர்கள் மத்தியில் ஒரு உடைவு, அவர்கள் ஒன்று கூடி, தங்களது சக்தியை எல்லாம் திரட்டி, விடுதலை இயக்கத்தை ஒடுக்க முடியும் என்ற நிலைமை இல்லாத பொழுது நாம் தாக்குதலைத் தொடுக்க வேண்டும். இது மார்க்சிய - லெனினிய இயக்கம் மட்டும் சொல்வது அல்ல. சாதாரண ராணுவ ரீதியான ஒரு செயல் தந்திரமும் கூட. ஈழ விடுதலைப் போராளி குழுக்கள் இப்படிப்பட்ட ஒரு அணுகுமுறையை மேற் கொண்டிருந்தனவா என்றால், இல்லை.

முதலில் ஒன்றுபட்ட மக்கள் ஆதரவு பற்றிய போராளிக் குழுக் களின் கருத்து என்னவென்றால், 'ராணுவ ரீதியாக யார் பலம் பெற்றிருந்தார்களோ அவர்களை மக்கள் ஆதரிப்பார்கள்' என்று இவர்களே எடுத்துக் கொண்டார்கள். அதாவது, ராணுவ ரீதியாக, எந்த இயக்கம் பலம் பெற்று சிங்கள ராணுவத்தை எதிர்த்து போராடக் கூடியதாக இருக்கிறதோ அவர்கள் பின்னால் மக்கள் ஆட்டு மந்தைபோல வந்துவிடுவார்கள். மக்களுக்கென்று சுயமாக சிந்தனை, மக்களுக்கென்று ஒரு கண்ணோட்டம் இருக்க வேண்டிய அவசிய மில்லை எனக் கருதினார்கள். அந்த ஒன்றுபட்ட தலைமையை எப்படி நிறுவுவது என்றால், 'மற்ற எல்லாரையும் அழித்துவிடு, ஒரே தலைமையின் கீழே கொண்டு வந்துவிடு' இப்படிப்பட்ட திட்டத் தைத் தான் ஒவ்வொரு குழுவும் வைத்திருந்தன. இந்திய அரசாங்கத்தி டம் யார் முந்திக்கொண்டு பணம், பயிற்சி, ஆயுதங்களைப் பெறுவது என்பது இவர்களுக்குள்ளேயே ஒரு போட்டியாக இருந்தது.

பிளாட் எப்பெழுதும் இதற்குத் தயாராக இருந்தார்கள். ஈராஸ் எப்பொழுதும் இவர்களுக்கிடையிலே சமரசம் பேசக் கூடிய குழுவாக



படிப்பகம்

www.padippakam.com

இருந்தார்கள். டெலோவோ 'புலிகளை நம்பாதீர்கள் அவர்கள் எப்பொழுதும் அராஜகவாதிகள், துரோகிகள், பயங்கரவாதிகள், எங்களை நம்புங்கள்' என்று கூறினார்கள். ஈபிஆர்எல்எஃப் 'வடபுலத்தைச் சேர்ந்த ஈழத் தமிழர்களை நம்பாதீர்கள் அவர்கள் எப்பொழுதுமே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழர்களை ஒடுக்கித்தான் வந்திருக்கிறார்கள், தாழ்வானவர்களாய்த்தான் கருதி வந்திருக்கிறார்கள், நாமெல்லாரும் உழைக்கும் மக்கள் பகுதியைச் சேர்ந்தவர்கள்' எனக் கூறி கிழக்கு மக்களின் ஆதரவைத் திரட்டி வந்துள்ளனர். 'இந்த முரண்பாடுகளைக் களைந்து நம்முடைய எதிரி சிங்கள இனவெறி ராணுவம் என்ற முறையிலே நாம் ஒரு குறைந்தபட்ச திட்டத்தின் கீழே ஒன்றுதிரண்ட தலைமையின் கீழே வருவோம்' என்பது இந்தக் குழுக்களுக்கு என்றைக்குமே கிடையாது.

மக்களினுடைய ஒன்றுபட்ட ஆதரவு, அந்த மக்களை வழி நடத்தக் கூடிய தலைமையினுடைய ஒரு ஒற்றுமை, இவை பற்றி இவ ர்களுடைய கண்ணோட்டம் என்ன? மற்ற குழுக்களை அழித்து தான் ஒரு ஏகபோகத் தலைமையாக உருவாகிவிடுவது. அப்படி மற்ற குழுக்களை அழிப்பதற்கு எதிரிகளிடம் காட்டிக் கொடுக்கவும் தயாராக இருப்பது. அதற்காக இந்தியாவிலே இருக்கும், தமிழ்நாட்டிலே இருக்கும் வீதிகளிலே கூட யுத்தம் நடத்துவதற்கு தயார். இந்தக் குழுக்களுக்கிடையே ஏதாவதொன்றினுடைய தலைமையைக் கொண்டு வருவதற்காக அவர்களுக்குள் சண்டை போடுவதற்குக் கூட தயார். இங்கே தமிழ் நாட்டிலே கூட அந்தச் சண்டையை நீட்டித்தார்கள். முகுந்தனை சுட்டு கொல்வதற்கு பிரபாகரன் நேரடியாக வர, ரெண்டு பேருமே துப்பாக்கி சூடு நடத்திக் கொண்டார்கள். இப்படி பல சம்பவங்கள் நடந்திருக்கிறது. இன்னும் இது பற்றிய விளக்கங்கள், விரிவுகள் ஈழப் போராளிகளையே கொச்சைப்படுத்துவதாகப் போய் விடலாம். ஆனால், அதுதான் உண்மை.

ஈழத் தமிழர்கள் மத்தியில் போராளிக் குழுக்கள் இப்படிப்பட்ட அராஜகமான பல நடவடிக்கைகளை மேற்கொண்டன. போராளிக் குழுக்கள் எப்படி வக்கிரமாக இருந்தன; தங்களது குழு நலன்களை எப்படி முன்னிறுத்தின என்பதற்கான புத்தகங்களும், ஆவணங்களும் நிறைய இருக்கின்றன. ஒன்றுபட்ட தலைமைதான் எதிரியை முறியடிக்க முடியும் என்ற சிந்தனை அவர்களுக்கு இல்லவே இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

அடுத்தது, மக்கள் சிங்கள இராணுவத்துக்கு எதிரான போராட்டத்தில் பின்தங்கியிருந்தார்கள். பிளாட், ஈபிஆர்எல்எஃப், டெலோ, ஈராஸ் அல்லது எல்டிடி-யோ, போராளியாகவோ, இராணுவமாகவோ இருந்தார்கள். மக்கள் வெறும் பார்வையாளர் களாக மட்டுமே இருப்பார்கள். ஆயுதம் தாங்கிய குழு, கொரில்லா போராட்டம் என்பதெல்லாம் சரி, மக்களினுடைய பங்களிப்பு என்னவென்று கேட்டால் மக்கள் லெவி, கப்பத்தைக் கட்டிவிடுவார்கள், அவ்வளவே.

நிறைய மக்களினுடைய ஆதரவைப் பெற்றவர்களாக புலிகள் இருந்தார்கள் என்றால் அது உண்மைதான். களத்திலே சிங்கள இராணுவத்தினுடைய தாக்குதலிலிருந்து காப்பாற்றக் கூடியவர் களாகப் புலிகள் இருந்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அந்த நிலை எப்படி வந்தது? மற்ற குழுக்களையெல்லாம் அழித்துவிட்டு, ''நாங்கள் தான் களத்திலிருக்கிறோம், மக்கள் எங்களுக்குத்தான் உதவ வேண்டும், எங்களுக்குத்தான் கட்டாயமாக நிதி உதவி செய்ய வேண்டும்'' என்ற நிர்ப்பந்தத்தின் பேரிலான ஆதரவு, இந்த உண்மை யைச் சொன்னால், இது 'சோ' போன்ற, ஈழ எதிர்ப்பாளர்கள் சொல லக்கூடிய விஷயம், இது சிங்கள இனவெறியர்கள் சொல்லக்கூடிய விஷயம், இந்து ராம் போன்ற பத்திரிக்கையாளர்கள் சொல்லக்கூடிய விஷயம், நாங்கள் ஒன்றும் பலாத்காரமாக மக்களிடம் நிதி வசூல் செய்யவில்லை'' என்று கூறுகிறார்கள்.

ஆனால், அவர்கள் பலாத்காரமாக நிதிவசூல் செய்கிறார்கள் என்ற ஆதாரங்கள் வரும் போது, ''ஒரு புரட்சிகர இயக்கத்தில் இருக்கும் ஒரு அமைப்பு ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மற்றவர்களிடம் பலாத்காரமாக நடந்து கொள்ளவேண்டிய நிர்பந்தம் இருக்கிறது. ஸ்டாலின் செய்யவில்லையா'' என்று கேட்கிறார்கள். ஸ்டாலின் இப்படி பலாத்காரமாகத்தான் தனது சக்தியைத் திரட்டினார் என்று சொல்வது எதிரிகளின் பிரச்சாரம்தான். ஆனால், புலிகள் மாற்று அமைப்பு ஆதரவு மக்களைப் படுகொலை செய்தார்கள் என்று ஈழ விடுதலைக்காக உறுதியாகப் போராடியவர்கள் கூடச் சொல்கிறார்கள்.

1983-இல் ஈழ விடுதலைப் போரைத் தொடங்கியபோது, பிரபாகரனுக்குப் பக்கத்திலிருந்து கொண்டு அணிவகுத்து நின்ற தலைவர்களில் யார் யார் இன்றைக்கு உயிருடன் இருக்கிறார்கள். உயிருடன் இல்லாமல் போனவர்களில் பலரும் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டவர்கள் மட்டுமல்ல புலிகளால்



படிப்பகம்

www.padippakam.com

கொல்லப்பட்டவர்களும் உண்டு. மாத்தையா பிரபாகரனுக்கு அடுத்த நிலையிலே இருந்தவர், அவர் இப்போது எங்கே? லாரன்ஸ் என்பவர் அவருக்கு அடுத்த நிலையில் இருந்தவர், எங்கே அவர்? புலிகள் விடுதலைப் போரைத் தொடங்கியபோது பிரபாகரனுக்கு அடுத்தடுத்த நிலையிலே இருந்தவர்களில் ஒரு சிலர் மட்டுமே — கிட்டு போன்றவர்கள் மட்டுமே — சிங்கள இராணுவத்தாலும், இந்திய அரசினாலும் படுகொலை செய்யப்பட்டனர், கணிசமான பேர் புலிகளாலேயே படுகொலை செய்யப்பட்டனர்.

''அவர்கள் எல்லோரும் துரோகிகளாகி விட்டார்கள்; அதனால்தான் கொன்றுவிட்டோம்'' என்று புலிகள் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் துரோகிகளாகி விட்டார்கள் என்பதற்கு இவர்கள் காட்டும் ஆதாரங்கள் எல்லாம் எந்த நீதிமன்றத்திலும், தங்களுடைய நீதிமன்றத்திலேயே கூட விசாரிக்கப்படவில்லை. புலிகளே கூட இராணுவ நீதிமன்றங்களை வைத்திருக்கிறார்கள், அந்த இராணுவ நீதிமன்றங்களிலேயே கூட தங்களுடைய முன்பு தளபதிகளாக இருந்தவர்கள், தங்களுடைய அணியிலே இருந்தவர்கள், கொல்லப் பட வேண்டியவர்கள், தண்டனைக்குரியவர்கள் என்று அவர்களுடைய இராணுவ நீதிமன்றங்களிலேயே குற்றம் நிரூபிக்கப்பட்டு கூட கொலை செய்யப்படவில்லை. எல்லோரும் திடீரெனக் காணாமல் போனார்கள்.

விடுதலைப் போராட்டத்தில் இருக்கும் ஒரு இயக்கம், மக்கள் ஆதரவு பெற்ற இயக்கமாக இருக்க வேண்டும். பெரும்பான்மையைப் பகைத்துக் கொண்டதொரு இயக்கமாக இருக்கக் கூடாது. அவ்வளவு பெரிய இராணுவப் படையெடுப்பை நிகழ்த்திய மாவோ கூட, பெரும்பான்மையினரைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகத் தனது செயல் தந்திர அடிப்படையில் எதிரிகளுடனேகூட ஒரு தற்காலிக கூட்டணி அமைத்துக் கொண்டார். ஈழப் போராளிகளுக்கு மத்தியிலே ஐந்தாறு குழுக்கள் இருந்துள்ளன, இந்த ஐந்தாறு குழுக்களுக்கு இடையிலே ஒரு தற்காலிக கூட்டணி அமைத்துக் கொண்டு, சமரசம் செய்துகொண்டு, சிங்களப் பேரினவாதத்தை எதிர்க்கக்கூடிய சக்தி எதுவுமே இல்லாமல் போய்விட்டதே, அது ஏன்?

எதிரி தரப்பிலே இருந்தவர்களை புலிகள் கொன்றது தவறில்லை என்று நாம் கூறி வந்திருக்கிறோம். பிரேமதாசா, ரஞ்சன் விஜய



படிப்பகம்

www.padippakam.com

ரத்னே, காமினி திசநாயகா, குமாரதுங்கா, லலித் அத்துலத்முதலி மற்றும் இராணுவத் தளபதிகள் இவ்வாறு கொல்லப்பட்டவர்கள்தான். ஆனால், சிங்கள இனவெறியை எதிர்க்கின்ற அதேநேரத்தில் சமரசப் போக்கைக் கொண்ட, ஆனால் துரோகிகளாக ஆகிவிடாத தலைவர்கள் பலரை புலிகள் கொன்றிருக்கிறார்கள். இந்தக் கொலைகளை தாங்கள் செய்யவில்லை என்று புலிகளால் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல இயலவில்லை. மழுப்பத்தான் செய்கிறார்கள்.

யாழ் பல்கலைக்கழகத்தில் தமது படிப்பைத் தொடர கோரி, உண்ணாவிரதம் இருந்த ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் புலிகளால் கடத்தப்பட்டனர், கடத்தப்பட்ட நான்கு பெண்களில் ஒருவர்தான் பிரபாகரனின் மனைவி மதிவதனி. ரஜினி திரணகமா என்ற மனித உரிமைக்காகப் போராடிய மருத்துவர், வசந்தன் என்ற மார்க்சிய -லெனினிய சிந்தனையுடைய தோழர் ஜனநாயக உரிமைக்காகப் போராடிய யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு புலிகளால் படுகொலை செய்யப்பட்ட, ஈழ விடுதலைக்காகப் போராடிய பிற அமைப்பினரின் பட்டியல் மிக நீண்டது. கடைசியாக ஈழத்துக்கு முதன் முதலில் மாவோ சிந்தனைகளைக் கொண்டு சென்ற, ஈழ விடுதலையை ஆதரித்து வந்த மணி அண்ணாச்சி கடத்தப்பட்டார். ஐ.நா. சபையின் கள ஆய்வுகள் பல நூறு ஈழத் தமிழ் இளைஞர்கள் காணாமல் போய்விட்டதாகச் சொல்லுகிறது. ஒரு விடுதலைப் போராட்டம் நிலைத்து நிற்க வேண்டும் என்றால் அதனை ஆதரிப்பவர்கள், துரோகிகளாக மாறாது இருப்பவர்கள், மனித உரிமைப் போராளிகள், மாற்றுக் கருத்துக் கொண்டிருந்தாலும் ஈழ விடுதலை ஆதரவாளர்களாக இருப்பவர்களுடன் தற்காலிகமாவது கூட்டணி அமைப்பது அவசியமாக இருக்கிறது.

ஆனால், புலிகள் செய்தது என்ன? சிறீசபாரத்தினத்தை நேருக்கு நேர் நின்று கண்களில் துப்பாக்கியை வைத்துச் சுட்டுக் கொன்றனர். அவர் இந்தியாவிற்குக் காட்டிக் கொடுத்துவிட்டார், கொன்றோம் என்றார்கள். சென்னை கோடம்பாக்கத்தில் பத்மநாபாவைக் குண்டு வீசிக் கொன்று விட்டு துரோகம் செய்தார்கள், கொன்றோம் என்றார்கள். ஆனால் இவ்வாறான துரோகிகள் அல்லாத பலரும் படுகொலை செய்யதன் மூலமாக ஈழ விடுதலைக்காகப் போராடிய மற்றும் ஆதரவு சக்திகளைப் பலவீனப்படுத்தியதில் புலிகளுக்குப் பங்கு இல்லையா?



படிப்பகம்

www.padippakam.com

கடந்த 36 ஆண்டுகளில் 10 லட்சம் ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் உள்ளனர். இவர்களின் ஒரு தலைமுறை கடந்து போய்விட்டது. 1.5 லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டு விட்டனர். தமிழ்நாட்டில் 1 லட்சத்து 28 ஆயிரம் பேர் அகதி முகாம்களில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் 22 ஆயிரம் பேர் அகதி முகாம்களுக்கு வெளியே உள்ளனர். இன்று ஈழத்திலேயே லட்சக்க ணக்கானோர் அகதிகளாக வாழ்விடங்களை விட்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஈழ விடுதலையைச் சாதிப்பதற்கான மிகப் பெரிய சக்தியை ஆயுத பலத்தை மட்டும் கொண்டு திரட்டிவிட முடியுமா? ஒரு இன விடுதலையைச் சாதிக்க விரும்புகிறவர்கள் தற்காலிகமாகவாவது அனைத்துத் தரப்பின் ஆதரவையும் திரட்ட வேண்டும். மாறாக, புலிகள் தங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்பவர்கள் மட்டும்தான் இருக்க முடியும் என்ற கண்ணோட்டத்தை எப்போதும் வலியுறுத்தி வந்தார்கள். மற்ற சக்திகளெல்லாம் ஈழத்தில் இனி வாழ முடியாது என்கிற நிலைமையில் ஈழத்தைவிட்டு போனார்கள். ஈழத்தை ஆதரிக்க மாட்டோம் என்று போனவர்கள் அல்ல. இவர்கள் எல்லாம் துரோகிகளாக, காட்டிக் கொடுத்து தானே புலம் பெயர்ந்து ஓடியவர்களும் அல்ல. இப்படி மற்ற சக்திகளை இல்லாது செய்ததன் மூலமாகத்தான் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்கும் தனியொரு சக்தியாக புலிகள் உருவான நிலை ஏற்பட்டது.

விசயம் இப்படியிருக்க, இன்றைக்கு ஈழ விடுதலைப் புலிகளை ஆதரியுங்கள், அது உங்கள் கடமை. புலிகளை ஆதரிக்காத வேறு எவரையும் ஈழத் தமிழர் ஆதரவுச் சக்தியாக ஏற்க முடியாது என்று சொல்லி பெரிய அளவில் பிரச்சாரம் நடக்கிறது. தமிழ் மக்களாகிய நாமெல்லாம் ஒரே இனம், தொப்புள் கொடி உறவு, பிரபாகரன் தவறு செய்திருந்தால் கூட ஆதரிக்க வேண்டும், நேரடியாக இல்லாவிட்டாலும் விஜயகாந்த், பாரதிராஜாவைப் போலவாவது ஆதரவு தாருங்கள் என்று கூறுகிறார்கள். இப்படி 'தற்போது களத்தில் இருக்கிறார்கள்' என்பதற்காக எந்தவித நிபந்தனையுமின்றிப் புலிகளை ஆதரிப்பது இயலாது. மேலும், இவர்கள் யாருடன் நட்பு நாடுகிறார்களோ அவர்களில் கணிசமான பேர் ஈழ எதிரிகளாக இருக்கிறார்கள் எனும்போது நிபந்தனையற்ற ஆதரவு தர இயலாது. 1983 ஜூலை இனப்படுகொலையின் போதே ஈழ சுயநிர்ணய உரிமையை ஆதரித்துக் குரல் கொடுத்த சில குழுக்களில் ஒன்று நமது குழு. ஆனால் புலிகளோ ஈழ விடுதலைக் கோரிக்கையை ஏற்காத ஓட்டுக்



படிப்பகம்

www.padippakam.com

கட்சிகளிடம் நம்பிக்கை வைத்தார்கள், எம்.ஜி.ஆர், கருணாநிதி, இந்திரா, ராஜீவிடம் நம்பிக்கை வைத்தார்கள்.

இவர்கள் எல்லாம் ஈழ விடுதலைக்காக முன்பு என்ன செய்துள்ளனர்? முதன்முதலில் ஈழத் தமிழர்களை அகதிகள் முகாமில் அடைத்தவர் எம்.ஜி.ஆர்.. எம்.ஜி.ஆருடன் புலிகளுக்கு இயல்பானதொரு நட்பும் உறவும் இருந்ததாக எப்போதும் சொல்லி வருகிறார்கள். ஆனால் முதன் முதலில் பிரபாகரன் உள்ளிட்ட போராளிகளை தேவாரம், மோகன்தாஸ் போன்றவர்களை ஏவி கைது செய்து சிறையிலடைத்தவர் எம்.ஜி.ஆர். இதனை மோகன்தாஸ் தனது சுயசரிதையில் எழுதியுள்ளார். ஆயுதப் பறிப்பு நடத்தியவர், அமைதிப் படையை வழியனுப்பி வைத்தவர், எம்.ஜி.ஆர். பிரபாகரனைக் கட்டாயப்படுத்தி ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட வைத்தவர்களில் ஒருவர் எம்.ஜி.ஆர்., இன்னொருவர் பண்ருட்டி ராமச்சந்திரன். இவர் இப்பொழுது விஜயகாந்த் கட்சியில் இருக்கிறார். இவர் ஐ.நா. சபையில் போய் ஈழத் தமிழர்களுக்காகப் பேசியிருக்கிறாராம். இவர் ஐ.நா. சபையில் போய் இந்திய மேலாதிக்கத்துக்காகவே பேசினார். அவர் பேசிய உரையைக் கேட்டால் இது தெரியவரும். இந்த பண்ருட்டி ராமச்சந்திரன், எம்.ஜி.ஆரின் குரலாகப் பேசி, இந்திராவின் குரலாக மாறி, இந்தியாவின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்குச் சாதகமாக தமிழர் குழுக்களை தன்வழிப்படுத்த உதவினார். இவர்தான் இன்று ஈழத் தமிழர்களை ஆதரிக்கிறாராம்.

உலகம் முழுவதும் 10 லட்சம் ஈழத் தமிழர்கள் வாழ்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் 1.5 லட்சம் ஈழத் தமிழர்கள் அகதிகள் முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை கிரிமினல் குற்றப்பட்டியலில் உள்ளவர் போல வைத்துள்ளனர். குற்றம் எதுவும் நடந்தால், சந்தேகம் எதுவும் ஏற்பட்டால் இவர்களைத்தான் முதலில் பிடித்துப்போய் விசாரிக்கிறார்கள். இப்படி திறந்தவெளிச் சிறைச் சாலையில் ஈழத் தமிழர்களை முதலில் அடைத்து வைக்கும் வேலையைச் செய்தது, எம்.ஜி.ஆர்.தான். ஆனால், ஈழத் தமிழர்கள் இன்று வரை தமிழ்நாட்டில் கிரிமினல்கள் போல நடத்தப்படுவது குறித்து கருணாநிதி முதற்கொண்டு யாருமே பேசத் தயாராக இல்லையே. இப்படி புலிகள் யாருடைய 'தயவில்' இருக்கிறார்களோ அவர்களில் கணிசமான பேர் ஈழ எதிரிகளாக இருக்கிறார்கள். ஆக, புலிகள் யாரைச் சார்ந்து ஈழ விடுதலையை சாதிக்க முடியும் என்று



படிப்பகம்

www.padippakam.com

கருதுகிறார்களோ அதில் நாம் வேறுபடுகிறோம். இந்த உண்மையைத் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனெனில் புலிகள் திரும்பத் திரும்ப அதே பாதையில் போய் ஈழ விடுதலையைச் சாதித்து விட முடியும் என்று கருதுகிறார்கள்.

அதுமட்டுமின்றி, ஈழத்திலிருந்து வந்த போராளிகள், ஈழவிடுத லைக்குத் துணைச்சக்திகளாக யாரைத் திரட்டினர்? ஈழத்திலும் மக்களைச் சார்ந்து இல்லை. பிற ஈழப் போராளிகளையும் நட்பு சக்திகளாகக் கணிப்பதில் தவறு செய்திருக்கிறார்கள். எதிரிகளை பிளவுபடுத்துவதற்குப் பதிலாக எல்லோரையும் எதிரிகளாகத் தள்ளிவிட்டார்கள். இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி இவர்களெல்லாம், 'ரா' மூலமாக பிரபாகரனுக்கு ஆயுதம் கொடுத்து, ''அனுராதபுரத்தில் உள்ள கிராமங்களுக்குப் போய் சிங்கள சிவிலியன்களைப் படுகொலை செய்து, பிணங்களைத் தெருவிலே வீசியெறியுங்கள், அப்போதுதான், சிங்கள இராணுவமும், ஜெயவர்த்தனேவும் பீதியாகி, நம்முடன் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள்'' என்று வழிகாட்டினார்கள். இந்த உண்மையை 'ரா' ஏஜெண்டுகளே எழுதியிருக்கிறார்கள், இந்த உண்மை நமது அரசியல் பத்திரிக்கையிலும் வந்திருக்கிறது. இந்த அனுராதபுரம் ஈழ-சிங்கள எல்லைப் பகுதி நகரம். தமிழர்களும், சிங்களர்களும் உள்ள பகுதி. பவுத்த விகாரைங்களும், கோயில்களும் நிறைந்த பகுதி. அங்கு போய் சிறு குழந்தைகள், பெண்கள், முதியோர் என்று 300-க்கும் மேற்பட்ட சிங்கள சிவிலியன்களைப் புலிகள் வெட்டி வீசினர்.

இந்தியாவினுடைய அயலுறவுத் துறை செயலாளர் ஏ.பி. வெங்கடேசன் 'ராணுவத்தைக் கொண்டு புலிகளை ஒடுக்க முடியாது. இந்தியாவின் அன்றைய அந்த நடைமுறை தவறு' என்கிறார். எதிரிகளின் மத்தியில் கூட பிளவை ஏற்படுத்தி பலவீனப்படுத்தி னால்தான் ஒரு விடுதலைப் போராட்டம் வெற்றி பெற முடியும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. உலகில் வாழும் பத்து கோடி தமிழர்களின் ராணுவத் தளபதி மட்டுமல்ல, அரசியல் தளபதியும் பிரபாகரன்தான் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு அரசியல் தளபதி என்னவிதமான சூழலை உருவாக்கியிருக்க வேண்டும்? சரியான அரசியல் தலைமை என்பது, எப்படிப்பட்ட சூழலில் விடுதலையைச் சாதிக்க முடியும், விடுதலைக்கான நிபந்தனைகள் எவையெவை? இவற்றையெல்லாம் அரசியல் ரீதியில் சிந்தித்திருக்க வேண்டும். ராணுவ ரீதியில் கூட புலிகளுடைய



படிப்பகம்

www.padippakam.com

திட்டமிடுதல்கள் பலவும் தவறாக உள்ளன. ராஜீவ் காந்திக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் தற்போது இலங்கையில் புலிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள், ராணுவ ரீதியிலோ அல்லது அரசியல ரீதியிலோ சரியான நடவடிக்கைகளா என்பது கேள்விக்குரியது.

**அரசியல் மூடத்தனம், இராணுவ சாகசவாதம்**
**இவைதன் ஈழப் போராளிகளை வழிநடத்தின**

சிங்களக் குடிமக்களைக் கொன்றது, ராணுவ ரீதியில் தவறான நடவடிக்கைதான். ஒரு கொரில்லாத் தாக்குதல் என்பது ராணுவ இலக்குகளைக் குறிவைத்து, அரசியல் தலைமைகளைக் குறிவைத்து நடத்தப்பட வேண்டும். அவர்களைக் கொல்வது என்பதில் தவறில்லை. ஆனால், குடிமக்கள் மீது தாக்குதல் நடத்துவது தவறு. எதிரிகளைப் பிளவுபடுத்தி பலவீனப்படுத்துவதில் புலிகள் தவற விட்ட வாய்ப்புகள் இன்னும் பல உள்ளன. சிங்கள அரசு ஒவ்வொரு முறை போர் நிறுத்தத்திற்கும், பேச்சுவார்த்தைக்கும் புலிகளிடம் வரும் போதெல்லாம், புலிகள் அந்தளவுக்கு சக்தி வாய்ந்தவர்களாக உள்ளனர், இனிமேலும் ஜெயிக்க முடியாது என்ற நிலை காரணமாகவே எதிரி பேச்சுவார்த்தைக்கு வந்ததாகப் புலிகளும், இங்குள்ள தமிழ் தேசிய இனவாதக் குழுக்களும் சொன்னார்கள்.

ஆனால், உண்மை அதுவல்ல. சிங்கள அரசு பேச்சுவார்த்தைக்கு வருகிறது என்றால் அதற்கு அரசியல் காரணங்கள் இருந்தன. 1985-இல் திம்பு பேச்சுவார்த்தை, 1987-இல் ஜெயவர்த்தனே பேச்சு வார்த்தை, 1994-இல் சந்திரிகா பேச்சுவார்த்தை, 2000-இல் நார்வே தூதுக் குழு முயற்சியால் போர்நிறுத்தம்-பேச்சுவார்த்தை, 2002-இல் ரணில் விக்கிரமசிங்கே பிரதமரான பிறகு பேச்சுவார்த்தை என்று பல முறை நடந்தன. இவை எப்பொழுதெல்லாம் நடந்தன என்றால், இலங்கையில் மிகப் பெரும் அரசியல், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, ஆட்சியாளர்கள் தனிமைப்பட்டு, இலங்கை மக்கள் மத்தியில் இன ஒடுக்குமுறைப் போரை தொடர்ந்து நடத்த வேண்டாம் எனக் கூறுகின்ற சக்திகள் கணிசமான அளவு பலம் பெற்று இருந்தார்கள்.

இலங்கையில் போர் மிகப் பாரிய இழப்புகளை ஏற்படுத்துவதாக இருந்தது; போர் எளிதில் வெற்றி பெறக் கூடியதாகவும் இல்லை. பொருளாதார ரீதியில் மிகப் பெரும் சேதத்தை விளைவிக்கக்



படிப்பகம்

www.padippakam.com

கூடியதாக இருந்தது. ராணுவத்திற்கு என்று நிதி ஒதுக்கீடு, அதற்கென சிங்கள இளைஞர்களைச் சேர்ப்பது, ராணுவத்துக்கு கட்டாய சேவையாற்ற வைப்பது, பொருளாதார ரீதியில் செலவீடு செய்வது ஆகியன இயலவில்லை. இலங்கையில் உள்ள மிக முக்கியத் தொழில்களில் ஒன்று சுற்றுலா தொழில். அந்தச் சுற்றுலா தொழில் அழிந்து போகக் கூடிய நிலைமை ஏற்பட்டது. புலிகளின் தாக்குதலும் கணிசமான அளவு சேதத்தை ஏற்படுத்தியது. இவையெல்லாம்தான் பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசைத் தள்ளின.

இது மட்டுமல்ல; இலங்கையில் பெரும்பான்மையாக ஒரு கட்சி ஆட்சி இல்லாது போனது. இந்தியாவில் இருப்பது போன்று கூட்டணி கட்சிகளின் ஆட்சியே சாத்தியம் என்ற நிலை உருவானது. சிங்கள இனவெறி நீடித்தபோதும் எந்தவொரு பேரினவாதக் கட்சியும் தனிப் பெரும்பான்மை பெற இயலவில்லை. சிறு சிறு கட்சிகளின் ஆதரவு இன்றி எந்தவொரு பெரும் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாது என்ற நிலை உருவானது. சிங்கள மக்கள் மத்தியிலே பிளவு கள் ஏற்பட்டுப் போய்விட்டது. சிறீலங்கா சுதந்திர கட்சியோ அல்லது ஐக்கிய தேசிய கட்சியோ மாற்றி மாற்றி ஆட்சி செய்வது என்பது 1991-லேயே மாறிப் போனது. இன்று, ராஜபக்சே ஜனாதிபதியாகி இருக்கிறார் என்றால், இந்த இரண்டு கட்சிகளுக்கு வெளியே மூன்றாவதாக, ஜேவிபி, உருமையா கட்சி, சமசமாஜக் கட்சி இவர்கள் எல்லாம் கூட்டணி சேர்ந்த மக்கள் ஜனநாயகக் கூட்டணியின் மூலமே வந்துள்ளார். இஸ்லாமிய கூட்டணியும் மலையகத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் தமிழர் காங்கிரசு கட்சியும் ராஜபக்சே அரசில் அங்கம் வகிக்கின்றன. இவர்களில் இஸ்லாமியர் கட்சியும், தொண்டைமான் கட்சியும் முழுக்க முழுக்க ஈழ விடுதலையை எதிர்க்கவில்லை. அதிகாரப் பகிர்வு, ஈழ மக்களுக்கான உரிமைகளை அங்கீகரிப்பது என்பனவற்றை இவை ஏற்கின்றன. ஆளும் கூட்டணியில் உள்ள பல கட்சிகள் முழுக்க முழுக்க ராஜபக்சேவினுடைய கொள்கைகளை ஆதரிக்கவில்லை. ஜேவிபி, உருமையா கட்சி போன்றவையோ இனவெறிக் கட்சிகள்.

ராஜபக்சே கட்சியிலே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள், ஈழத் தமிழ் மக்கள் மத்தியிலே ஒட்டுக் கட்சிகளாக இருக்கக்கூடிய துரோகக் கட்சிகளைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, கருணா போன்றவர்கள் மந்திரிகளாக இருக்கிறார்கள். அதாவது



படிப்பகம்

www.padippakam.com

கிழக்கு, வடக்கு மாகாணங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய இலங்கை அரசாங்கத்தில் மந்திரிகளாக இருக்கிறார்கள். முஸ்லீம் கட்சிகளை சேர்ந்தவர்கள், மலையகத் தமிழர் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இவர்கள் எல்லாருமே, பகிரங்கமாக ஈழ மக்களுடைய உரிமைக்கு எதிரானவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆக, சிங்கள இனவெறி அரசு பல்வேறு சக்திகளைக் கொண்ட அரசாக உள்ளது. இந்த பல்வேறு சக்திகளெல்லாம் ஈழ ஆதரவாளர்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் விடுதலைக்குப் போராடும் கட்சி என்ன செய்ய வேண்டும்? இவர்களிடையே இருக்கின்ற முரண்பாடுகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆயுத பலம் இருக்கிறது, ராணுவ பலம் இருக்கிறது என்ற காரணத்திற்காக அதை மட்டுமே வளர்த்தெடுத்துக் கொண்டு போய் ஒரு விடுதலையை சாதித்து விட முடியாது.

இப்படிப்பட்ட நிலைமை இருந்ததினாலேதான் சந்திரிகாவோ, தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கேவோ, அதற்கு பின்பு ராஜபக்சேவோ கூட போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டார்கள். புலிகள் முன்னேறும் பொழுதுகூட அவர்களின் ராணுவ பலத்தை மட்டுமே கண்டு பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொள்ளவில்லை. மேலும், பேச்சுவார்த்தைக்கு வந்ததற்கு இன்னொரு காரணம் என்னவென்று சொன்னால், *2001* உலக வர்த்தகக் கழகம் மீது அல்கொய்தா தாக்குதல் நடத்திய பிறகு பயங்கரவாத எதிர்ப்புதான் உலகப் பிற்போக்காளர்களின் முக்கிய முழக்கமான பிறகு, உலகு தழுவிய பயங்கரவாத எதிர்ப்புப் போரை அமெரிக்கா பிரகடனம் செய்த பிறகு, அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுடைய ஒற்றை மேலாதிக்கம் நிறுவப்பட்ட பிறகு புலிகள் உட்பட இவர்கள் எல்லாருமே உலகமயமாக்கம், தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம் என்கிற கொள்கையை ஏற்றுக் கொண்டு ஏகாதிபத்தியங்களினுடைய மேல்நிலை ஆதிக்கத்தினுடைய நிர்பந்தத்தை ஏற்றுக் கொண்டு, பேச்சுவார்த்தைக்கு வருகிறார்கள். இது புலிகளுக்கும் தெரியும். இப்படிப் புலிகள் பிற மேலாதிக்க அரசுகளுக்குப் பணிந்து போயுள்ளனர் என்பதற்கும் நிறைய உதாரணங்கள் உள்ளன.

*2000* வருடம், வாஜ்பேயி இந்திய பிரதமராக இருக்கிறார். புலிகள் முன்னேறி, வடகிழக்கு பிராந்தியம் முழுக்கக் கைப்பற்றி யாழ்குடாப் பகுதியையும் சுற்றி வளைத்து யாழ் வளைகுடாவில் *40,000* சிங்கள ராணுவ வீரர்களைச் சுற்றி வளைத்து விட்டனர்.



படிப்பகம்

அவர்கள் திரும்பி தப்பிப் போகவே முடியாது. கிட்டத்தட்ட இது பாகிஸ்தானில் யாகியாகான் அதிபராக இருந்தபோது நடந்ததை ஒத்தது. அப்பொழுது கிழக்கு பாகிஸ்தானில் 90,000 மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்த ராணுவத்தினரை இந்திய ராணுவம் சுற்றி வளைத்து சரணடைய வைத்தது. அதற்குப் பிறகு இந்த சரணடைவு, பாகிஸ்தானிலே பெரும் மாற்றங்களை உருவாக்கியது. அதுபோன்ற ஒரு சம்பவம் இது. கடல் வழியாகவோ, நில மார்க்கத்தின் மூலமாகவோ, வான் வழியாகவோ இந்த 40,000 சிங்கள ராணுவமும் தப்பிப் போக முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. இந்த 40,000 ராணுவத்தினரும் சரணடைந்திருந்தால் அன்றைக்கு மேற்கு பாகிஸ்தானிலே ஏற்பட்ட மிகப் பெரிய அரசியல் மாற்றம் அளவுக்கு இல்லாவிட்டாலும், சிங்கள இனவெறிக்கு எதிராக மிகப் பெரிய ஒரு அரசியல் அடி, ராணுவ ரீதியான ஒரு அடி 2000 ஆண்டில் ஏற்பட்டிருக்கும். ஆனால், இந்த 40,000 ராணுவத்தினரை சுற்றி வளைத்திருப்பதை கைவிட்டு, அவர்கள் வெளியேறுவதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கினார்கள், ஈழ விடுதலைப் புலிகள்.

அப்பொழுது இந்தியாவிலிருக்கக்கூடிய தேசிய இனவாதக் குழுவினர் - புலிகள் ஆதரவாளர்கள் மணியரசன், நெடுமாறன், தியாகு, சுப வீரபாண்டியன் இப்படிப்பட்ட பலரும், ''இதோ நாளைக்கு யாழ் கோட்டையில் புலிகள் கொடி உயரப் போகிறது, தனி ஈழம் பிரகடனப்படுத்தப் போகிறார்கள், கிட்டத்தட்ட வடக்கு, கிழக்கு முழுவதும் புலிகள் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்டது. போட்டி அரசாங்கம் நடத்துகிறார்கள், இறுதியாக இருப்பது யாழ் குடா மட்டும்தான், யாழ் கோட்டையில் புலிகள் கொடி உயரப் போகும் நாள் இதோ எண்ணிக் கொண்டிருங்கள்'' என்று அறிவித்து பிரச்சாரம் செய்தார்கள். அன்றைக்கு 'இது சாத்தியமில்லை, இது நடக்காது' என்று சிறு குரலாக இருந்தது நம்முடைய குரல். புலிகள் பின் வாங்கி விட்டார்கள். ஏன் புலிகள் பின் வாங்கிவிட்டார்கள்? ஏன் இந்தியாவிலிருக்கக்கூடிய தேசிய இனவாதக் குழுக்கள் சொன்னதைப் போல தனி ஈழம் அறிவிக்கவில்லை? சுதந்திர ஈழம் அறிவிக்கவில்லை?

இங்குதான் இன்னொரு நிபந்தனையும் வருகிறது. ஈழ விடுதலை என்பது ராணுவ ரீதியாக மட்டும் சாதிக்கக் கூடியது அல்ல. சர்வதேச ரீதியில் என்ன நிலைமை இருக்கிறது, அண்டை நாடுகள், ஏகாதிபத்தியங்கள் மற்றும் பிற நாடுகள் மத்தியிலும் அந்த

www.padippakam.com

விடுதலைப் போருக்கு எப்படிப்பட்ட ஆதரவு அல்லது எதிர்ப்பு இருக்கிறது, அவர்கள் எப்படிப்பட்டவர்களாக உங்களைக் கருதுகிறார்கள் என்பனவற்றையெல்லாம் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது. எந்த நிலைமையிலே ஏகாதிபத்தியம் கிழக்கு திமோருக்கு விடுதலை ஏற்கிறது, கொசாவாவுக்கு விடுதலை ஏற்கிறது, லித்துவேனியாவுக்கு விடுதலை ஏற்கிறது, இப்படிப் பிற தேசிய இனங்களுடைய சுதந்திரத்தை ஏகாதிபத்தியம் அங்கீகரிக்கிறது, ஏற்றுக் கொள்கிறது. ஆனால் ஈழத்தினுடைய விடுதலையை ஏகாதிபத்தியம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

தனி ஈழம் அறிவிக்கக் கூடாது, அறிவித்தால் எங்களது படை வரும் என்று வாஜ்பேயி அரசு எச்சரிக்கை விடுகிறது. 'இந்தியப் படை வராது, நாங்கள் ஆக்கிரமிக்க மாட்டோம், நாங்கள் போக மாட்டோம்' என்று வெளியே சொல்லிவிட்டு, இந்தியக் கடற்படையை அனுப்புகிறது வாஜ்பேயி அரசு. அந்த 40,000 சிங்கள ராணுவத்தினருக்கு ஏதாவது பாதிப்பு வந்தால் அடுத்த கணமே ஈழத்தை ஆக்கிரமிப்பதற்கு இந்தியப் படை தயாராக ஈழத்தினுடைய கடல் எல்லையை நோக்கி வந்து நிற்கிறது. தமிழ்நாட்டிலே, கேரளாவிலே இருக்கக்கூடிய விமான தளங்கள் எல்லாவற்றிலும் படைகள் வந்து நிற்கின்றன. தனி ஈழம் அறிவிக்கப்பட்டால் எந்த நிமிடத்திலும் ஈழத்தின் மீது படையெடுப்பதற்கு தயார் நிலையில் இருந்தனர். இதுதான் சர்வதேசிய நிலைமை. இவர்கள் அப்படிப் படையெடுப்பதற்கு அமெரிக்க உட்பட, உலக நாடுகள் அனைத்தும் ஆதரவாக இருந்தன.

ஆனால், இந்த நிலையிலும் கூட சிங்கள அரசும் மக்களும் இலங்கையில் 'எங்களுக்கு வேண்டியது ஆயுத உதவி, இந்திய ராணுவம் வரவேண்டியதில்லை' என்று ஒரு பிரிவினரும், 'இந்திய ராணுவம் வர வேண்டும்' என்று இன்னொரு பிரிவினருமாகப் பிரிந்து நின்றனர்.

இந்த சூழலில், சிங்கள பிட்சுகள், சிங்கள சாமியார்கள் நேரடியாக இந்திய தூதரகத்துக்குப் போய் 'நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார்கள். அந்த நிலையிலும் கூட புலிகள் ஆதரவு இயக்கங்கள் இங்கே என்ன செய்தன? நமது 2000-மாவது ஆண்டு கலாச்சார இதழிலும், அரசியல் இதழிலும் மிகத் தெளிவாக எழுதியிருந்தோம், சோனியா காந்தி, கருணாநிதி, சுப்பிரமணிய சாமி, சோ, மணியரசன், நெடுமாறன் இவர்கள் எல்லாருமே ஒரே கருத்தில் அறிக்கை விட்டார்கள். அப்



படிப்பகம்

www.padippakam.com

போதும் இப்போதும், தமிழினவாதிகள் என்ன சொன்னார்கள்; இன்றைக்கு என்ன சொல்கிறார்கள், நாம் 'சோ'வினுடைய கருத்தை, சுப்பிரமணிய சுவாமியினுடைய கருத்தைச் சொல்கிறோம், பார்ப்பனியக் கருத்தைச் சொல்கிறோம், ஈழ விடுதலைக்கு எதிராக நிற்கிறோம் என்கிறார்கள். ஆனால் இந்த இத்தனை வகையறாக்களும், தெற்கே சோ, சுப்பிரமணிய சுவாமி, ஜெயலலிதா, கருணாநிதி, மற்றும் எல்லாத் தமிழினவாதிகளும் வடக்கே எடுத்துக் கொண்டால் வாஜ்பேயி, சோனியா காந்தி இவ்வளவு பேரும் மத்திய அரசினுடைய கொள்கையைச் சரி என்றார்கள்.

மத்திய அரசினுடைய கொள்கை என்னவென்றால், 'இலங்கையில் இந்தியா தலையீடு செய்யாது' என்பதுதான். இது வாஜ்பேயினுடைய அறிக்கை. ஆனால் நடைமுறையில் இந்திய அரசு தலையீடு செய்வதற்கான எல்லா தயாரிப்புகளையும் செய்தது. இந்திய ராணுவ நிபுனர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்கள். 500 கோடி ரூபாய் இலங்கை அரசுக்கு உடனே கொடுக்கப்பட்டது. எல்லா படை தளங்களிலும் விமானங்கள் தயாராக இருந்தன. கடற்படை தயாராக இருந்தது. சிங்கள இராணுவத்துக்கு எதிராக சுற்றி வளைப்பு மேற்கொள்ளாதே என்கிற நிர்ப்பந்தம் புலிகளுக்கு ஏற்பட்டது. புலிகளும் அதனை ஏற்றுக் கொண்டார்கள். தனிநாடு அறிவிக்க வில்லை. ஏனெனில் அந்த அறிவிப்பு கேலிக்கூத்தாகிவிடும் என்பது புலிகளுக்குத் தெரியும்.

இங்கிருந்த தமிழ் தேசிய இனவாதிகள் எல்லாம் இந்தியப் படைகள் போகாது என்றார்கள். இந்திய அமைதிப் படை போய் உதை வாங்கிவிட்டு வந்த அனுபவத்தின் அடிப்படையில் இந்தியா போகாது என்று சொன்னார்கள். அதற்குப் பதிலாக இந்தியா புலிகளை ஆதரிக்க வேண்டும், ஈழ விடுதலையை ஆதரிக்க வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை வைத்தார்கள். நாங்கள் வாஜ்பேயினுடைய நிலையை ஆதரிக்கிறோம், ஏனென்றால் இந்தியப் படை போகாது என்ற அளவில் அது நேர்மறையானது என்று சொன்னார்கள். ஆனால், தனி ஈழம் பிரகடனப்படுத்தப்படக் கூடாது என்பதில் வாஜ்பேயி தெளிவாக இருந்தார். தனி ஈழம் பிரகடனப்படுத்தினால் அது நிற்காது என்பதில் பிரபாகரனும் தெளிவாக இருந்தார். பிரகடனப்படுத்தினால், எந்த நேரமும் இந்திய ஆக்கிரமிப்பு வந்துவிடும். அது இந்திய அமைதிப் படையை எதிர்த்தது மாதிரி இருக்காது. ஏனென்று சொன்னால் புலிகளினுடைய போர் முறை இந்த காலகட்டத்தில் மாறி விட்டது. அதற்கு முன்பு



படிப்பகம்

அமைதிப் படை வந்த போது, புலிகள் கொரில்லா போர் நடத்திக் கொண்டிருந்தார்கள். கிரமமான, முறையான போர், ராணுவம், ராணுவ சீருடை, பயிற்சி, அலை அலையாக முன்னேறுவது என்கிற முறையில் புலிகள் அப்போது இல்லை. அங்கங்கே தாக்குதல் தொடுப்பது. படையையே கலைத்து விட்டு கொரில்லா போர் முறையிலே போய்விட்டார்கள். விடுதலைப் பிரதேசங்களே இல்லை என்று சொல்லி விட்டார்கள். யாழ்ப்பாணத்தையே காலி செய்து விட்டு போய்விட்டார்கள்.

2000-வது ஆண்டில் இலங்கை ராணுவத்தை சுற்றிச் வளைத்து முற்றுகையிட்டனர். அப்போது வாஜ்பேயினுடைய ராணுவம் வந்தது என்றால் அது ஒரு முறையான, கிரமமான போராகத்தான் இருக்கும். இது ஒரு விசயம் என்றால், உலக ரீதியில் புலிகள் தனிமைப்பட்டுப் போய்விட்டார்கள் என்பது இன்னொரு முக்கிய விசயம். எப்படியெனில், புலிகள் பயங்கரவாதிகள் என்று சொல்லி எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் எதிர்க்கிறார்கள். இந்நிலையில் தனி ஈழம் பிரகடனம் எத்தனை நாளைக்கு தாக்குப் பிடிக்கும் என்பது கேள்விக் குறியே. ஈழம் ஒரு சுதந்திர நாடு என்கிற பிரகடனம் தாக்குப் பிடித்து நிற்க முடியாது என்பது பிரபாகரனுக்கும் தெரியும்.

ஒரு இனம், ஒரு தேசம் சுதந்திரம் அடைவதற்கு அந்த தேசம், அந்த தேசத்தினுடைய வலிமை மட்டுமல்ல, சர்வதேச நிலைமைகள் எப்படி இருக்கிறது, யார் யார் அதற்கு எதிரிகளாக இருக்கிறார்கள், அந்த எதிரி நாடுகளைக் கூட நிர்பந்தப்படுத்துவதற்கு எப்படிப்பட்ட சக்திகளை அந்தந்த நாடுகளில் திரட்டியிருக்கிறோம். இதெல்லாம் நிபந்தனைகள். ஒன்று இந்த நாட்டினுடைய அரசாங்கம் அங்கீகரிக்க ணும் அல்லது அந்த நாட்டினுடைய மக்கள் அங்கீகரிக்கணும். முக்கியமாக ஈழ விடுதலை என்று சொன்னால், ஈழ விடுதலைக்கு இந்திய ஆதரவு இருக்க வேண்டும் அல்லது இந்திய மக்களுடைய ஆதரவு இருக்க வேண்டும். இந்த பின்புலம் தவிர்த்து, கிழக்கு திமோர் போல, லித்துவேனியா போல ஏகாதிபத்தியம், பிற நாடுகள் அங்கீகரித்து ஆதரவு தரக்கூடிய சர்வதேச நிலைமை ஈழத்திற்கு ஆதர வாக இல்லை. சோவியத் யூனியன் பிளவுபட்டு சிறு சிறு தேசிய இனங்களாக போனது மாதிரி, செக்கோஸ்லோவாக்கியா பிளவுபட்டு சிறு சிறு தேசிய இனங்களாகப் பிரிந்து போனது மாதிரி, யுகோஸ்லாவியா பிளவுபட்டு சிறு சிறு தேசிய இனங்களாகப் பிரிந் துப் போனதுபோல ஒரு சர்வதேச நிலைமை 2000-வது ஆண்டிலே இலங்கையிலே இல்லை. அங்கெல்லாம் தேசிய இனங்கள் பிரிந்து



படிப்பகம்

www.padippakam.com

செல்வதை ஆதரித்த ஏகாதிபத்தியங்களும் பிற நாடுகளும் இலங்கையில் ஈழம் பிரிந்து போவதற்கு ஆதரவு தெரிவிக்கக் கூடியவர்களாக இல்லை. இதுதான் சர்வதேச நிலைமை. இது புலிகளுக்கும் தெரியும்.

ஆனால், இந்த நிலைமைகளுக்கு மாறாக இங்கு ஒரு மாயை உருவாக்கப்பட்டது, ஈழம் எப்போது வேண்டுமானாலும் மலரும், தனிநாடு அறிவிக்கப்படலாம், ஏனெனில் பிரபாகரன் அப்படிப் பட்டவர், அசைக்க முடியாத சக்தி, ராணுவ தந்திரத்திலே பெரிய ஆள் என்று தனிநபர் வழிபாடுகள் செய்யப்பட்டன. ஆனால், அவர் இந்த காலத்தில் எப்படியெல்லாம் தனிமைப்படுத்தப்பட்டார் என்பதை இப்பொழுது ஈழ ஆதரவுக்கு நாம் மக்களைத் திரட்டிக் கொண்டிருக்கும் நிலைமையுடன், 1983-ல் ஜூலை கலவரத்தை ஒட்டி தமிழகத்தில் ஏற்பட்ட எழுச்சியை ஒப்பிட்டுப் புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுதும் ஈழ ஆதரவு சக்திகள் மீது பிளவுவாத, பிரிவினைவாத முத்திரை குத்துவது குறித்து அறிக்கை விடப்படுகிறது. பாரதிராஜா, கருணாநிதி, விஜயகாந்த், சரத்குமார் போன்றோர் எல்லாம் எவ்வளவு தந்திரமாகப் பேசுகிறார்கள். ஏன் இவர்களால் 1980-களில் செய்தது மாதிரி ஒரு அறிக்கையை இப்போது வெளியிட இயலவில்லை? அந்தளவுக்கு ஈழ ஆதரவு தமிழகத்திலேயே இல்லாது போனதற்குக் காரணம் என்ன? தமிழ்நாட்டிலே ஈழ ஆதரவு இந்தளவுக்குச் சுருங்கி போனதற்கு, 83-லே நாம் கண்டதைப் போன்ற ஒரு எழுச்சி மீண்டும் உருவாக முடியாத ஒரு நிலைமைக்கு பார்ப்பனிய செய்தி ஊடகங்கள் மட்டும்தான் காரணம்; வேறெதுவும் காரணமல்ல என்று சொல்லி யாரும் ஒதுங்கிவிட முடியாது.

83-இல் இருந்த ஈழ ஆதரவு எழுச்சி என்பது இப்பொழுது இல்லை. முக்கி முனகி மறைமுகமான முறையிலே ஈழ ஆதரவைத் தெரிவிக்க வேண்டியது, அப்பொழுதும் கூட ஈழ ஆதரவு என்பது இந்திய அரசை பகைத்துக் கொள்ளாத ஒரு ஈழ ஆதரவு தெரிவிக்கப் படுகிறது. ஆனால், இந்திய அரசுதான் ஈழ விடுதலைக்கு எதிரி. சிங்கள இனவெறிக்கு அடுத்து ஈழத்துக்கு வெளியே இருக்கக்கூடிய ஈழ விடுதலைக்கு எதிரி இந்தியாதான். அதற்கு ஒரு வரலாற்று ரீதியான பின்னணி உள்ளது. எந்தக் கால கட்டத்திலும் ஈழத்தினுடைய விடுதலையை இந்தியா அங்கீகரித்ததில்லை; ஆதரித்ததில்லை; இதுதான் உண்மை. இந்திய அரசியல் கட்சிகள் ஓட்டு பொறுக்குவதற்காகவோ, அல்லது வேறு சில காரணங்களுக்காகவோ சொல்லக்கூடிய கருத்துக்களுக்கு இனவாதிகளாகவே ஒரு வியாக்கியானம் செய்து கொண்டு திரும்பத் திரும்ப



படிப்பகம்

www.padippakam.com

நட்பு சக்திகளை தேடுகிறார்கள். 'இந்திரா காந்தி நட்பு சக்திதான், ராஜீவ் காந்தி நட்பு சக்திதான்; ஆனால் இவர் கருத்து மாறி போய்விட்டார்; தவறாக வழி காட்டப்பட்டுவிட்டார்' என்கின்றனர். இந்திய அரசின் அறிக்கையில் 'ஒரு பகுதி நட்பாக இருக்கிறது, இன்னொரு பகுதி பகையாக இருக்கிறது. இவ்வளவுதான் அவர்களால் முடியும்' என்று இவர்களே இந்திய அரசுக்கு ஒரு சப்பைக் கட்டு கட்டிக் கொள்கிறார்கள்.

'ஈழ ஆதரவு என்றால் இந்திய அரசையும் ஆதரிக்க வேண்டும் இல்லையென்றால் முடியாது' என்ற நிர்பந்தத்திற்குள்ளாகிற அளவுக்கு இனவாதிகள் போயிருக்கிறார்கள். இவர்கள் இந்தியாவிலே எந்தச் சக்திகளைச் சார்ந்து நின்று ஒரு நீட்டித்த ஆதரவை ஈழ விடுதலை பெற முடியுமோ அந்தச் சக்திகளைச் சார்ந்து நிற்கவில்லை என்பதுதான் இதற்கு காரணம். ஆரம்பத்திலே உண் மையான ஈழ ஆதரவு சக்திகள் தமிழகத்தில் பலவீனமாக இருந்தோம் என்பது உண்மைதான். ஆனால், புலிகள் ஆதரவு சக்திகள் எல்லாமே இன்றைக்கும், ஈழ எதிரிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் பேசி வருகிறார்கள்.

சிங்கள இனவெறி அரசுக்கு அடுத்து ஈழ விடுதலைக்கு எதிரி இந்திய அரசு - இந்தியாவில் இருக்கும் ஆளும் வர்க்கம். குஜ்ரால் தலைமையில் இருந்தாலும், தேவகௌடா தலைமையில் இருந்தாலும், பா.ஜ.க.வாக இருந்தாலும், காங்கிரசாக இருந்தலும் இந்திய அரசு என்பது ஈழத்திற்கு எதிரிதான். ஆனால், ஈழத்திற்காக இந்திய மக்களுடைய ஆதரவைக் கோருபவர்கள் எல்லாருமே இவர்களுக்கு நல்ல சான்றிதழ் கொடுக்கிறார்கள். 'இவர்கள் எல்லாமே ஈழ ஆதரவுச் சக்திகள்தான், நாம் இவர்களைச் சரியாகக் கையாண்டால் இவர்களை எல்லாம் ஈழத்தின் பக்கம் திருப்பி விடலாம்', 'எமக்கும் தெரியும் இவர்கள் எல்லாம் எதிரிகள்தான். ஆனால், அப்படி முழுமையாகச் சொல்ல முடியாது. இப்போதைக்கு இவர்களை எல்லாம் நட்பு சக்தி' என்று சொல்லி... இப்படி கொக்கு தலையில் வெண்ணெய் வைத்து அது உருகி அதன் கண்ணை மூடிய பிறகு அதை பிடித்து விடலாம் என்பது போலப் பேசுகிறார்கள். ஏதோ இந்திய அரசு என்பது அறிவே இல்லாத ஒரு முண்டம் என்றும் இவர்கள் போய் அதனை தந்திரமாக கையாண்டு, சூசகமாகப் பேசி, நயவஞ்சகமாக நடந்து கொண்டு இந்திய அரசை தங்களுக்கு ஆதரவு சக்தியாக திரட்டி இந்திய மக்களினுடைய ஆதரவைப் பெறலாம் என்று நம்புகிறார்கள். அது முடியவே முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

இதேநேரத்தில் இந்திய அரசினுடைய உண்மையான நோக்கங்களை அம்பலப்படுத்தும் சக்திகளை, அதற்கான முயற்சிகளை எல்லாம் முறியடிக்கிற வேலைகளை இவர்கள் செய்திருக்கிறார்கள். இந்திய அரசுக்கு நற்சான்றிதழ் அளிப்பது, ஜார்ஜ் பெர்ணாண்டஸ் போன்றவர்கள் எல்லாம் இயல்பான ஈழ ஆதரவு சக்திகள், தமிழர்கள் மத்தியிலே சோ, ஜெயலலிதா, சுப்பிரமணிய சாமி போன்ற சில எதிரிகள் தவிர பல நட்பு சக்திகள் தாம் இருக்கிறார்கள் என்பதைப் போல ஒரு மாயையைப் பரப்பி வருகிறார்கள். இதன் மூலம், உண்மையான நட்பு சக்திகளுக்கு எதிராக இந்திய அரசுக்கு ஊக்கம் கொடுக்கிறார்கள். இது எப்படி இவர்களால் செய்யப்பட்டது என்பதைப் பார்க்கலாம்.

1983-இல் இருந்த ஒரு எழுச்சி, அதற்கு பிறகு வந்த காலங்களில் படிப்படியாகக் குறையவில்லை. குறிப்பிட்ட சில ஐந்தாண்டுகளுக் குள்ளாக அந்த எழுச்சி இல்லாது போனது. முன்பே குறிப்பிட்டது போல ஒரு தேசியமோ, நாடோ விடுதலை அடைவதில் சர்வதேச நிலைமைகள், அண்டை நாடுகளில் நிலைமைகள் எப்படி உள்ளன என்பது அடிப்படையானதாக இருக்கிறது. பொதுவாக, ஈழத் தமிழர் களுடைய விடுதலைக்கு மட்டுமல்ல, புலிகள் தலைமையிலான ஈழ விடுதலை என்பதற்கு ஒரு பாதகமான நிலைமை இந்த ஆண்டுகளிலே ஏற்பட்டு வந்துள்ளது. புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பினர் என்கிற கருத்து தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்பட்டு அது பரவலாக எடுபட்டு வந்திருக்கிறது. 1991 ராஜீவ் கொலைக்குப் பிறகு அது இந்தியாவில் மிகப் பெருமளவு எடுபட்டு வந்துள்ளது. அண்டை நாட்டிலும், சர்வதேச அளவிலும் ஈழவிடுதலைக்கு பாதகமாக நிலைமைகள் இருந்த போதும் கூட, அதைவிட முக்கியமாக அன்னிய சக்திகளினுடைய ஆதரவைப் பெறுவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் செய்த தவறுகள்தான் மேலே குறிப்பிடப்பட்டி ருந்தன.

இங்கிருக்கக்கூடிய தேர்தல் அரசியல் கட்சிகளைச் சார்ந்தும், ஆளும் வர்க்கக் கட்சிகளை சார்ந்தும் ஈழத்துக்கு ஆதரவு சக்திகளைத் திரட்டி விட முடியும் என்கிற ஒரு நம்பிக்கையை விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக விதைத்து வந்திருக்கிறார்கள. அதற்காக, இந்திய ஆளும் வர்க்கத்தினர், மற்றும் அவர்களுடைய அரசியல் கட்சிகளுடைய நிலைப்பாடுகளுக்கு இவர்களாகவே திரித்து சில விளக்கங்கள் கொடுத்தும், நயந்தும் தங்களுக்குச் சாதமாக கொண்டு வந்து விட முடியும் என்கிற ஒரு அணுகுமுறையைக் கடைப்பிடித்து



படிப்பகம்

www.padippakam.com

வந்திருக்கிறார்கள். இன்னொரு பக்கம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஈழ ஆதரவு சக்திகள், தேசிய இனவாதக் குழுக்கள் சில தவறான கண்ணோட்டங்களைக் கொண்டிருக்கின்றார்கள்.

''ஈழத் தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் ஒரே இனம் என்பதால் இவர்களின் இயல்பான ஆதரவு ஈழ விடுதலைக்கு இருக்கும். ஆனால் இந்திய அரசின் அடக்குமுறை காரணமாகவோ அல்லது பார்ப்பனச் செய்தி ஊடகங்களினுடைய தவறான பிரச்சாரம் காரணமாகவோ (அல்லது தேசிய இனவாதக் குழுக்கள் மற்றும் திராவிட இயக்கங்கள் சொல்வது போல) தமிழர்கள் ரோசம் கெட்டு, மானம் கெட்டு, உணர்ச்சி அற்றுப் போனதாலேயோ தமது கடமைகளை அவர்கள் செய்யாமல் போகிறார்கள்'' என்று சொல்கிறார்கள். அப்படியெல்லாம் இல்லை. தமிழர்கள் ஒரு இனம் என்கிற ஒரு உணர்வு இயல்பாகவே இருக்கிறது என்பதெல்லாம் இல்லை. மேலும், கடந்த காலங்களிலே குறிப்பாக 1983-க்குப் பிறகு மக்கள் மத்தியிலே படிப்படியாக பிழைப்புவாதம், காரியவாதம் என்பவை அரசியல் கட்சிகளின் கண்ணோட்டத்திலிருந்து மக்கள் மத்தியிலே பிரச்சாரம் செய்யப்பட்டு வந்திருக்கிறது.

அரசியல் சித்தாந்தத்திற்காக அல்ல. தங்களுடைய சுயநலன்களுக் காக பிழைப்புவாத நோக்கத்துடன் அரசியல் கட்சிகளை நடத்துவது என்பதாக படிப்படியாக மாறி வந்திருக்கிறது. மக்களில் கணிசமான பேர் அந்த பிழைப்புவாதக் கண்ணோட்டத்திற்குள் விழுந்திருக்கிறார் கள். அரசியல் கட்சிகளினுடைய தொண்டர்கள் எல்லோருமே குறிப் பிட்ட கட்சியில் இருப்பதின் மூலம் ஆதாயம் இருக்கிறதா, இல்லையா என்பதைப் பார்த்துதான் அந்த கட்சியிலே இருக்கிறார்கள். அந்த கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும், தங்களுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லாத அளவுக்கு அரசியல் நடத்த வேண்டும் என்பதை வழிமுறையாகக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட சீரழிவுப் பார்ப்பனச் செய்தி ஊடகங்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. இதுதான் நிலைமை.

இதோடு கூடவே, எப்படிப்பட்ட சக்திகளை நம்பி ஈழ விடுதலையைச் சாதிக்க முடியும் என்பதை பற்றி ஒரு தவறான கண்ணோட்டம் ஈழ இனவாத, ஆதரவுத் தலைமைகளிடமே இருக்கிறது. அந்தக் கண்ணோட்டங்கள் எவை? ஒன்று, ''இங்கேயிருக்கக் கூடிய பார்ப்பனச் செய்தி ஊடகங்கள், மற்றும் பார்ப்பன அதிகார வர்க்கத்தின் தவறான வழிகாட்டுதல் காரணமாக ஈழ ஆதரவு நிலையை இந்திய அரசு எடுப்பதில்லை. இவர்களுக்குச்



படிப்பகம்

www.padippakam.com

சரியான முறையில் தெளிவு படுத்திவிட்டால் ஈழ ஆதரவு நிலையை எடுத்து விடுவார்கள். இன்னொன்று, இந்தியாவைப் பகைத்துக் கொண்டு ஈழ விடுதலை என்பது சாத்தியமில்லை என்று மிகையாக நினைத்துக் கொள்வது. உண்மையில் ஈழ ஆதரவு சக்திகள் எதுவோ அந்த சக்திகளினுடைய ஆதரவை திரட்டுவதுதான் ஈழ விடுதலையைச் சாதிக்கும்.

இதற்கு மேலே போய் ஒரு சிலர் சொல்கிறார்கள், ஈழ ஆதரவு இனவாதக் குழுக்கள் சொல்கிறார்கள்: 'நேரடியாக இந்திய அரசு ஈழ விடுதலைக்கு எதிரானது என்று சொல்ல முடியாது. மக்களினுடைய ஆதரவை, நெருக்குதலை உருவாக்கி ஈழ விடுதலையை அவர்கள் ஆதரிக்கும்படி மாற்ற வேண்டும்.' இந்தக் கடமையை அவர்கள் மேற்கொண்டிருப்பதாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஆனால், இந்திய அரசு ஏன் ஈழ விடுதலையை ஆதரிக்க வேண்டும், அடிப்படையிலேயே இந்திய அரசு எப்படி இருக்கிறது, என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

### இந்திய மேலாதிக்க நோக்கங்களை ஈழப் போராளிகள் காண மறுப்பது ஏன்?

இந்திய அரசு வர்க்க ரீதியாக தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களின் அரசாக இருக்கிறது. இது சாதிரீதியாக, இன ரீதியாக சொல்லப்போனால் பார்ப்பன - பனியா கும்பலினுடைய அரசாக இருக்கிறது. இந்த தரகு அதிகார வர்க்க முதலாளி, நிலப்பிரபுக்கள் தங்களுடைய நலன்களை ஒட்டித்தான் இந்திய ஒருமைப்பாடு என்பதையே கட்டிக்காத்து வருகிறார்கள். இவர்கள் எப்பொழுதுமே ஒரு பிரச்சாரத்தை மேற்கொள்கிறார்கள். அதாவது இந்திய ஆளும் வர்க்கங்களும், பார்ப்பனச் செய்தி ஊடங்கங்களும் பயங்கரவாத, பிரிவினைவாத பீதி ஊட்டுவதைத் தொடர்ந்து செய்து வந்திருக்கின்றனர். ஜெயலலிதாவோ, இல்லை சுப்பிரமணிய சுவாமியோ, 'சோ'வோ, மட்டுமல்ல பிஜேபியாக இருக்கட்டும், காங்கிரசாக இருக்கட்டும் இவர்கள் எல்லாருமே ஒரு பயங்கரவாத, பிரிவினைவாத பீதி ஊட்டுவதைச் செய்து வருகிறார்கள். தமிழ் இன விடுதலை என்பது, தமிழனுடைய உரிமை என்பது - அது தன்னாட்சி உரிமையாக இருக்கட்டும், சுயாட்சி உரிமையாக இருக்கட்டும் அல்லது கூடுதல் அதிகாரம் என்கிற கோரிக்கையாக இருக்கட்டும், இவையெல்லாமே இந்திய தேசியத்திற்கு எதிரானது, பிரிவினைவாத நோக்கம் கொண்டது, இந்து மதத்திற்கு எதிரானது என்று திரும்பத்



படிப்பகம்

www.padippakam.com

திரும்ப ஒரு கருத்தை உருவாக்குகிறார்கள். இப்படி செய்தி ஊடகங்களும் ஆளும் வர்க்கமும், ஆளும் வர்க்க அரசியல் கட்சிகளும் இருக்கின்ற பொழுது, தமிழ்நாட்டு மக்கள் மத்தியிலே ஒரு ஆதரவைத் திரட்டி, இந்திய அரசுக்கு ஒரு நெருக்குதலை ஏற்படுத்துவதன் மூலமாக அதனை ஈழ ஆதரவு சக்தியாகத் திருப்பிவிட முடியும் என்ற நம்பிக்கையை தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

ஈரோட்டில் வைகோ மாநாடு நடத்தினார், அத்வானி போன்றவர்களை எல்லாம் மேடையில் வைத்துக் கொண்டு ஈழ ஆதரவுத் தீர்மானம் நிறைவேற்றினார். உடனே **நந்தன்** என்ற பத்திரிகை ''இது வைகோவுடைய திறமை; அவர்கள் வாயாலே ஈழ ஆதரவைச் சொல்ல வைத்து விட்டார்'' என்று எழுதுகிறது. இப்போது கடைசியாக, ஈழப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான், அதிகாரப் பகிர்வுதான் ஈழ பிரச்சினைக்கு ஒரு தீர்வு என்று மன்மோகன் சிங்கே சொல்லிவிட்டார். இதற்கு முன்பு வாஜ்பேயியும் சொல்லிவிட்டார். எப்படியாவது ஒருவகையில் இப்படி இவர்களை மாற்றிவிட முடியும் என்று நம்புகிறார்கள். உண்மையில் இப்படி மாற்றிவிட முடியும் என்று நம்புவது மட்டுமல்ல, ஏற்கெனவே சொன்னபடி தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய தேசிய இனவாதக் குழுக்கள் யாரைத் தமது எதிரி என்று சொல்கிறார்களோ அவர்களுக்கு நற்சான்றிதழ் கொடுக்கிறதாகவும் இந்த போக்கு உள்ளது.

'ஈழ ஆதரவு என்பது தமிழகத்தையும் இந்தியாவிலிருந்து பிரிப்பதில் வந்து நிற்கும்' என்று பார்ப்பன-பனியா செய்தி ஊடகங்கள் பிரிவினைவாத பீதி உருவாக்கும் போது, தமிழ் தேசிய இனவாதக் குழுக்கள் - தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவதாகச் சொல்லக் கூடிய தியாகு, மணியரசன், சுப வீரபாண்டியன் இன்னும் இவர்களைப் போன்ற பல்வேறு குழுக்கள் எல்லாம் சொல்கிறார்கள், ''இந்தியாவை பிரிப்பது எங்கள் நோக்கம் இல்லை, அது இந்தியாவிற்குப் பொருந்தாது''. இவ்வாறு தாங்களாகவே முன் மொழிகிறார்கள். ''இலங்கையில் அப்படி ஒன்று ஏன் தேவைப்படுகிறது எனில் அங்கு இந்தியாவில் இருக்கிற அளவு அதிகாரப் பகிர்வு இல்லை. தமிழ்நாட்டில் அப்படியொரு கோரிக்கை எழுப்புவதற்கான அவசியமில்லை'' என்று சொல்கிறார்கள். இப்படி தங்களை தற்காத்துக் கொள்வதற்காக இந்தியாவை ஜனநாயகமான ஒரு நாடு என்று இவர்களே சான்றிதழ் கொடுக்கிறார்கள். பிறகு எதற்கு டெல்லி ஏகாதிபத்தியம், தமிழ் தேசிய இனத்தினுடைய



படிப்பகம்

www.padippakam.com

விடுதலை, இங்கே தமிழ் மக்கள் ஒருதலை பட்சமாக நடத்தப் படுகிறார்கள், மாநில சுயாட்சி, தன்னாட்சி என்ற கோஷங்கள் எல்லாம்! இந்த கோஷங்களை வைத்துக் கொண்டே இந்தியாவில் பிரிவினை தேவையில்லை என்று சொல்கிறார்கள். இத்துடன் நில்லாமல் வடகிழக்கில், காஷ்மீரில் நடக்கும் தனிநாடு கோரிக்கைகளை வெளிநாட்டு சக்திகளினுடைய தூண்டுதல், நாங்களெல்லாம் இந்திய ஒருமைப்பாட்டுக்காக இருக்கிறோம். இந்தியாவில் தேவையில்லாமல் இந்தப் போராட்டங்கள் நடக்கிறது என்று யார் சொல்கிறார்கள் என்று பார்த்தால், ஆண்டன் பாலசிங்கம் சொல்கிறார் - புலிகளினுடைய சித்தாந்த தளபதி சொல்கிறார், கிட்டு சொல்கிறார். இவர்கள் எல்லாம் இறந்து போய்விட்டார்கள். இப்போது இருக்கிற நடேசனும் - இந்தியாவில் தனிநாடு பிரிவினை கோரிக்கை அவசியமில்லை என்று அதையேதான் சொல்கிறார்.

''உலகத் தமிழர் எல்லோரும் ஓரினம் என்ற முறையில் ஈழ விடுதலையை ஆதரிக்க வேண்டியது இந்தியாவில் இருக்கக்கூடிய தமிழர் இயக்கங்களின் கடமை'' என்கிறார்கள். ஆனால், அவர்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளுக்கு எதிரான கருத்துக்களை வேறு மாதிரி சொல்வது அவர்களின் உரிமை என்கிறார்கள். நியாயமாக இவர்கள் என்ன சொல்ல வேண்டும், ''இந்தியாவிலும் இன ஒடுக்குமுறை உள்ளது. அதனால்தான் வடகிழக்கு இந்தியாவில் நாகா, மிசோ, அஸ்ஸாம் மக்களெல்லாம் இத்தனை வருடமும் போராடுகிறார்கள், காஷ்மீரில் போராடுகிறார்கள்'' என்று அல்லவா சொல்ல வேண்டும்.

சிங்கள அரசு என்னவெல்லாம் செய்கிறதோ, அதே செயல்களைத்தான் இந்திய அரசும் இங்கு செய்கிறது. அப்படிப்பட்ட இந்திய அரசு ஈழ விடுதலைக்கு ஆதரவாக வரும் என்று சொல்வதே இந்திய அரசுக்கு நற்சான்றிதழ் வழங்குவதாகும். அத்துடன் நில்லாமல் ஈழ விடுதலை ஆதரவாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் வைகோ போன்றவர்களும், பொடாவை ஆதரித்தார்கள், குஜராத் மதவெறி படுகொலையைப் நியாயப்படுத்துகிறார்கள். 1962-இல் சீனப் போர் தொடங்கியதிலிருந்தே அண்ணாதுரை, கருணாநிதி போன்றோர் இந்திய தேசியத்தை மறைமுகமாக ஆதரித்தார்கள். பாரதிதாசன் முதற்கொண்டு பலரும் இந்திய ஒருமைப்பாட்டை கட்டிக் காப்பவர்களாக மாறி இருக்கிறார்கள். ஆக, இந்த அடிப்படையில் தான் இந்தியாவில் சுயநிர்ணய உரிமை தேவையில்லை என்று சொல்கிறார்கள், இவர்கள். இவ்வாறு இந்திய அரசை ஆதரிப்பது



படிப்பகம்

www.padippakam.com

ஈழப் பிரச்சினைக்காக மட்டுமல்ல இவர்களது நோக்கம். எப்போதுமே ஆதரிப்பதுதான் இவர்களின் நோக்கம்.

ஓட்டுப் பொறுக்குவதற்காக வேண்டியே ராமதாசு, வைகோ போன்றவர்கள், இந்திய அரசு ஈழ விடுதலையை ஆதரிக்கும் என்று சொல்லி வரும் இவர்கள், இதன் மூலம் ஈழ மக்களுக்கு துரோகம் செய்கிறார்கள். புலிகளைப் பொறுத்தவரை நேரடியாகவே இதைத் தமது அறிக்கைகள் மூலம் எவ்வளவோ முறை செய்திருக்கிறார்கள். இந்தியாவினுடைய மேலாதிக்கத்துக்கு எதிரிகளாக இருக்க மாட்டோம், இந்தியாவினுடைய பிராந்திய நலன்களுக்கு புலிகள் இயக்கம் எதிரிகளாக இருக்காது என்று பிரபாகரன், கிட்டு, மற்றும் பாலசிங்கம் இவர்கள் எல்லாம் அறிக்கைகள் விட்டார்கள். இப்போது நடேசன் விடுகிறார். அவருக்கு முன்பு இறந்து போன தமிழ்செல்வன் இவ்வாறு அறிக்கை விட்டு வந்தார். இப்படி அறிக்கைகள் விடுவதன் மூலம் புலிகள் சிங்களவர்களை விட விசுவசமாக இந்தியாவின் பிராந்திய நலன்களுக்குத் துணையாக இருப்போம் என்று சொல்கிறார்கள்.

ஒரு பக்கம் தமிழ் மக்களைத் திரட்டி இந்திய அரசுக்கு நெருக்குதலைக் கொடுத்து ஆதரவைப் பெற்றுவிடலாம் என்று நம்புவது, இன்னொரு பக்கம் தனி ஈழம் அமைந்தால் தமிழகம் முதல் பல்வேறு தேசியங்களை ஒடுக்கி வரும் இந்தியாவின் பிராந்திய நலன்களுக்குத் துணையாக இருப்போம் என்று சொல்லுவது. இவ்வாறான அணுகுமுறை எப்படிப்பட்ட துரோகத்தனமானது! புலிகளும் இந்த துரோகத்தை செய்கிறார்கள், மற்றவர்களும் செய்கிறார்கள்.

இந்தியாவின் பிராந்திய நலன் என்பது என்ன? இந்தியாவைச் சுற்றி இருக்கிற நாடுகளை தனது ஆளுமையின் கீழ் கொண்டு வருவதற்கு 'ரா' வேலை செய்கிறது. வங்க தேசத்தில் ராணுவத்தைக் கொண்டு தலையீடு செய்தது. சிக்கிமைக் கைப்பற்றியது. நேபாளத்தில் தலையீடு செய்கிறது. பூடானில் தலையீடு செய்கிறது. இப்படி பிராந்தியம் முழுவதும் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சிக்கிறது. சீனாவும், பாகிஸ்தானும் வந்துவிடக் கூடாது என்பதற்காக இந்தியா இவ்வாறு செய்வதாக சொல்லிக் கொள்கிறார்கள். தனி ஈழம் அமைந்தால் இப்படிப்பட்ட மேலாதிக்க நோக்கம் கொண்ட இந்திய பிராந்திய நலன்களுக்கு துணை போவோம் என்று புலிகள் சொல்வதின் அர்த்தம், சிங்களவனிடம் இருந்து ஈழத்தை விடுதலை செய்து இந்தியாவுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அடிமையாக்குவேன் என்பதுதான். ஆக, உண்மையில் நமது புரட்சி என்பது இந்திய மேலாதிக்கத்திற்கும் எதிராக இருக்க வேண்டும். இவர்கள் இப்படி தமிழக, ஈழ மக்களுக்கு துரோகமான ஒரு அணுகுமுறையை இந்தியாவிடம் கொண்டிருந்தாலும், இந்தியாவானது எப்போதுமே ஈழ எதிர்ப்பு, சிங்கள ஆதரவு நிலைப்பாட்டையே மேற்கொண்டு வந்துள்ளது.

இப்படி ஒரு நிலைப்பாட்டை இந்தியா கொண்டிருப்பதற்கு ஒரு முக்கிய அடிப்படை உள்ளது. ஏற்கெனவே பார்த்தது போல கிழக்கு திமோர், செகோஸ்லாவாகியா, ரஷ்யாவிலிருந்து தேசிய இனங்கள் பிரிந்து போனதை ஏகாதிபத்தியங்கள் ஆதரித்தன. ஆனால் இலங்கையில் மட்டும் ஈழம் பிரிந்து செல்வதை இந்தியாவும், ஏகாதிபத்தியங்களும் ஆதரிக்கவில்லை. ஏனெனில், ஒன்றுபட்ட சிங்கள அரசின் கீழான இலங்கைதான் இன்றைய உலகமயமாக்கம், தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம் கொள்கைகளுக்கு ஏற்றதாக ஏகாதிபத்தியங்களும், இந்தியா போன்ற நாடுகளும் கருதுகின்றன. இலங்கையைப் பிளவுபடுத்தி தங்களது உலகமயமாக்கத் திட்டங்களைச் செயல்படுத்திவிடலாம் என்று இவர்கள் கருதவில்லை. எனவே ஈழம் விடுதலை பெறுவதற்கு இவர்கள் ஆதரவாக இல்லை. இதனை சில ஆதாரங்களின் மூலம் புரிந்து கொள்ளலாம்.

இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதியில் 89% இந்தியக் கடலோரங்கள் மூலமாக நடக்கிறது. வங்கதேசம், நேபாளம், பூடான், சிக்கிம் அல்லது பர்மா, பாகிஸ்தான் போன்றவையுடன் தரைமார்க்க மாக வணிக உறவு கொண்டுள்ளது. 70% வணிகம் இலங்கையின் மூலமாக இந்தியாவிற்கு நடந்தேறுகிறது. சேது சமுத்திரத் திட்டம் நிறைவேறினாலும் இதில் பெரிய மாற்றம் வந்துவிடாது. ஏனெனில் கொழும்புத் துறைமுகத்தையும், திரிகோணமலை துறைமுகத்தையும் சார்ந்து இந்துமாக்கடல் மார்க்கமாக பெரிய அளவில் இந்தியா வணிகம் செய்து வருகிறது. தனி ஈழத்தை ஆதரிப்பதன் மூலம் இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த வணிக உறவை இந்தியாவால் பாதுகாக்க முடியுமா? சீனா, பாகிஸ்தானுடன் சேர்ந்து கொண்டோ அல்லது அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான் போன்ற ஏகாதிபத்தியங்களுடன் சேர்ந்து கொண்டோ சிங்கள அரசு எப்போது வேண்டுமானாலும் இந்தியாவின் வர்த்தக நலனுக்கு ஊறாகிவிடும் என்கிற பயம் இந்தியாவின் நிலைப்பாட்டை தீர்மானிக்கிறது. இந்தியாவைச் சுற்றியுள்ள கடல் வழி மார்க்கத்தை முழுக்க முழுக்க



படிப்பகம்

www.padippakam.com

சுதந்திரமாக வைத்துக் கொள்ள வேண்டிய தேவை இந்தியாவுக்கு உள்ளது.

இலங்கையை எடுத்துக் கொண்டால், இலங்கையினுடைய 55% வர்த்தகம் இந்தியாவுடன் நடக்கிறது. இந்திய பெருமுதலாளிகள் மிகப் பெரிய அளவில் முதலீடு செய்யக் கூடிய நாடுகளில் ஒன்றாக இலங்கை இருக்கிறது. மன்னார் மாவட்டத்திலே ஆழ்கடல் துரப்பணவு ஆய்வுகளை நடத்தி, எண்ணெய் வளங்களைபண பயன்படுத்திக் கொள்வதற்கு சீனாவுக்கு இலங்கை அனுமதி அளித்திருக்கிறது. சீனாவுக்கு மட்டுமல்ல இந்தியாவிற்கும் அனுமதி அளித்திருக்கிறது. யாழ்ப்பாணத்தை ஒட்டி இருக்கிற பகுதிகளிலே சிமெண்டு தொழிற்சாலை நடத்துவதற்கு பிர்லாவுக்கு அனுமதி அளித்திருக்கிறது, திரிகோணமலையிலே இருக்கக்கூடிய எரிவாயு, எண்ணெய்க் கிடங்குகளைப் பயன்படுத்திக்கொள்ள இந்தியாவுக்கு அனுமதி அளித்திருக்கிறது. இந்தியாவினுடைய போக்குவரத்துச் சாதனங்களினுடைய முக்கியமான சந்தைகளில் ஒன்றாக இலங்கை இருக்கிறது. இந்தி சினிமா, தமிழ் சினிமாவின் முக்கியச் சந்தையாக இலங்கை உள்ளது, வாகனத் தயாரிப்பு நிறுவனங்களான அசோக் லேலண்ட், பஜாஜ் போன்றவற்றின் முக்கியமான சந்தை என இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு இலங்கை பயன்படுகிறது. இந்திய அரசு ஈழத்தை ஆதரிக்க வேண்டும் என்றால் இலங்கையை எதிர்க்க வேண்டும், அப்படி என்ன தேவை இந்திய ஆளும் வர்க்கத்துக்கு இருக்கிறது?

இது ஒரு பக்கம் இருக்க, இந்தியாவின் ஒரு பகுதியாக உள்ள தமிழக மக்களினுடைய நெருக்குதல்களுக்கு இந்திய ஆளும் வர்க்கம் செவி சாய்க்கும் என்பது ஈழ ஆதரவு இனவாதிகளின் இன்னொரு மூடநம்பிக்கை. இந்தியத் தமிழர்களைப் பொறுத்த வரைக்கும் இவர்களுடைய கோரிக்கையையே இந்திய அரசாங்கம் செவி சாய்ப்பதற்கு, ஒப்புக் கொள்வதற்கு ஏற்றுக் கொள்வதற்கு, தயாராயில்லை. இந்தியத் தமிழர்களுடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு அதனால் கிடைக்கும் 40 தமிழ்நாட்டு எம்.பி.க்களின் ஆதரவு இன்றைக்கு மத்திய அரசுக்கு தேவைதான். இவர்களும் பதவி விலகுவோம் என்று நாடகமாடிப் பார்க்கிறார்கள். ஆனாலும், கர்நாடகாவைச் சேர்ந்த 25 எம்.பி.க்களினுடைய ஆதரவுதான் மத்திய அரசுக்கு முதன்மையானது என்று கருதி காவிரி பிரச்சினையில் தலையிட மாட்டேன் என்கிறது. அல்லது



படிப்பகம்

www.padippakam.com

ஆந்திராவினுடைய 50 எம்.பி.க்களினுடைய ஆதரவு தேவை என்று கருதி பாலாறு பிரச்சினையில் தலையீடு செய்ய மாட்டேன் என்று சொல்கிறது. கேரளாவில் 20 எம்.பி.க்கள்தான் இருக்கிறார்கள், ஆனால் முல்லைப் பெரியார் பிரச்சினையில் உச்சநீதி மன்ற தீர்ப்பையே கூட அமுல்படுத்த மாட்டேன் என்கிறார்கள். எல்லாவற்றிலுமே நழுவுகிற வகையில் பேசுகிறது, மத்திய அரசு. இவ்வாறு தமிழகத் தமிழர்களின் சொந்தக் கோரிக்கைகளான காவிரி உரிமையையோ, முல்லை பெரியாறு உரிமையையோ, ஒகேனக்கல் உரிமையையோ இந்திய அரசுக்கு நெருக்குதல் கொடுத்து பெற முடியாத இந்திய தமிழர்கள், ஈழத் தமிழர்களுக்காக மத்திய அரசை நெருக்குதல் கொடுத்து விடுவார்கள், ஆதரவை பெற்றுவிடுவார்கள் என்று நம்புவது உண்மையில் வேடிக்கையானதாக இருக்கிறது.

இந்தியத் தமிழக அரசியல்வாதிகளின் மத்திய அரசை நெருக்கும் அணுகுமுறை கூட எப்படிப்பட்டதாக இருக்கின்றது? இங்கிருக்கக் கூடிய அரசியல் கட்சிகள் மாநில அரசிலும், மத்திய அரசிலும் இருக்கக் கூடிய முரண்பாடுகளைப் பயன்படுத்தி ஆதாயம் அடையும் பிழைப்புவாதிகளாக இருக்கிறார்கள். மத்திய அரசில் பங்கேற்காமல் ஒருநாள் கூட இருக்கத் தயாராயில்லை, இந்த மாநிலக் கட்சிகள். மகாராஷ்டிராவிலோ, அஸ்ஸாமிலோ, பஞ்சாபிலோ பார்க்கக் கூடிய அளவுக்கு ஒரேயொரு தலைவரைக் கூட இங்கு பார்க்க முடியவில்லை. கருணாநிதி, ஜெயலலிதா, வைகோ, ராமதாஸ், வீரமணி என்று இவர்கள் அனைவரும் பிழைப்புவாதிகளாக வெகுகாலத்திற்கு முன்பே மாறிப் போய் விட்டனர். இந்தியாவுக்கு பங்கம் வராத வகையில் ஈழத் தமிழர்களை ஆதரிக்க வேண்டும் என்பதுதான் இவர்களின் நிபந்தனை. தமிழர் நலனைக் கைவிட்டுவிட்டு, இந்திய ஒருமைப்பாட்டை முற்றாக ஏற்றுக் கொண்ட தலைவர்கள் இவர்கள்.

இவர்கள் கொடுத்த நெருக்கடி நாடகத்தைப் பார்த்து மக்களுக்கு குழப்பம்தான் மிஞ்சியது. எல்லோரும் பதவி விலகிவிடுவோம் என்றார்கள், பிரணாப் முகர்ஜி வந்து பேசியவுடன் தலைகீழாக மாறிவிட்டார்கள். ஈழத் தமிழர்களுக்காக கருணாநிதி எதுவும் செய்யவில்லை என்கிறார், ஜெயலலிதா, கருணாநிதி ஒரு தீர்மானம் நிறைவேற்றுகிறார். உடனே, அதனை புலி ஆதரவு தீர்மானம் என்கிறார் ஜெயலலிதா. எப்படி வேண்டுமானாலும் பேசலாம், மாறிக் கொள்ளலாம் என்ற பிழைப்புவாத அரசியலே இவர்களின் அடிப்படைக் கோட்பாடாக இருக்கிறது. இவர்களால் மத்திய



படிப்பகம்

www.padippakam.com

அரசுக்கு எந்த நெருக்கடியும் வராது என்பது இந்திய ஆளும் வர்க்கத்துக்கும் நன்றாகவே தெரியும்.

இவர்களின் யோக்கியதை பற்றி உச்சநீதி மன்றமும் கூட தெரிந்து வைத்திருக்கிறது, அரசியல்வாதிகள் எந்தளவுக்கு போவார்கள் என்றும், எந்தளவுக்குப் போராடுவார்கள் என்றும் அவர்களுக்கும் நன்கு தெரியும். இன்னொரு முக்கிய அம்சம், தமிழக அரசியல் தலைவர்களே ஆளும் வர்க்கத்தின் அங்கமாக இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளிலும் உள்ள தலைவர்களும் முக்கியப் பிரமுகர்களும் தரகு முதலாளிகளாக, பல ஆயிரம் கோடி ரூபாய்களில் தொழில் செய்பவர்களாக உள்ளார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் சேர்ந்து மத்திய அரசுக்கு என்ன வகையான நிர்ப்பந்தத்தைக் கொடுத்து விடப் போகிறார்கள்? அப்படியே நிர்ப்பந்தம் கொடுத்தாலும் மத்திய அரசு இவர்களைப் போன்ற பிழைப்புவாதிகளை இலகுவாகக் கையாண்டு விடும். தமிழர் உரிமை, சுயாட்சி என்று பேசும் இவர்கள் பலரும் ஏதோ ஒரு வகையில் பார்ப்பன மதவாதிகளாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரின் கொடிகளிலும் சாதியின் குறியீடான, கடவுளின் குறியீடான மஞ்சள் நிறம் இருக்கிறது. இவர்களையெல்லாம் வைத்து வடநாட்டில் பார்ப்பன ஊடகங்கள் தமிழர் விரோதப் பிரச்சாரம் செய்து வருகின்றன. தமிழர்களைப் பற்றி ''தமிழ்நாட்டை பிரிக்கிற முயற்சியில் இவர்கள் இருக்கிறார்கள், தமிழரை நம்பக் கூடாது, தமிழன் சினிமா பின்னால் செல்லுகிற மந்தை'' என்று பிரச்சாரம் செய்து வருகின்றன வட இந்திய ஊடகங்கள். தமிழ்நாட்டு அரசியல்வாதிகளையெல்லாம் நையாண்டி செய்யும் பார்ப்பன, வட இந்திய ஊடகங்கள் தமிழகத்தின் குரலாக 'சோ' ராமசாமியின் பேட்டியைத்தான் வெளியிடுகிறார்கள்.

இங்கே இருக்கக்கூடிய பிழைப்புவாதிகளாகச் சீரழிந்து போனவர்கள் யாரும் ஈழத்துக்காக மத்திய அரசுக்கு நெருக்குதல் கொடுக்க மாட்டார்கள். இதேநேரத்தில், இந்தியாவும் ஈழத்தை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இல்லை. அதற்குப் பதிலாக சிங்கள இன வெறியை ஆதரிப்பதுதான் இந்திய ஆளும் வர்க்கத்தினுடைய நோக்கம். அதைத்தான் நிறைவேற்றுவார்கள். இந்திய ஆளும் வர்க்கத்தினுடைய தன்மை, உண்மையான பின்னணி, உண்மையான நோக்கத்தை அம்பலப்படுத்தாத எந்தவொரு இயக்கமும், ஈழ ஆதரவுக்கும் மக்களைத் திரட்ட முடியாது, இந்தியாவிலும் ஆளும் வர்க்கத்தை எதிர்க்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

இந்திய ஆளும் வர்க்கத்தினுடைய உண்மையான நோக்கங்கள் என்னவோ, வர்க்க நலன்கள் என்னவோ அதற்காகத்தான் அவர்கள் எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனை மறைத்துவிட்டு இந்திய அரசை ஈழத்திற்கு ஆதரவாகக் கொண்டு வந்துவிடலாம் என்று இங்குள்ள பிழைப்புவாதிகள் மக்களை ஏமாற்றுகிறார்கள்.

அதே மாதிரி இன்றைக்கு ஈழ விடுதலை என்பது உடனடியாகச் சாத்தியமில்லை, புலிகள் தற்காப்பில் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். என்றாலும் புலிகள் பின்வாங்கி கொண்டிருக்கிறார் கள், நிறைய பகுதிகளை இழந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் உண்மை. ஆனால், புலிகள் தமது சக்திகளை திரட்டி அவ்வப் பொழுது தாக்குதல் நடத்தி பேரிழப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். குறிப்பாக சமீபத்தில் அவர்கள் நடத்திய விமான தாக்குதல் பேரிழப்பை உருவாக்கியது. இரண்டே விமானம்தான் வைத்திருக் கிறார்கள். இலங்கையிடம் பல விமானங்கள் உள்ளன. அமெரிக்கா வால் கொடுக்கப்பட்டது, பாகிஸ்தானிலிருந்த வந்தது, இஸ்ரேலிடம் வாங்கிய விமானங்கள் என பலவற்றை வைத்திருக்கிறது. ஆனால், சிங்கள அரசினுடைய அனல் மின் நிலையத்தைத் தகர்த்துவிட்டு வந் திருக்கிறார்கள், புலிகள். அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கடல் படையைத் தாக்கியிருக்கிறார்கள். அதற்கு முன்பு, ஏப்ரல் மாதத்தில் 300-க்கும் மேற்பட்ட சிங்கள் ராணுவத்தினரைச் சுற்றி வளைத்து ஒரேயொரு போரில் அழித்திருக்கிறார்கள். ஒரேடியாக புலிகள் அழிந்து போய்விட்டார்கள், இதோ நாளைக்கே ஈழம் மொத்தத்தை யும் கைப்பற்றுவோம் என்பதும் ஏற்கக்கூடியதாக இல்லை.

அரசியல் தீர்வுதான் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு என்று மன்மோகன் சிங் சொல்லிக் கொண்டே இராணுவத்தை அனுப்பிக் கொண்டிருக்கிறார். போர் நிறுத்தத்திற்கான முயற்சி, போரை நிறுத்து என்று பேச மாட்டேன் என்கிறார். அரசியல் தீர்வுதான் தீர்வு, யாருடைய அரசியல் தீர்வு என்று சொன்னால், அதற்கு ராஜபக்சே கூறுவதைப் போல புலிகள் இல்லாத மற்ற ஈழ குழுக்களுடனான அரசியல் தீர்வு என்று தான் பொருள். மன்மோகன் சிங், கருணாநிதி போன்றோர் அரசியல் தீர்வு என்று சொல்லுவதும் ராஜபக்சே சொல்கிற அர்த்தத்தில்தான். ஆனால், தமிழக மக்களிடம் சொல்லும் போது மட்டும், எல்லா ஈழத் தமிழர்களுக்கும் எதிரான ராணுவ தாக்குதலையும் நிறுத்துவோம், பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு, அரசியல் பகிர்வு என்று புளுகுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## உலக சமூக நிலை மீதான ஈழப் போராளிகளின் பிரமை

மேற்கண்ட நிலைமையில் புலிகள் என்ன செய்ய வேண்டும்? உலக நாடுகள் மத்தியில் மீண்டும் ஈழ ஆதரவு வேண்டும். அது இல்லாமல் ஈழ விடுதலை என்பது சாத்தியமில்லை. ஆனால், உலக நாடுகள் மத்தியில் என்றால் அரசுகள் மத்தியில் அதைப் பெற முடியாது என்பதுதான் நிலமை. சர்வதேசிய ரீதியில் ஈழ மக்களினுடைய விடுதலைப் போராட்டம் நியாயமானது என்கிற ஒரு கருத்தை எல்லா நாடுகள் மத்தியிலும் உருவாக்க முடியாது. ஏனென்றால், உலக நாடுகளில் ஆட்சியில் இருக்கும் அரசுகள் எல்லாமே உலகமயமாக்கம், தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம், அமெரிக்காவின் ஒற்றைத் துருவம் இவற்றை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு சில ஏகாதிபத்தியங்கள் புதிதாக இன்று மறுபடியும் மேல்நிலைக்குத் தலை தூக்கி வருகின்றன. ரஷ்யாவோ, ஐரோப்பிய நாடுகளோ, ஜப்பானோ இவர்கள் பல்வேறு விசயங்களில் மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தாலும் ஈழ பிரச்சினையைப் பொறுத்தவரை அவர்கள் எல்லாரும் அமெரிக்கா வினுடைய நிலையை அடியொற்றிச் செல்பவர்களாக இருக்கிறார் கள். ஆனால் அதே சமயத்திலே நீங்கள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையை மறுபடியும் தொடங்குங்கள் என்று பெயருக்குச் சொல்கிறார்கள். ஆனால், உலக நாடுகள் எல்லாமே பொதுவில் ஒரே அணியில் நிற்கின்றன. அதுதான் இன்றைய உலக நிலைமை.

ஈழ விடுதலைக்கு உலகளாவிய ஒரு ஆதரவை உருவாக்கு வதற்கு, உலகிலே எங்கெல்லாம் புரட்சிகர இயக்கங்கள் இருக்கின்ற னவோ, எங்கெல்லாம் இன்றைக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு, உலகமய மாக்கம், தனியார்மயமாக்கம், தாராளமயமாக்கம் கொள்கை மற்றும் ஒற்றைத் துருவ அமெரிக்காவினுடைய மேலாதிக்கத்திற்க்கு எதிராகப் போராடுகிற சக்திகள் இருக்கின்றனவோ, அவற்றை, அவை எவ்வளவு சிறிய சக்திகளாக இருந்தாலும் ஒன்று திரட்டி, ஈழ விடுதலை என்பது நியாயமானது என்பதற்கான உலகு தழுவிய ஒரு பிரச்சார இயக்கம் உருவாக்கப்பட வேண்டும். ஆனால் இப்படிச் சொல்லிக் கொண்டு, எல்லா சக்திகள் என்கிற பெயரிலே, ஏகாதிபத் தியங்களாலேயே நிதி கொடுத்து, பயிற்றுவித்து அனுப்பப்பட்ட அரசு சார்பற்ற நிறுவனங்கள். உலக சமூக மன்றம் (WSF) போன்றவற்றுடன் கூட்டு வைப்பது கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

ஏகாதிபத்தியங்களால் அரசாங்கத்துக்கு வெளியே மக்களினுடைய ஆதரவைத் திரட்டுவதற்கு, எதிர்ப்பைத் திசை திருப்புவதற்கு, மழுங்கடிப்பதற்கு ஏற்படுத்தப்பட்டதுதான் உலக சமூக மன்றம். நாடு முழுவதும், உலகம் முழுவதும் பல லட்சம் அரசு சாரா நிறுவனங்களை உருவாக்கி வைத்துள்ளனர். 'மனித உரிமை கங்காணி' பத்திரிகை நடத்துகிற 'பீப்பிள்ஸ் வாட்ச்' ஹென்றி போன்றவர்கள் ''நானும் மக்களினுடைய மனித உரிமைக்காக நிற்கிறேன். நானும் வீரப்பனை, வீரப்பனின் ஆதரவாளர்களை போலீசு சுட்டுக் கொன்றதை எதிர்க்கிறேன், நானும் தேவாரம், விஜயகுமாருடைய அடாவடித்தனங்களை எதிர்க்கிறேன், அரசு சாரா நிறுவனம், மனித உரிமைக்காக நிற்கிறேன்'' என்கிறார்கள். இந்த மனித உரிமை நிறுவனங்கள் எல்லாம் தாமே சுயமாக வந்ததுபோல நடிக்கிறார்கள். தமிழ்நாட்டு மனித உரிமை நிறுவனம், இந்திய மனித உரிமை நிறுவனத்துடனும், அது அகில உலக மனித உரிமை நிறுவனத்துடனும் கூடி பேசித்தான் செயல்பட்டு வருகிறார்கள், நிதியும் பகிர்ந்து கொள்கிறார்கள், அப்படித்தான் என்று அவர்களுடைய அறிக்கைகளிலும் எழுதிக் கொள்கிறார்கள். இவர்கள் எல்லாம் சேர்ந்து ஒரு கூட்டமைப் பாகச் செயல்படுகிறார்கள். இவைபோலப் பல ஆயிரம் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளன. இவர்கள் எல்லாம் உலக சமூக மன்றத்தில் உறுப்பினர்கள்.

இந்த விசயத்தை நாம் எதற்காகப் பேசுகிறோம் என்றால், இது போன்ற நாசகார சக்திகள் ஈழ விடுதலைக்கு ஆதரவு என்று சொன்னாலும் கூட, உண்மையான சக்திகள் எதுவோ அதை நம்பித்தான் நாம் அணி திரட்ட வேண்டும். 'பொதுவாக இந்திய அரசு அப்படி இப்படி இருக்கலாம், தன்னார்வக் குழுவாக (NGOவாக) இருக்கலாம். ஆனால் ''ஈழத்தை ஆதரிக்கிறோம்; அகதிகள் முகாம்களில் நடக்கக்கூடிய மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துகிறோம்'', என்றெல்லாம் சொல்லிக் கொண்டு வரும் அரசுசார நிறுவனங்களைச் சார்ந்து இயங்கியவர்கள், இந்த ஈழ விடுதலைப் போராளி அமைப்புகள். இந்தியாவில் உள்ள பல புரட்சிகர இயக்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றுக்கெல்லாம் முன்னோடியாக இந்தியாவில் இருக்கக்கூடிய எல்லா முற்போக்கு அமைப்புகளுக்கும் இந்த விசயத்தில் வழிகாட்டுதலாக அமைந்தவர்கள், ஈழப் போராளிகள் குழுக்கள். தமிழ்நாட்டில் இந்த NGO அமைப்புகள் தோன்றுவதற்கு முன்பே ஈழத்தில் அவர்களுடன் போய் சரணடைந்து ''அவர்களினுடைய உதவி வாங்கி, அவர்களின் நிதி வாங்கி, கூட்டு சேர்ந்து இயக்கம் நடத்துவதுதான் சரி''



படிப்பகம்

என்றவர்கள் ஈழ விடுதலைப் போராளிகள். பிளாட்டாக இருக்கட்டும், எல்டிடிஇ-யாக இருக்கட்டும், ஈராஸாக இருக்கட்டும், டெலோவாக இருக்கட்டும் அல்லது ஈபிஆர்எல்எஃப் ஆக இருக்கட்டும், இவர்கள் எல்லோருமே 'ரா'விடம் மட்டும் உதவி வாங்கவில்லை, 'ரா'வை மட்டும் நம்பி ஈழ விடுதலையை சாதிப்போம் என்று சொல்லவில்லை. அரசு சாரா தொண்டு நிறுவனங்களையும் சார்ந்து, அவர்களிடம் நிதி வாங்கி, அவர்களை ஊடுருவ அனுமதித்து, அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு ஈழ விடுதலையைச் சாதித்து விடலாம் என்றார்கள்.

இதற்குப் பல்வேறு காரணங்கள் சொன்னார்கள், ''நாம் சிறுபான்மையாக இருக்கிறோம், நாமதான் அறிவாளிகள் ஆச்சே, வேற வழியில்லை தோழர், அவர்களிடம்தான் காசு இருக்கிறது, அது ஏகாதிபத்தியக் காசாக இருந்தால் என்ன, யார் காசாக இருந்தால் என்ன, உடனடியாகச் சிங்கள இன வெறியைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கு ஆயுதமோ, நிதியோ, எதையாவது செய்து உதவுபவர்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்கிறார்கள்.

1983-லே அகதிகள் முகாம் உருவான பொழுது, இந்த அமைப்புகள் நம்முடைய அமைப்புகளை, இயக்கங்களை சந்தித்து ஈழப் போராளிகள் பேசினார்கள். அப்போது தொண்டு நிறுவனங்களை பற்றி உங்களுடைய கண்ணோட்டம் என்ன என்று கேட்ட பொழுது, ''தொண்டு நிறுவனங்களைப் பற்றி எங்களுக்குத் தெரியும், அவர்கள் எல்லாம் ஏகாதிபத்திய சக்திகள், ஆனால் அவர்கள் நிதி கொடுக்கிறார்கள் என்றால் அதை ஏற்றுக் கொண்டு, நாம் பயன்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்'' என்பதுதான் அவர்கள் சொன்ன பதில்.

இதையெல்லாம் கூர்ந்து பார்ப்பது, இப்படியெல்லாம் எல்லாவற்றிலும் குறை சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக அல்ல. ஒரு புரட்சிகர இயக்கம் எப்படிப்பட்ட துரோகிகளாலும் இவ்வாறு மாற்றப்படலாம், ஒரு புரட்சிகர இயக்கம் புரட்சிகர இயக்கமாக நீடிப்பதற்கு இவையெல்லாம் பார்ப்பது அவசியம்,

ஈழ விடுதலை எப்பொழுது சாத்தியம் என்றால், முதலில் உலகம் தழுவிய அளவிலே உண்மையான சக்திகள், புரட்சி சக்திகளுடன் ஒரு முன்னணியை அமைத்துக் கொள்ள வேண்டும். ஏமாற்றும் வகையிலே இருக்கக் கூடியவர்கள் யார், உண்மையான சக்திகள் யார்

www.padippakam.com

என்று பிரித்துப் பார்த்து ஒரு அணி சேர்ப்பது வேண்டும்; புரட்சிகரச் சக்திகள் சிறு சக்தியாக இருந்தாலும் இந்த வகையிலே அணுக வேண்டும். ஆனால், ஈழப் போராளிகள் காலமெல்லாம் என்ன செய்தார்கள் என்றால், இந்திய அரசு மாதிரி இருக்கக்கூடிய பிராந்திய ஆதிக்க, சுயநல சக்திகளை நம்பினார்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்களை நம்பினார்கள், இங்கே இருக்கக்கூடிய புரட்சிகர அமைப்புகளை நம்பவில்லை.. ஏனெனில் இது போன்ற அமைப்பினர் ஈழப் போராளி குழுக்களின் தலைமையைக் கேள்வி கேட்கிறார்கள், விமரிசனம் செய்கிறார்கள்.

கடைசியில், இவர்களே மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போனார்கள். கூடவே இருந்த ஈபிஆர்எல்எஃப் எவ்வளவோ துரோகம் பண்ணலாம், ஆனால் அப்படி துரோகம் செய்வதை அவர்களது அணிகளுக்கு எடுத்துச் சொல்லி, அந்த குழுக்களில் இருந்த அணிகளுடன் ஐக்கியமாக முற்பட்டிருக்கலாம். ஏனெனில், ஒரு இயக்கம் வெற்றி பெற வேண்டுமானால் நட்பு சக்திகளை அடையாளம் கண்டு, பகை சக்திகளை முறியடிக்க வேண்டும். ஆனால் இப்போதைய நிலைமை என்னவென்றால் ஈழத்தில் புலிகளின் செயல்பாடுகள் காரணமாக புரட்சிகர சக்திகளே கிட்டத்தட்ட இல்லை. ஒரு சில தனிநபர்கள் இருக்கிறார்கள், அவர்களிலும் சிலர் பயந்து கொண்டு இருக்கிறார்கள், புலிகளை ஆதரித்தால்தான் இருக்க முடியும் என்பதால் வேறு வழியின்றி ஆதரிக்கிறார்கள்.

அதேபோல 'ராணுவ ரீதியாக சிறுபான்மை ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை ஒழித்து விடலாம், ஈழப் போராளிகளை ஒழித்துவிடுவதன் மூலமாக இதைச் சாதிக்கலாம்' என்பதை தவறு என்று சொல்லக் கூடியவர்கள் சிங்கள மக்கள் மத்தியிலும் இருக்கிறார்கள். ராஜபக்சே கூட்டணியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட, மாவட்டத் தலைவர்கள் உள்ளிட்ட சில நபர்களும் கூட இருக்கிறார்கள். இலங்கையில் ஏற்பட்டிருக்கக் கூடிய எல்லா பொருளாதார நெருக்கடிகளுக்கும் தீர்வு தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழிப்பதுதான் என்று ராஜபக்சே சொல்லுவதை இவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. 'புலிகளை ஒழிப்பதன் மூலமாக, ஈழ பயங்கரவாதிகளை ஒழிப்பதன் மூலமாகத்தான் இலங்கையினுடைய பிரச்சினைகள், நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியும்' என்று சொல்வது ராஜபக்சேவினுடைய நிலை, அந்த நிலையை ஜேவிபி, உருமையா இது மாதிரி சிங்கள இன வெறியர்கள் ஆதரிக்கிறார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

ராஜபக்சேவினுடைய ராணுவ ரீதியிலான ஒடுக்குமுறையின் மூலமாக ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விட முடியும் என்பதை நம்பாத சிங்கள அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். அவர்கள் வெளிப்படையாக அறிக்கை விடுகிறார்கள். இது கற்பனையாகச் சொல்லக் கூடிய ஒரு விசயம் இல்லை. இலங்கையிலிருந்து வரக் கூடிய பத்திரிகைகள், இயக்கங்கள், இன்னும் புலிகளை மீறித் தலைமறைவாக நடத்தக் கூடிய தமிழ்ப் பத்திரிகைகள் போன்றவைகளில் இந்த செய்திகள் வருகின்றன. ஆனால், அவர்கள் எல்லாம் பெரிய சக்திகள் கிடையாது, பெரிய இயக்கங்கள் கிடையாதுதான்!

**ஈழம்:**
**தேவை ஒரு நேர்மையான மீளாய்வு**

1970-லே புதிய தமிழ் புலிகள் என்ற பெயரில் தொடங்கப்பட்ட இயக்கம், 1976-இல் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று மாற்றப் பட்டது. அப்போதிருந்து கடந்து வந்த பாதையை புலிகள் மீள் ஆய்வு செய்ய வேண்டும். பிரபாகரன், அவரைச் சுற்றியிருக்கக்கூடிய நான்கைந்து பேர் தவிர விடுதலைப் புலிகள் அமைப்பிலே இருக்கக்கூடிய அவ்வளவு பேரும் புதிய தலைமுறை. அந்த புதிய தலைமுறைக்கு புலிகள் என்ன வரலாறு சொல்லப் போகிறார்கள். கடந்த வந்த பாதைகள் எல்லாம் சரியானது என்று சொல்லப் போகிறார்களா? புலிகள், மார்க்ஸிய-லெனினிய முறையில் சுய விமர்சனம் கூட செய்து கொள்ள வேண்டாம், ஒரு நேர்மையாளர் என்கிற முறையிலே ஒரு மீள் ஆய்வு செய்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது.

ஆனால், புலிகளோ அவ்வப்பொழுது தாங்கள் செய்தது தவறு என்று சில அறிக்கைகள் விடுகிறார்கள், சுயவிமர்சனம் ஏற்றுக் கொள்வதையும் தவறாகச் செய்கிறார்கள். முஸ்லீம் சிறுபான்மையினரைக் கொன்று, பகைத்ததன் மூலம் தாங்கள் தனிமைப்பட்டுப் போய்விட்டோம் என்பது உண்மைதான் என்கிறார்கள். ஆனால் இது ஒரு முழுமையான மீளாய்வு அல்ல. புலிகள் அங்கே என்ன செய்தார்கள்? ஒரு குறிப்பிட்ட தேதி அறிவித்து, அந்த தேதிக்கு பிறகு ஈழத்தில் வாழக் கூடிய முஸ்லீம்கள் அனைவரும் வெளியேறிவிட வேண்டும் என்று ஆணையிட்டார்கள். சிவசேனாவுக்கும் ராஜ்தாக்கரேவுக்கும் மோடிக்கும் தொகாடியாவுக்கும் இவர்களுக்கும் என்ன வேறுபாடு. குஜராத்திலிருந்து, இந்தியாவிலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றி விடுவோம் என்று தீர்மானம்



படிப்பகம்

www.padippakam.com

நிறைவேற்றிய மோடிக்கும் அத்வானிக்கும், புலிகளுக்கும் என்ன வேறுபாடு. இதுதான் ஈழத் தமிழனுடைய விடுதலைக்கான இயக்கமா?

மன்னார் மாவட்டத்தில் ஒரு மசூதியில் தொழுகை நடத்திக் கொண்டிருந்த முஸ்லீம்கள் மீது விடுதலைப் புலிகளின் படை புகுந்து நூற்றுக்கணக்கானவர்களைச் சுட்டுக் கொன்றது. இதற்கும் குஜராத்தில் 2002-இல் நடந்த மதவெறிப் படுகொலைகளுக்கும் என்ன வித்தியாசம்? இவை புலிகளுடைய நோக்கத்திற்கே, ஈழத் தமிழனுடைய விடுதலை நோக்கத்திற்கே பாரிய ஊறு விளைவித்திக்கிறது. இது ஒரு உதாரணம் மட்டுமே. இன்றைக்கு முஸ்லீம்களிடம் ஆதரவு கேட்கிறார்கள். இன்றைக்கு சீமானும், அமீரும் ஈழ ஆதரவு இயக்கத்திலே இருக்கிறார்கள். எல்லா முஸ்லீமும் எதிரிதான் என்றால் அவர்களும் எதிரிகளாக நிற்க வேண்டும். ''முழுக்க ஈழ விடுதலை தவறு என்று சொல்ல மாட்டோம். ஈழ விடுதலை இயக்கத்தை ஒழித்துவிட்டால் சிங்கள பேரினவாதம் அடுத்து முஸ்லீம்கள் பக்கம் பாயும்'' இவ்வாறெல்லாம் இன்றைக்கும் ஈழத்திலே இருக்கக் கூடிய முஸ்லீம் கள் பலரும் அறிக்கை விடுகிறார்கள். இன்றைக்கு தனிமைப்பட்டு போய்விட்டோம் என்பதை பல காரணங்களினால் உணர்கிற புலிகள் சொல்கிறார்கள், ''நாங்கள் முஸ்லீம்களுக்கு இப்படி ஒரு தேதி குறிப்பிட்டு ஈழத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று சொன்னது தவறுதான்.'' தேவையை ஒட்டி அவ்வப்பொழுது செய்துக் கொள்வது அல்ல சுயவிமர்சனம். மாறாக, ஒரு முழுமையான, நேர்மையான மீள் ஆய்வு தேவை.

பிரபாகரனையும், அவரைச் சுற்றியுள்ள ஒரு சிலரையும் தவிர யாரையும் அவர்கள் நம்பவில்லை. இந்திரா காந்தியை சோசலிஸ்டு என்று அறிக்கை விட்டதிலிருந்து. சிங்கள சிவிலியன்களைக் கொன்று தெருக்களில் வீசி சிங்கள மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியது, ரஜனி திரணகம போன்ற ஈழ ஆதரவு சக்திகளை புலிகள் மீது விமர்சனம் வைத்தார்கள் என்பதற்காக படுகொலை செய்தது, காணாமல் போகச் செய்தது.... இப்படி, எவ்வளவு தவறுகள், எத்தனை சக்திகளை வீணடித்து உள்ளார்கள். எல்லோருமே சிங்கள இனவெறி ராணுவத்தால் கொலை செய்யப்பட்டவர்கள் அல்ல; புலிகளாலும் ஈழ ஆதரவு சக்திகள் பலர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். எண்ணிக்கையில் புலிகள் செய்தது குறைவாக இருக்கலாம், அவர்கள் அதிகமாக செய்து இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

இவை நமக்குக் காட்டுவது ஈழப் புலிகளிடையே சரியான அரசியல் தலமையில்லாமையை, சரியான ராணுவ போக்கு இல்லாமையை, யாரையும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்கிற சந்தர்ப்பவாத, அரசியல் நேர்மையற்ற அணுகுமுறையைத்தான்

நாம், சிங்கள இனவெறி ராணுவம், ஈழத் தமிழர்களைக் கொன்றொழிப்பதை எதிர்ப்போம், அதுதான் நம்முடைய முதல் முழக்கம். அந்த அடிப்படையிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய தமிழினவாதக் குழுக்கள் முதற்கொண்டு நேர்மையான சக்திகள் அனைவருடன் சேர்ந்து நிற்போம். ஆனால் புலிகள் ஒரு நேர்மையான மீளாய்வு செய்ய வேண்டும். ஈழத்தில் ஈழ விடுதலைக்காக நிற்கக் கூடிய ஜனநாயக சக்திகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய, இன்னமும் ஈழத்திற்குத் திரும்பி வந்து, சிங்கள எதிர்ப்பு போரில் பங்கேற்றுக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையுடன் இருக்கக் கூடிய புலம் பெயர்ந்த தமிழர்களை அனுமதிக்க வேண்டும் என்கிற ஒரு போக்கை புலிகள் மேற்கொள்ள வேண்டும். அப்படியில்லாமல், ஒன்று 'எங்களை ஆதரியுங்கள், அல்லது நீங்கள் எங்கள் எதிரி!' என்ற கண்ணோட்டம் ஈழத் தமிழ் மக்களை ஒன்று சேர்க்காது. இதைத்தான் நாம் திரும்பத் திரும்பச் சொல்கிறோம்.

ஈழம் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும். அந்த ஜனநாயகம் இல்லாமல், ஜனநாயகப் போக்கு இல்லாமல் சிங்கள இனவெறியை எதிர்த்து வெற்றி பெற முடியாது. புலிகள் தாழ் நிலையில் ஒரு கொரில்லாப் போரை எத்தனை ஆண்டு காலம் வேண்டுமானாலும் நடத்திக் கொண்டிருக்க முடியும். ஆனால் வெற்றி பெறுவதற்கு, ஈழத் தமிழர்கள் மத்தியிலே ஒரு ஜனநாயகப்படுத்தப்பட்ட ஒரு சமூக அமைப்பு வேண்டும். அதற்கு புலிகள் மத்தியில் ஒரு மீளாய்வு செய்யப்பட வேண்டும். புலிகள் மட்டுமல்ல இந்தியாவில் இருக்கக் கூடிய தமிழ் தேசிய இனவாதக் குழுக்கள் மத்தியிலும் கூட இப்படிப்பட்ட மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. எப்படிப்பட்ட சக்திகளை ஆதரித்தோம், யாரை நம்புவது, யார் துரோகம் செய்வார்கள் என்பதை மீளாய்வது செய்து, தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. பொடா சட்டத்தை ஆதரித்த வைகோ, மோடியினுடைய மதவெறிப் படுகொலைகளை ஆதரித்த வைகோ, ஆர்.எஸ்.எஸ்.காரரர்கள் கன்னியாஸ்திரிகளை பாலியல் வன்புணர்ச்சி செய்தபோது, ''அவர்கள் செய்திருக்க மாட்டார்கள், வேறு யாராவது செய்திருப்பார்கள்'' என்று அறிக்கை விட்டு, கன்னியாஸ்திரிகள் பாலியல் பலாத்காரம் செய்யப்படுவதை ஆதரித்த



படிப்பகம்

www.padippakam.com

ராமதாஸ் இவர்களையெல்லாம் பற்றி புலிகளும், தமிழ் தேசிய இனவாதக் குழுக்களும் மீளாய்வு செய்ய வேண்டும்.

ஈழ விடுதலைக்கு எதிராய் இருப்பது ஏகாதிபத்திய உலகமயமாக்கம் ஆகும். அதை ஏற்கும் எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து ஈழ விடுதலையை எதிர்க்கிறார்கள். ஆக, ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தை எதிர்க்காத எவராலுமே ஈழ விடுதலையை ஆதரிக்க முடியாது. அப்படிப்பட்ட ஆதரவு வைகோவினுடையதைப் போல, ராமதாஸினுடையதைப்போல போலியானதாக இருக்கும். ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தை ராமதாஸ் எதிர்க்கிறாரா, அன்புமணி எதிர்க்கிறாரா, வைகோ எதிர்க்கிறாரா, கருணாநிதி எதிர்க்கிறாரா, ஜெயலலிதா எதிர்க்கிறாரா, யாருமே எதிர்க்கவில்லை. ஏகாதிபத்திய உலகமயமாக்கத்திற்காக நிற்கக்கூடிய பன்னாட்டு நிறுவனங்கள் ஈழத்தில் முதலீடு போட்டு, இலங்கையிலே முதலீடு போட்டுள்ளன, தம்முடைய சுரண்டலை நீடிக்க வேண்டும் என்று விரும்புகின்றன. ஈழத்தில் இருக்கக் கூடிய மொத்த கோக் விற்பனை உரிமத்தையும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் ஏற்று நடத்துகிறார் என்று ஈழத்திலிருந்து வந்த ஒரு தோழர் சொல்கிறார். கோக்கினுடைய மொத்த விற்பனையை, விடுதலைப் புலிகளுக்கு தொடர்ந்து நிதி கொடுக்கக்கூடிய, துணை நிற்கக்கூடிய ஒருத்தர் செய்து வருகிறார்.

ஒரு தேசிய இன விடுதலை என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பை தனக்குள் கொண்டதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது புரட்சிகரமானதாக இருக்க முடியும். முதலில் இருந்து நாம் சொல்கிறோம், ஏகாதிபத்திய எதிர்ப்பிலே எந்தளவுக்கு ஊன்றி நிற்க முடிகிறது என்பதுதான் இன விடுதலைக் கோரிக்கைக்கு ஒரு அளவுகோல் ஆகும். உள்நாட்டிலே ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் எந்தளவுக்கு ஜனநாயகம் பேணப்படுகிறது என்பது இன விடுதலையின் மீது காட்டும் விசுவாசத்தின் உறுதிக்கு ஒரு அளவுகோல். இந்த அம்சங்கள் புலிகளிடம் இல்லை என்கிற ஒரு விமர்சனத்தின் மூலமாகத்தான் ஈழப் புலிகளினுடைய நடவடிக்கைகளைப் பார்க்க முடியும். மாறாக, ''இப்போதைக்கு ஈழத் தமிழர்களைக் காக்கும் ஒரே சக்தி புலிகள். எனவே புலிகளைப் பற்றி பேசக் கூடாது, புலிகள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்'' என்று சொல்வதை ஏற்றுக் கொள்ள இயலாது. 2002 ஒப்பந்தத்திற்கு முன்பாக ஆண்டன் பாலசிங்கம் ஒரு அறிக்கை விடுகிறார். அதில், சுயநிர்ணய உரிமைக்கே ஒரு புது விளக்கம் கொடுக்கிறார்.



படிப்பகம்

தன்னாட்சியுடன் கூடிய ஒரு சுயநிர்ணய உரிமை என்று சொல்கிறார். 2002 அறிக்கையிலே ஆண்டன் பாலசிங்கம், பிரபாகரன் இவர்கள் எல்லாருமே 'ஒன்றுபட்ட இலங்கையை ஏற்றுக் கொள்கிறோம், தனி ஈழத்தை நாங்கள் கைவிடுகிறோம்' என்று பூடகமாக, புதுப் புது விளக்கமாக சொல்கிறார்கள். தனி ஈழத்தை அவர்கள் கைவிட்டதே யில்லை என்று இந்தியாவில் இருக்கக்கூடிய தமிழினவாதக் குழுக்கள் வேண்டுமானால் சொல்லலாம்; ஆனால் புலிகள் அப்படியில்லை.

தனி ஈழம்தான் தீர்வு என்பது வரலாற்றால் தீர்மானிக்கப்பட வேண்டியது. சுயநிர்ணய உரிமை என்பது ஒரு ஒடுக்கப்படும் வர்க்கம், இனம் ராணுவ ரீதியாக பலம் பெற்று அறிவித்துக் கொள்வது மட்டும் இல்லை, ஒரு இனம் ராணுவ ரீதியாக பலம் பெறுவதன் மூலம் மட்டும் ஒரு தனிதேசம், சுதந்திரமான ஒரு தேசம் என்று சொல்வது இன்றைய சர்வதேச நிலையிலே சாத்தியமில்லை. அதற்கு சர்வதேச சமூகத்தில் குறைந்த பட்சம் எல்லா நாடுகளின் அரசுகள் இல்லாவிட்டாலும், அந்தந்த நாட்டு மக்கள் மத்தியிலே நெருக்குதல் தரக் கூடிய அளவுக்கு ஆதரவு இருக்க வேண்டும்.

ஈழத் தமிழர்கள் படுகொலையை, சிங்கள இனவெறித் தாக்குதல்களை எதிர்ப்போம் என்பது முதல் முழக்கமாக இருக்கின்ற அதேசமயத்தில், புலிகளும் இன்று ஈழத்தில் இருப்பவர்களும் அதனை மீளாய்வு செய்து ஈழ சமூகத்தை ஜனநாயகப்படுத்துதல் தேவை. ''ஜனநாயகத்தை பற்றி இப்பொழுது பேசாதே, இனப் பிரச்சினையைப் பற்றி பேசு. இப்பொழுது ஜனநாயகம் எப்படி சாத்தியம்.'' இதுதான் நமக்கு சொல்லப்படுகிற பதில். ஆனால், இன விடுதலையை அடைவதற்கே, அதற்கான சக்திகளைத் திரட்டுவதற்கே அந்த இனத்தின் மத்தியில் ஜனநாயகம் தேவை. இதைத்தான் திரும்பத் திரும்ப நாம் சொல்கிறோம். இல்லையென்றால் திரும்பத் திரும்ப பல தலைமுறைகளை இழக்க வேண்டி வரும். ஏற்கெனவே ஒரு தலைமுறையை இழந்தாகிவிட்டது, நட்பு சக்திகளை இழந்தாகி விட்டது. இன்னொரு தலைமுறை திரட்டப்படுகிறது. இந்தத் தலைமுறையும் போன பிறகு என்ன ஆகும்?

எனவேதான், பிரபாகரன் போய் விட்டால் ஒன்றும் கிடையாது என்று குறி வைக்கிறது, சிங்கள இனவெறி அரசு. பிரபாகரன் போய் விட்டால் எல்லாம் போய்விடும் என்பதை நாம் ஏற்கவில்லை. எந்தவொரு விடுதலைக்கான இயக்கமும் சரி சித்தாந்தத்தை, தத்துவத்தை, அரசியலை ஆணையில் வைக்க வேண்டும். புலிகளோ ராணுவத்தை ஆணையில் வைத்தார்கள், துப்பாக்கியை ஆணையில்



படிப்பகம்

www.padippakam.com

வைத்தார்கள். தனிநபர் துதியை முன்னிறுத்தினார்கள். அதற்கு மாறாக, ஈழ மக்களை விடுதலை செய்ய வேண்டுமானால் அதற்கான சித்தாந்தம் என்ன, நடைமுறை என்ன, விடுதலைக்கு எதிரிகள் யார் நண்பர்கள் யார் என்பதை முன்நிறுத்த வேண்டும்.

''பிரபாகரன் பத்து கோடி தமிழர்களுக்கும் தலைவன், ராணுவ ரீதியில் மட்டுமல்ல, அரசியல் ரீதியிலும் இவர்தான் தலைவர்'' என்கிறார்கள். இறந்து போன **சாலை. இளந்திரையன்** ஒரு கவிதையில் ''சங்க காலத்து வீரர்களை நினைவுபடுத்துகிறார், இவர்'' என்று எழுதினார். இப்படியெல்லாம் துதி பாடினார்கள். தலைமையினுடைய சித்தாந்தத்தை தூக்கி நிறுத்தி, அந்த ''தலைமையினுடைய தத்துவம் இவ்வளவு தெளிவாக இருக்கிறது, சரியாக இருக்கிறது, யாரிடமும் ஏமாறவில்லை, யார் பின்னாடியும் போகவில்லை, எல்லா சக்திகளையும் அரவணைத்து போகிறார்'' என்று யாரும் எழுதவில்லை. தனி நபர் துதியே முன் நிற்கிறது. பத்து கோடி தமிழர்களின் அரசியல், ராணுவத் தலைவர் என்பவர் எப்படி இருக்க வேண்டும்?

சமரசமின்றிப் போரிடவும் வேண்டும்; அவசியமான போது, போரை நிறுத்திக் கொண்டு பேச்சு வார்த்தைக்கும் தயார் என்று துணிவுடன் போகவும் வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியம் நாபாம் குண்டு போட்டு வியாட்நாமை அழிக்கும் போது கூட ஹோசிமின் பாரிசில் பேச்சு வார்த்தைக்குத் தயாராக இருக்கிறார். அதுதான் அரசியல். ஹோசிமின் வியட்நாம் விடுதலைப் போராட்டத்தினுடைய தலைவர். வட வியட்நாமினுடைய அதிபராக இருக்கக் கூடியவர். ஆயினும், பேச்சுவார்த்தைக்கு எந்த நிலையிலும் தயாராக இருக்கிறார். ஏனெனில் அரசியலுக்கு அது தேவையாக இருக்கிறது. சியாங் கே சேக் உடன் பேச்சுவார்த்தைக்குப் போகிறேன் என்று மாவோ நிற்கிறார். அவருடைய தகுதி, அல்லது அவருடைய மேலாண்மை அங்கு குறைந்து போய் விடுவதில்லை. அவருடைய ஆளுமை அங்கு குறைந்து போய் விடவில்லை. இத்தகைய அரசியல் விவேகம் புலிகளிடமும் அவர்களின் தலைவரிடமும் இல்லை.

போரைத் தொடர்ந்து நடத்துவது அல்லது பேச்சுவார்த்தைக்குப் போவது - சமரசத்தை அடைவது, நட்பு சக்திகளிடம் சேர்வது, எதிரிகளிடம் பேசுவது போன்றவற்றை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், புலிகளின் அணுகுமுறை அவற்றுக்கு மாறாக இருந்ததை விமர்சிக்கிறோம். 2002-ல் புலிகள் போர் நிறுத்தம் செய்தது தவறு



படிப்பகம்

www.padippakam.com

என்று நாம் எழுதவில்லை. ஆனால் போர் நிறுத்தத்திற்கான அவசியம், அதில் புலிகள் பின்பற்றிய அனுகுமுறை தவறு என்று சொன்னோம். 1991-லே சந்திரிகாவுடன் ஒரு பேச்சுவார்த்தைக்குப் போனது தவறு என்று நாம் சொல்லவில்லை. அன்றைய சூழலில், இலங்கை, சிங்கள மக்கள் மத்தியிலேயே ஒரு பிளவு ஏற்பட்டிருந்தது. இரண்டு பிரதான கட்சிகளையும் நிராகரித்து விட்டு, ரணில் விக்கிரமசிங்கேயையும் நிராகரித்து விட்டு, கூட்டணி கட்சிதான் ஜெயிக்க முடியும் போர் நிறுத்தம் பேச்சு வார்த்தைக்கு முன் வந்தவர் சந்திரிகா என்று அவரைத் தேர்ந்தெடுத்தார்கள், இலங்கை மக்கள். அப்போதும் அதன் பிறகும் வந்த அரசியல் நிலைமைகளைப் புலிகள் எப்படி பயன்படுத்திக் கொண்டார்கள்?

ராஜபக்சே ஆட்சிக்கு வந்ததற்கு புலிகள்தான் முக்கியமான காரணம்; ரணில் தோற்று போனதற்கும், ராஜபக்சே ஆட்சிக்கு வருவதற்கும் மிக முக்கியமான காரணமாக புலிகளின் அரசியல் அமைந்தது. புலிகளின் அரசியல் முடிவுகள் எல்லாம் தவறாகப் போயின. அரசியல் என்பது நேர் கோட்டு பாதையில் செல்வது இல்லை. நெளிவு சுழிவு ஆனது. அதில் சித்தாந்தத்தில், அரசியலில், கொள்கையிலே ஒரு உறுதி இருக்க வேண்டும்.

இன்றைய சூழலில், சிங்கள இனவெறி ராணுவத்தினுடைய ஈழ அழிப்புப் போரை நிறுத்துவது, அதனை எதிர்ப்பது என்பது முதன்மையான நமது முழக்கம், கோரிக்கை. புலிகளைப் பொறுத்த வரை, போராளிகளைப் பொறுத்தவரை ஒரு நேர்மையான மீளாய்வு வேண்டும். ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு ஜனநாயகப்படுத்தப் பட்ட சூழலை உருவாக்க வேண்டும். உலகம் முழுக்க உள்ள ஏகாதிபத்திய உலகமயமாக்கத்திற்கு எதிரான இயக்கத்தின் ஒரு பகுதியாக ஈழ விடுதலை இயக்கம் அமையவேண்டும் என்கிற முறையில், உலக மக்களிடையே ஆதரவைத் திரட்டுவதைச் செய்ய வேண்டும். இனவாதிகள் எண்ணியதைப்போல பிழைப்புவாதச் சக்திகளினுடைய ஆதரவைத் திரட்டி மறைமுகமாக, போலியான முறையிலே ஏதோ ஆதரவு இருப்பது போல மக்கள் மத்தியிலே கருத்தை உருவாக்கி, மக்கள் ஆதரவைப் பெற்றுவிட முடியாது என்பதுதான் நம்முடைய இறுதியான நிலைப்பாடு.

★★★



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இன விடுதலையை அடைவதற்கே, அதற்கான சக்திகளை திரட்டுவதற்கே அந்த இனத்தின் மத்தியில் ஜனநாயகம் தேவை. இல்லையென்றால் திரும்ப திரும்ப பல தலைமுறைகளை இழக்க வேண்டி வரும். ஏற்கனவே ஒரு தலைமுறையை இழந்தாகிவிட்டது, நட்பு சக்திகளை இழந்தாகி விட்டது.

■

பிரபாகரன் போய்விட்டால் ஒன்றும் கிடையாது என்று அங்கு குறிவைத்தான் சிங்கள இனவெறியன். பிரபாகரன் போய்விட்டால் எல்லாம் போய்விடும் என்பதை நாம் நம்பவில்லை.

■

எந்தவொரு விடுதலைக்கான இயக்கமும் சரி, சித்தாந்தத்தை, தத்துவத்தை, அரசியலை ஆணையில் வைக்க வேண்டும். புலிகளோ ராணுவத்தை ஆணையில் வைத்தார்கள், துப்பாக்கியை ஆணையில் வைத்தார்கள். தனிநபர் துதியை முன்னிறுத்தினார்கள். அதற்கு மாறாக, ஈழ மக்களை விடுதலை செய்ய வேண்டுமானால் அதற்கான சித்தாந்தம் என்ன, நடைமுறை என்ன, விடுதலைக்கு எதிரிகள் யார் நண்பர்கள் யார் என்பதை முன்னிறுத்த வேண்டும்.

புதிய ஜனநாயகம்
வெளியீடு

ரூ. 30/-

படிப்பகம்